விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 22 திங்கட்கிழமை (04.02.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 047

# அரசுக்கு எதிரான ஆதாரங்களை ஜெனிவாவுக்கு அனுப்பத் திட்டம்!

## எதிர்க் கட்சிகள் இரகசிய காய்நகர்த்தல்

**(கொழும்பு), ஜெனிவா கூட்டத் தொடரின் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவிருக்கும் பிரேரணைக்கு வலுச் சேர்க்கும் வகையில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்திற்கு முக்கிய ஆதாரங்கள் அடங்கிய விசேட அறிக்கையொன்றை அனுப்பி வைப்பதற்கு எதிர்க் கட்சிகள் நடவடிக்கை எடுத்து வருவதாக நம்பப்படுகின்றது.**

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, இம் மாத இறுதியில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 22-வது கூட்டத் தொடர் ஆரம்பமாகின்றது. கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்த அறிக்கை அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கான முக்கிய பல ஆவணங்களைத் திரட்டும் நடவடிக்கைகளில் அவை தீவிரமாக ஈடு பட்டு வருவதுடன், சிரேஷ்ட சட்டத்தரணிகளுடனும் அரசியல் ஆர்வலர்களுடனும் இது குறித்து மந்திராலோசனை நடந்து வருகின்றன.

நல்லிணக்க ஆணைக்குழுப் பரிந்துரைகளின் அமுலாக்கத்தில் அரசின் இழுத்தடிப்புக்கள், வடக்கில் அதிகரித்துவரும் இராணுவப் பிரசன்னம், நாட்டில் சமகால அரசியல் நிலைவரம், அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த அறிக்கை தயாரிக்கப்டுகின்றது.

இது தொடர்பில் இவ்வாரம் இடம்பெறவிருக்கும் பொது எதிர்க் கட்சிகளின் முக்கிய சந்திப்பின் போது தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் அறிய முடிகின்றது. அத்துடன் இந்த அறிக்கையை தயார் செய்வதற்கான நடவடிக்கைகளில் அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்து வதற்கான அமைப்பும் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## சுதந்திர தினத்துக்காக திருமலை விழாக்கோலம்

(திருகோணமலை)

நாட்டின் 65ஆவது சுதந்திர தினத்தின் தேசிய வைபவம் திருகோணமலை நகரில் இன்று திங்கட்கிழமை நடத்துவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன.

முப்படைகளின் தளபதியும் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் எழில்மிகு தாய் நாடு சௌபாக்கியமான நாளை நாள் என்னும் தொனிப்பொருளில் பிரட்ரிக் கோட்டைக்கு முன்பாகவுள்ள கடற்கரையோரத்தில் சுதந்திரதின வைபவங்கள் நடைபெறவுள்ளன.

1953ஆம் ஆண்டுக்கு பின்னர் திருமலையில் இரண்டாவது முறையாக சுதந்திர தினத்தின் பிரதான வைபவம் நடத்தப்படவிருக்கிறது. 30 வருடகால யுத்தம் நிறைவுக்கு கொண்டு வந்ததன் பின்னர், கிழக்கு மாகாணத்தில் முதல் தடவையாக சுதந்திர தினத்தின் பிரதான வைபவம் நடத்தப்படுவதால் திருகோணமலை நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது. நகர் முழுவதும் தேசியக் கொடிகளாலும் வர்ணக் *(19ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கை தொடர்பில் இந்தியா எந்த தீர்மானமும் எடுக்கவில்லை

### டில்லி செய்திகள் தெரிவிப்பு

(புதுடில்லி)

ஜெனிவாவில் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் வரப்படவுள்ள இலங்கை மீதான புதிய தீர்மானம் தொடர்பாக இந்தியா இதுவரை எவ்வித முடிவையும் எடுக்கவில்லை என புதுடில்லி செய்திகள் தெரிவிப்பதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 22ஆவது கூட்டத் தொடரில், இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல் தொடர்பில் இலங்கைமீது மற்றொரு தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரப் போவதாக கொழும்பில் வைத்து அறிவித்திருந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் *(19ஆம் பக்கம் பார்க்க)*

## கடலில் தத்தளித்த 138 பேர் மீட்பு!



அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒலுவில் கடல் பிரதேசத்தில் மீன்பிடி படகொன்றில் தத்தளித்த பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட ஆசிய நாடுகளைச் சேர்ந்த 138 பேர் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்டவர்களில் 127பேர் பங்களாதேஷையும், 11 பேர் பர்மாவைவும் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 3 பேர் பெண்களும், சிறுவர்கள் மூவரும் உள்ளடங்கியுள்ளதாகவும், பங்களாதேஷ் பிரஜை ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் சட்டவிரோதமான முறையில் படகுமூலம் அவுஸ்திரேலியா செல்ல *(20ஆம் பக்கம் பார்க்க)*

## கண்காணித்து வரும் ஐரோப்பிய ஒன்றியம்!

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்மொழியப்படவுள்ள பிரேரணையின்போது செயற்படும் விதம் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் இன்னும் தீர்மானிக்கவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி பேனாட் சாவேஜ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடு கள் மத்தியில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை நடைமுறைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கண்காணித்து வருவதாகவும் சாவேஜ் தெரிவித்துள்ளார். (செ-11)

## ரிஷானா வீட்டிற்கு ஷிராந்தி விஜயம்

.சவுதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட இலங்கை பணிப்பெண் ரிஷானா நபீக்கின் மூதூரில் உள்ள வீட்டிற்கு நாட்டின் முதற் பெண்மணியும் ஜனாதிபதியின் பாரியாருமான ஷிராந்தி ராஜபக்ஷ நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் விஜயம் செய்துள்ளார்.

மூதூரிலுள்ள ரிசானா நபீக்கின் வீட்டிற்கு சென்ற ஷிராந்தி ராஜபக்ஷ ரிசானாவின் குடும்ப நலன்களை விசாரித்தார்.

ஷிராந்தி ராஜபக்ஷவின் மூதூருக்கான விஜயத்தின் காரணமாக குறித்த பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அரசு தீய நோக்கங்களை கைவிட ம.உரிமை ஆணைக்குழு வலியுறுத்த வேண்டும்

### தமிழ்க் கூட்டமைப்பு கோரிக்கை

தென்னாபிரிக்க விஜயத்திற்கும் இலங்கை அரசாங்கத்துடன் நாம் மேற்கொண்ட பேச்சு வார்த்தைக்கும் தொடர்பில்லை. இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் தீய நோக்கங்களை கைவிடச் செய்யவும் இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தும் வகையில் ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

கூட்டமைப்பின் தென்னாபிரிக்க விஜயம் தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக் குழு ஒன்று தென்னாபிரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளது.

முரண்பாடு தீர்த்தல் மற்றும் நல்லிணக்கம் பற்றிய தமது சொந்த அனுபவங்களை பகிர்ந்து கொள்ள தென்னாபிரிக்கா மற்றும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆகியன மேற் கொண்ட முன்னெடுப்புக் காரணமாகவே இத்தூதுக் குழு தென்னாபிரிக்காவிற்கு சென்றுள்ளது.

தென்னாபிரிக்க வெளிவிவகார பிரதி அமைச்சர் தலைமையிலான தூதுக்குழுவொன்று 2011 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தபோது இவ்வாய்ப்பை இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் வழங்க முன்வந்தபோதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இதனை ஏற்றுக்கொண்டது.

இலங்கை *(19ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# இருவேறு விபத்துக்கள் ஒருவர் பலி.53 பேர் காயம்

(கொழும்பு)

இருவேறு விபத்துக்களில் ஒருவர் பலியான துடன், 53 பேர் காயமடைந்துள்ளனர். கொத் மலையிலும் கம்பளையிலும் நேற்று ஞாயிற் றுக்கிழமை இவ்விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

பூண்டுலோயாவிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பஸ் வண்டி யொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை விபத்துக்குள்ளானதில் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

தலவாக்கலை நோக்கிப் பயணித்துக் கொண்டி ருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்த மான பஸ் வண்டியொன்றுடன் தனியார் பஸ் வண்டி யொன்று மோதிய நிலையில் தனியார் பஸ் வண்டி சுமார் 30 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக் குள் ளான தாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் புஸ்ஸல்லா, கொத்மலை மற்றும் கம்பளை வைத்தியசாலை களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை கம்பளை, பேரவிலப் பகுதியில் நேற்று ஞாயிற் றுக்கிழமை காலை தனியார் பஸ் வண்டியொன்று பள்ளத்தாக்கில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 23 பேர் காயமடைந் துள்ளனர். இவ் விபத்தில் காயமடைந்தவர்கள் கம் பளை மற்றும் நாவலப்பிட்டிய வைத்தியசாலை களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஏ-8)


## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளிப் பகுதியில் இரண்டு பரப்பில் அமைந்த வீடு விற் பனைக்கு உண்டு.

தொடர்பு: 0776181216

(1633)






## பிள்ளையார் இன்

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.

25% கழிவு

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 100/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 70/-

இலவசமாக இஞ்சி சோடா வழங்கப்படும். (இங்கு உணவருந்துபவர்களுக்கு மட்டும்)

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


# வீட்டுக் கிணற்றிலிருந்து வெளியாகும் புழுக்களும் ஒருவகைத் திரவமும்!

## பூநாறி ஒழுங்கையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பூநாறி ஒழுங்கையில் உள்ள வீடொன்றின் கிணற்றிலிருந்து புழுக் கள் மற்றும் ஒயில் போன்ற ஒருவகை திரவம் என்பன வெளிவந்து கொண்டிருப்பதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவுகின்றது.

குறித்த வீட்டின் கிணற்றிலிருந்து 2 மாத காலமாக இவ்வாறு திரவம், புழுக்கள் என்பன வெளிவந்து கொண்டிருப்பதாகவும் துர்நாற் றம் வீசுவதாகவும் வீட்டின் உரிமையாளர் தெரி வித்தார்.

இதனால் தாம் தண்ணீரினை அருகில் இருக்கும் வீட்டிலிருந்தே பெற்றுக்கொள்வ தாகவும் அவர் கவலையுடன் கூறினார்.

இது தொடர்பில் யாழ்.மாநகர சபையின் சுகாதார பிரிவினர், சுகாதார சேவைகள் பணி மனை என்பவற்றுக்கு அறிவித்தும் இரண்டு மாதகாலமாகியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை என கூறினார்.

மேலும் நீர்ப்பாசனத்திணைக்களம் மற் றும் யாழ்.அரச அதிபருக்கும் இது தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப் பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது தான் மாநகர சபைக்கு அறிவித்துள்ளதாக வும் கூறினார்.

இதனை அப்படியே விடுவதனால் அப் பகுதியிலுள்ள ஏனைய கிணறுகளிற்குள் ளும் பரவக் கூடும் எனவும் தொற்றுநோய் கள் ஏற்படக் கூடும் எனவும் அச்சம் வெளி யிடப்படுகிறது. (ஏ-4)


## பொருளியற் கல்லூரி

நாவலர் ரோட், யாழ்ப்பாணம். | கே.கே.எஸ். ரோட், இணுவில்

### A/L DAY CLASS

கலை, வர்த்தகப் பிரிவு

திங்கள் முதல் வெள்ளி வரை.

நாளை ஆரம்பம் 05.02.2013 (செவ்வாய்) 7.00 A.M.

| DAY | யாழ்.நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| ECO | வரதராஜன் | மகேந்திரன் |
| ACC | முகுந்தன் | முகுந்தன் |
| B/St | முரளி | முரளி |
| English | நிஷாந்தன் | நிஷாந்தன் |
| கலைப்பிரிவு இரு இடங்களிலும் | | இதேநாளில் |

- நீங்கள்நன்கு அறிந்த வழமையான ஆசிரியர் குழுவினால்.
- உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.


# குருநகர் இளைஞனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கடைக்குச் சென்ற இளைஞன் ஒருவ ரினை காணவில்லை என யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளது.

குருநகரினைச் சேர்ந்த மட்ணன் பிரதீ பன் (வயது 17) என்ற இளைஞரினை காண வில்லையென்று முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

இம் முறைப்பாட்டினை பிரஸ்தாப இளை ஞரின் சகோதரனே பதிவு செய்துள்ளார். கடந்த 29ஆம் திகதியன்று கடைக்கு வேலை யின் நிமிர்த்தம் குறித்த இளைஞர் சென்று வருவதாக வீட்டாரிடம் கூறி விட்டு சென்றுள் ளார்.

எனினும் மூன்று நாட்கள் கடந்த நிலை யிலும் திரும்பாததனால் அவரது சகோதரன் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் இரவு முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசா ரணையினை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது. (ஏ-4)


## 'ENGLISH in ACTION'

(i) Basic Level (ii) Higher Level

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

(1637) 773 212 711


# ரயில் மோதி இளைஞன் பலி

(கொழும்பு)

ரயில் மோதுண்டதில் இளைஞன் பலியானதுடன் மற்றும் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். கொள்ளுப்பிட்டிக்கும் பம்பலப்பிட்டிக்கும் இடையிலான ரயில் தண்டவாளத்திலேயே இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள் ளது.

காலியில் இருந்து கொழும்பை நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டே குறித்த இளைஞன் பலியாகியுள்ளார். வெல்லம்பிட்டி யைச் சேர்ந்த இளைஞனே இவ்வாறு பலியாகியுள்ளதாகவும் படுகாய மடைந்த இருவரும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வும் பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-8)


## 50வது திருமண நிறைவு நாள் வாழ்த்துக்கள்.

04.02.2013

திரு. வே. சிவப்பிரகாசம்

திருமதி. சி. மகேஸ்வரி

அன்பிற்கு ஓர் இலக்கணமான அன்னையும்
அறிவிற்கு ஓர் இலக்கணமான தந்தையும்
இல்லறத்தில் இனிதே இணைந்து
ஐம்பதாவது அகவை காணும் இந்நாளில்
இன்னும் பலகாலம் இன்புடன் வாழ்கவென
அகம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/2336)


# யாழ்.சிறையிலிருந்து 10 கைதிகளுக்கு விடுதலை

(யாழ்ப்பாணம்)

சுதந்திரதினத்தினை முன்னிட்டு யாழ்.சிறைச் சாலையிலிருந்து 10 கைதிகள் விடுதலை செய் யப்படவுள்ளதாக சிறைச்சாலையின் பிரதம அதிகாரி எஸ்.இந்திரகுமார் தெரிவித்தார்.

கைதிகளினை விடு தலை செய்யும் நிகழ்வு இன்றுகாலை 9 மணிக்கு யாழ். சிறைச்சாலை யில் இடம்பெறவுள்ள தாகவும் அவர் கூறி னார்.

விடுதலை செய்யப் படும் 10 சிறைக் கைதி களும் ஜனாதிபதியின் பொது மன்னிப்பு பேரி லேயே விடுதலை செய் யப்படவுள்ளார்.

ஒரு பெண் மற்றும் 9 ஆண்கள் உட்பட 10 பேர் இவ்வாறு விடுவிக் கப்படவுள்ளனர்.

சிறு குற்றங்கள் புரிந்து நீதி மன்றங்களி னால் தண்டனை வழங் கப்பட்ட கைதிகளையே இவ்வாறு ஜனாதிபதி யின் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் நாட் டின் 65ஆவது ஆண்டு சுதந்திரதினம் என்பது குறிப் பிடத்தக்கது. (ஏ-4)


# மரண அறிவித்தல்

## செல்வராசா சிறிநாதன்



சிறப்பாவளை, கொற்றாவத்தையைப் பிறப் பிடமாகவும், இலகடி உடுப்பிட்டியை வசிப்பிட மாகவும் கொண்ட செல்வராசா சிறிநாதன் 26.01.2013 சனிக்கிழமையன்று டோகாவில் அகால மரண மானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா-தவ தேவி ஆகியோரின் அன்பு மகனும், நிமாலினி யின் (சமுர்த்தி உத்தியோகத்தர், கரவெட்டி) அன்புக் கணவரும் தர்ஷிகாவின் பாசமிகு தந்தையும், மகேந் திரராசா-யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மரு மகனும், சிவகுருநாதன், யோகநாதன், ஜெகநாதன், லிங்கம், ஜெகதீஸ்வரி, ஜெகமதி, ஜெயந்தி, ஜெயமலர், ஜீவமதி ஆகியோரின் அருமைச்சகோதரனும், இராஜேஸ்வரி, சாந்தி, தவம், ராஜினி, செல்வக் கதிரமலை, இராசேந்திரம், இளங்கோவன், விஜயகுமார், சுதர்சன், ஜெயந்தன் (மருந்தாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை), சுஜாந்தினி (உத்தியோகத் தர், பிரதேச செயலகம், கரவெட்டி), லிஜிதா ஆகியோரின் மைத்துனரும், அனிதன், செந்தூரன் (டோகா), தாரகா ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மல்லந்தறை உடுப்பிட்டியில் உள்ள இல்லத் தில் 04.02.2013 இன்று காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
-குடும்பத்தினர்

(சி-2335)



- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

24 வருட அனுபவம்

2013 February- 2013 July

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

(சி/2331) விண்ணப்ப முடிவுத் திகதி : 28.02.2013


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அறியாமை சுகம்

இவ்வுலகில் உண்மையாகவே வேதாந்தம் சொல்பவர்கள் இருக்கிறார்கள். உள்ளொன்று வைத்து வெளியிலே வேதாந்தம் கூறுபவர்களும் உள்ளனர்.

ஒரு ஊரிலே வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் வியாபாரத்திலே பெரிய புள்ளி. ஆனால், யாருக்கும் எந்த உதவியும் செய்யமாட்டான். மகா கஞ்சன். எச்சில் கையால் காகம் விரட்டாதவன்.

எச்சில் கையென்ன.... ஈரக் கையைக் கூட உதறமாட்டான். அப்படிப்பட்ட கசவாரம்.

ஒருநாள் அவன் வாழ்ந்து கொண்டிருந்த ஊருக்கு ஒரு முனிவர் வந்து கொண்டிருந்தார். அவரது வருகையோ வருடத்தில் ஒரு தடவையாக அமையும். ஓரிரு நாட்கள் தங்கி நிற்பார். அதன்பின் போய் விடுவார்.

அந்த முனிவர் வரும் போதெல்லாம் இந்த மகாகஞ்சன் ஓடிப் போய் வரவேற்பான். தான் உலகறிந்த வேதாந்தி மாதிரி அவரிடம் பேசிக் கொண்டிருப்பான்.

“காயமே இது பொய் வெறும் காற்றடைத்த பை ” என்பான். “தர்மம் தலை காக்கும் ” இப்படியான பெரிய வார்த்தைகளைக் கூறுவான்.

“பணம் என்ன சேர் பணம்.. இன்று ஒருவன் கையிலே இருக்கும்; நாளை இன்னொருவன் கையிலே இருக்கும். எல்லாம் மாயம் என்றெல்லாம் புலம்பியடிப்பான்.

அந்த முனிவரும் இந்த வியாபாரி இப்படிச் சொல்வதைக் கேட்டவுடனே....

“ஏன் அப்படி கூறுகிறாய்? இப்போதுகூட நீ சரியென்றால் உனக்கு தீட்சை வழங்கி ஞானத்தைப் போதிக்கிறேன் ” என்றார்.

உடனே அந்த வியாபாரி என்ன சொன்னான் தெரியுமா?

“ஐயோ சுவாமி எப்படி முடியும். எனக்கோ சம்சார பந்தத்தில் இருந்து விடுபடும் நேரம் வரவில்லை. பிள்ளைகளோ சின்னஞ் சிறுசுகள். அவர்களுக்கெல்லாம் நல்லதொரு வாழ்க்கைத் துணையை ஏற்படுத்தி விட்டதன் பின் நீங்கள் கூறுவது போல் செய்யலாம் ” என்றான்.

“சரி ”யென்று கூறிவிட்டு முனிவர் அடுத்த வருடம் வந்தார். இவனும் வழக்கம் போல வேதாந்தம் பேசினான்.

“சரி... தீட்சை கொடுக்கிறேன்... வா ” என்றார்.

“பேரன், பேர்த்தியைப் பார்க்க வேண்டும். நீதிமன்றில் வழக்கு உள்ளது. இவ்வாறு கூறி தயங்க ஆரம்பித்தான்.

அனைத்தையும் கூறுவாய், ஆனால்... குடிப்பதற்கு தண்ணீர் கூட தரமாட்டாய்.

பின்னர் நீண்ட வருடங்கள் கடந்த நிலையில், மறுபடியும் அந்த ஊருக்கு முனிவர் வந்தார். வந்தவர் இவன் கடைக்கும் சென்றார்.

அங்கே அந்த வியாபாரி இருக்கவில்லை. அவனது மகன் தந்தையைப் போலவே அவரது பாணியில் எழுந்து ஓடி வந்து வரவேற்றான்.

“அப்பா எங்கே? ” என்று முனிவர் கேட்டார்.

“ஐயோ அதை ஏன் கேட்கிறீர்கள் சுவாமி! உங்களிடம் தீட்சை பெற வேண்டும் எனச் சொல்லிக் கொண்டே இருப்பார். அது நிறைவேறாமலே திடீரென ஒருநாள் நெஞ்சுவலிக்கிறதே என்று கூறியவாறு “பொட் ”டென போய்விட்டார்.– “இவ்வாறு புலம்பினான் பையன்.

இதைக் கேட்ட முனிவருக்கு சிரிப்பு வந்தது. “அவன் எங்கேடா போவான்? உனது தந்தை இங்கே தான் இருக்கிறார். இதோ வாலை ஆட்டியவாறு உன் காலடியிலேயே இருக்கிறார் பார் ” என்று நின்று கொண்டிருந்த நாயை சுட்டிக்காட்டினார்.

உடனே முனிவர் அந்த நாயின் தலையைத் தட்டி “பேசடா ” என்று கூறினார். அந்த நாய் வேதாந்தம் பேச ஆரம்பித்தது. காயமே இது பொய்– வெறும் காற்றடைத்த பை ”என்றது.

முனிவர் சொன்னார்; “அடேய்! இப்போதும் எதுவும் கெட்டுப் போகவில்லை. நீ விரும்பினால் தீட்சை தருகிறேன். அதன்பின் அழைத்துச் சென்று ஞானம் போதிக்கிறேன் வருவாயா?” என்று கேட்டார்.

உடனே நாய் உருவத்தில் இருந்த வியாபாரி சொன்னான்; “ஐயையோ! அதை ஏன் கேட்கிறீர்கள். நான் நிறைய சொத்துக்கள் இவ்வுலகில் சேகரித்து வைத்துள்ளேன். எனது பிள்ளைகள் அதனுடைய பெருமை தெரியாமல் இரவு பூராகவும் கதவைத் திறந்து வைத்து விட்டு தூங்குகிறார்கள். அதனால் இப்படியாக நாயாகப் பிறந்து இரவு பகலாக சுற்றி சுற்றி காவல் செய்கிறேன். எப்படி சுவாமி வர முடியும்?”

அறியாமையிலேயே சுகம் கண்டு இப்படி வாழும் நபர்களுக்கு எப்படி விடுதலை கிடைக்கும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# அரசின் உதவிகள் எமக்கு வேண்டாம்; சொந்த நிலத்தில் வாழ விடுங்கள்

## வலி-வடக்கு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசின் உதவிகள் எவையும் எமக்கு வேண்டாம். எம்மை எமது நிலத்தில் விடுங்கள். இவ்வாறு மீள் குடியேற்றப்படாமல் உள்ள வலி. வடக்கு மக்கள் எம்மிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஏ.ஜேசுதாசன் தெரிவித்தார்.

அவர் மீள்குடியமர்த்தப்படாத மக்கள் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக பல்லாயிரக்கணக்கிலான மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேற வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டனர். போர் முடிவடைந்து 3 வருடங்களாகியுள்ளது. இம்மூன்றாண்டு காலப்பகுதிக்குள் அரசு தமது மக்களினை அதாவது போரின் போது இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கு உரிய எவ்விதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

அவ்வாறு மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கும் எவ்விதமான உதவிகளும் அரசாங்கம் செய்து கொடுக்கவில்லை. மீள்குடியேற்றப்பட்ட இடங்களில் உதவிகள் செய்து கொடுக்கப்பட்டாலும் அவற்றால் எவ்வித பிரயோசனமும் ஏற்படுவதில்லை. குறிப்பாக வலித்தூண்டல் மீள்குடியேற்றத்தில் அங்குள்ள மக்களுக்கு இராணுவத்தினரால் 8 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. அவ் வீடுகள் யாவும் குறுகிய காலங்களிலேயே மோசமாக பாதிப்படைந்துள்ளன.

இதனைவிட மீள்குடியேற்றப்பட்ட இடங்களில் மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலையினையும் இராணுவத்தினர் ஏற்படுத்தியுள்ளனர்.

அரசினால் அமைத்து வழங்கப்பட்ட வீடு சீராக அமையப்பெறவில்லை. வாழ்வில் இராணுவத்தினரின் தலையீடு அதிகம் என்பவற்றினை காரணம் காட்டி வலித்தூண்டலில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் மீண்டும் முகாம் வாழ்க்கைக்கே சென்றுள்ளனர்.

தற்போது வலித்தூண்டல் பிரதேசம் பற்றைக் காடுகளால் சூழ்ந்து காணப்படுகிறது. மயிலிட்டி, தையிட்டி, குரும்பசிட்டி, பலாலி, காங்கேசன்துறை எனப் பல இடங்கள் தற்போதும் இராணுவத்தினரின் பிடிக்குள்ளேயே இருக்கின்றன.

உள்நாட்டிலும் சரி, சர்வதேச மட்டத்திலும் சரி இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் மீள்குடியமர்த்தப்பட்டு விட்டனர் என அரசு கூறி வருகின்றது. இது எந்த வகையில் உண்மையாகும்.

மீனவக் குடும்பங்களுக்கு போதிய வசதிகள் செய்து தரப்படாமையால் அவர்கள் தமது மீன்பிடித் தொழிலையே கைவிடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எமது நிலத்தில் எம்மை வாழ விடுங்கள், நாம் நாமாக முன்னேறுவோம் என அம்மக்கள் எம்மிடம் தெரிவிக்கின்றனர். முகாம் வாழ்க்கை எமக்கு நரகமாக இருக்கின்றது. எம் நிலத்தில் நாம் மீள் குடியேற வேண்டும் என அவர்கள் துடிக்கின்றனர்.

போராட்டம் வேண்டாம். போராடுவதற்[illegible] எமது உடம்பில் தெம்பு இல்[illegible]லை. எனவே, எம்மை எமது நில[illegible] மீள்குடியேற விடுமாறு அவர்க[illegible]ண்டும் மீண்டும் மன்றாட்டமா[illegible] கேட்கின்றனர் என்றார் அவர். (அ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 55 | 80-100 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 300 | 280 | 400 | 300 |
| தக்காளி | 80 | 110 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 40 | 40 |
| கோவா | 70 | 70 | 100 | 80 |
| கரட் | 130 | 110 | 200 | 160 |
| பூசணி | 40 | 30 | 50 | 50 |
| புடோல் | 50 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 50-60 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | [illegible]0-120 | 100 | 100-120 | 160 |
| பெரிய வெங்காயம் | [illegible]00 | 60 | 120 | 120 |
| பாகற்காய் | 80 | 120 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 70 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 160 | 140 |
| லீக்ஸ் | 120 | 120 | 160 | 160 |
| பீற்றூட் | 80 | 60 | 120 | 120 |
| கறிமிளகாய் | [illegible]00 | 240 | 200 | 200 |
| [illegible]கைக்காய் | 300 | 800 | -- | -- |
| [illegible]சி | 7[illegible] | 90 | 120 | 120 |
| [illegible]தம்புள்ளை | -- | 100 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 15-25 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 30-50 | 50 | 70 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 45 | 40-45 |
| இராசவள்ளி | 80 | 100 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 110-150 | 220 | 200 | 100 |

# இராசி பலன்

04.02.2013
(தை 22, திங்கட்கி[illegible])
சூரிய உதயம் காலை 6.2[illegible] மணிக்கு
நவமி பின்னிரவு 2.13 [illegible]வரை
விசாகம் பிற்பகல் 2.47 மணிவரை
இராகுகாலம் 8.05-9.35 மணிவரை
சுபநேரம் 12.35-2.05 மணிவரை
திருநீலகண்டர், தாயுமான[illegible] சுவாமிகள் குருபூசை.

**மேடம்** உடல் நலனில் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும், குடும்பத்தில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள்.

**இடபம்** செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், நண்பர்கள் மூலம் வளர்ச்சிகள் ஏற்படலாம், புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**மிதுனம்** தன்னம்பிக்கை அதிகரிக்கும், கைமாற்றாக வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும்.

**கடகம்** பெற்றோர் மீது பாசம் கூடும், கல்வி முன்னேற்றம் கருதி ஒரு தொகையைச் செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள்.

**சிங்கம்** தாயின் உடல் நலம் சீராகும், புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், சுப செய்திகள் வந்து சேரும் நாள், வாகன சுகமுண்டு.

**கன்னி** ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், நீண்ட நாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம், சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், பிறர் உதவியுண்டு.

**துலாம்** விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், சில விவாதங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், பண வரவு திருப்தி தரும், போசன சுகமுண்டு, வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழில் நலன் கருதி பயணங்கள் ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**மகரம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**கும்பம்** எதிர்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4-வது எரிபொருள் கிணற்றுக்கான அகழ்வுகள் ஆரம்பமாகின

இலங்கையின் மன்னார் கடற் பரப்பில் 2-ம் கட்ட எண்ணெய் அகழ்வின் நான்காவது எரிபொருள் கிணற்றின் அகழ்வு நடவடிக்கைகள் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகின என கெய்ன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கெய்ன் இந்தியா மற்றும் லங்கா நிறுவன தொடர்பாடல் தலைவர் கலாநிதி சுனில் பாரதி அகழ்வுப் பணிகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

கற்பிட்டி கடற்பரப்பில்இருந்து 22 கிலோமீற்றர் தொலைவிலேயே அகழ்வுப்பணிகள் இடம்பெறுகின்றன.

இக்கிணறுCLPL Wallago என பெயரிடப்பட்டுள்ளது. இக் கிணறு கடலிலிருந்து ஒரு கிலோமீற்றர் ஆழத்திலும் 3 கிலோமீற்றர் கடல் படுக்கையிலும் அமைந்துள்ளது. தர்க்கரீதியாக பார்க்கும்போது இக் கிணற்றில் எரிவாயு காணப்படு வதற்கான வாய்ப்புக்கள் நிலவுகின்றன.

எனி னும் அங்கு எண்ணெய் இல்லை எனக்கூற முடியாது. எண்ணெய் இருப்பதற்கான வாய்ப்புக்களும் காணப்படலாம் எனக் குறிப்பிட்டார்.

சிங்கப்பூரை தளமாகக் கொண்ட ட்ரான்ஸ் ஓஷன் நிறுவனத்தின் டிஸ்கவரர் செவன் சீஸ் என்ற கப்பலை பயன்படுத்தியே அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இக்கப்பல் 6,500 அடி ஆழம் வரையில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் வசதியைக் கொண்டுள்ளது.

நூற்றுக்கும் அதிகமான உறுப்பினர்களும் விசேட நிபுணர்களும் கப்பலில் தயார்நிலையில் உள்ளனர்.

அத்துடன் எண்ணெய் அகழ்வாராய்ச்சி பணிகளுக்கு 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இது வரை முதலீடு செய்யப்பட்டுள்ளது. இம் முதலீடு மேலும் அதிகரிக்கப்படலாம்.

600 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் முப்பரிமாணத் தரவுகள் மூலம் அதிர்வுகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டதுடன் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் இவ்வருட நடுப் பகுதியில் மேற்கொள்ள ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் அகழ்வுப்பணிகளுக்கு பயன்படுத்தப்படும் துளையிடும் கப்பல் முற்கூட்டியே கிடைத்தமையும், ஒருங்கமைப்பு நடவடிக்கைகள் மிகச்சிறந்த மட்டத்தில் காணப் பட்டமையுமேஅகழ்வு நடவடிக்கைகளை துரிதமாக ஆரம்பிக்க காரணங்களாக அமைந்தன.

கெய்ன் லங்கா மன்னாரில் மேற்கொண்ட முதலாவது கட்ட அகழ்வுப் பணிகளின் முடிவுக் கமைய இரண்டு கிணறுகளிலிருந்துஎரிவாயு கண்டெடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### கெய்ன் பங்குதாரர்களுக்கான செயலமர்வு

பங்குதாரர்களுக்கான கெய்ன் லங்கா ஏற்பாடு செய்திருந்த செயலமர்வொன்று கடந்த வாரம் கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்றது. பெற்றோலிய வள அபிவிருத்தி செயலக அதிகாரிகள், கடல்சார்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள், பாதுகாப்பு தரப்பைச் சேர்ந்த சிரேஷ்ட











உறுப்பினர்கள், ஏனைய அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இந்தச் செயலமர்வில் கலந்து கொண்டனர்.

அடுத்த கட்ட அகழ்வுத் திட்டங்கள் தொடர்பிலும் துளையிடுதல் நடவடிக்கை தொடர்பாகவும் கெய்ன் இந்தியா மற்றும் லங்கா நிறுவன தொடர்பாடல் தலைவர் கலாநிதி சுனில் பாரதி, கெய்ன் லங்காவின் வதிவிட முகாமையாளர் டெரான்ஸ் சுந்தரம், சிரேஷ்ட அதிகாரிகள் இச்செயலமர்வில் விளக்கமளித்திருந்தனர்.

இதன்போது மன்னாரில் இடம் பெறும்அகழ்வுகள்தொடர்பாககெய்ன் பிரதிநிதிகளும் பங்குதாரர்களும் தமது கருத்துக்களை பரிமாறிக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.




# 2012-ல் பணவீக்கம் 9.8 வீதத்தால் உயர்வு

2012 ஜனவரி மாதத்தில் இலங்கையின் பணவீக்கம் 9.8 வீதத்தால் உயர்வடைந்துள்ளதாகவும், சுமார் ஒருமாத காலத்துக்கு முன்னர் இந்த பெறுமதி 9.2 வீதமாக பதிவாகியிருந்ததாகவும்தொகைமதிப்புபுள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 168.6 புள்ளிகளிலிருந்து 170.0 புள்ளிகள் வரை அதிகரித்துள்ளது. 12 மாத கால சராசரியாக ஜனவரி மாதத்தில் பணவீக்கம் 8.1 வீதத்தால் அதிகரித்திருந்தாகவும், டிசெம்பர் மாதத்தில் இது 7.6 வீதமாகவும் பதிவாகியிருந்தாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு நேரடி முதலீடுகள்



கடந்த வருடத்தில் இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதிகரித்துள்ளதாக முதலீட்டுச் சபையின் புள்ளிவிபரத் தரவுகள் வெளிக்காட்டுகின்றன.

2011 ஆம் ஆண்டில் ஒரு பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக இருந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2012 ஆம் ஆண்டில் இரண்டு பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளன.

ஹொங்ஹொங், சீனா, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து உட்கட்டமைப்பு துறைகள், சுற்றுலா விடுதிகள் போன்றவற்றிற்கு அதிகளவு முதலீடுகள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விற்பனை டிப்ளோமா கற்கைநெறி

யூனிலீவர் நிறுவனமானது இலங்கை சந்தைப்படுத்தல் நிறுனத்துடன் இணைந்து (SLIM) தொழில் சார் விற்பனை டிப்ளோமாமாவை ஆரம்பித்துள்ளது.

யூனிலீவர் நிறுவன விநியோக வர்த்தக பங்குதாரர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் விற்பனைப் பிரதிநிதிகளுக்காக இந்த டிப் ளோமா பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய சுரித் பெரேரா, எமது வெற்றிக்கு விற்பனைப் பிரதிநிதிகளின் உழைப்பும் பிரதான காரணமாகும். எனவே இவ்வாறானவர்களுக்கு தனிப்பட்ட ரீதியிலும் தொழில்சார் ரீதியிலும் உதவிபுரிவது எமது கடமையாகும் என்றார்.

9மாதகால டிப்பளோமா திட்டத்தில் 144 விற்பனை பிரதிநிதிகள் பங்குபற்றவுள்ளனர்.

1938 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வர்த்தக நாமங்களான சன்லைட், லக்ஸ்மற்றும்பெயார்ஸ்ரோஸ் ஆகிய வர்த்தக நாமங் களுடன் யுனிலீவர் ஆனது 75 வருட கால உற்பத்தியாளராகத் திகழ்கிறது.

# மக்கள் வங்கி தலைவர் காலமானார்



மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ.கருணாஜீவ கடந்த 29ஆம் திகதி கொழும்பில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமாகியுள்ளார்.

இவர்2007-ம்ஆண்டுமே மாதம் முதல் மக்கள் வங்கிக் குழுமத்தின் தலைவராக செயற்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பல்கலை மா.ஆணைக்குழு அங்கீகாரம் பெற்ற பொறியியல் பட்டப்படிப்புகள்

இலங்கையின் முன்னணி உயர்கல்வி நிலையமான SLIIT முதற்தடவையாக, பல்கலைக் கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவின் (UGC) அங்கீகாரம் பெற்ற பொறியியல் இளமாணிப் பட்டப்படிப்பு கற்கைநெறிகளை வழங்கவுள்ளது.

இலங்கையில் முதற்தர பட்டப் படிப்புக்களை வழங்கிவரும் SLIIT நிலையமானது, தமது கல்விசார் திட்டத்தில் பொறியியல் பட்டப்படிப்பு கற்கைநெறிகளையும் வழங்கத் திட்டமிட்டுள்ளது.

பொறியியல் பட்டப்படிப்புத் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்ற இலங்கையின் ஒரேயொரு தனியார் கல்வி உயர் கல்வி நிலையமாக SLIIT திகழ்வதோடு, பொதுநலவாய பல் கலைக்கழக கூட்டுத்தாபத்தின் அங்கத்துவத்தையும் பெற்றுள்ளது.

SLIIT கல்வி நிலையமானது, கட்டுமானப் பொறியியல், Electrical மற்றும் Electronic பொறியியல், Mechanical Engineering மற்றும் Materials Engineering போன்ற பிரிவுகளில் பட்டப்படிப்புக்களை வழங்கத் திட்டமிட்டுள்ளது. மேலும் நீண்டகால கல்விசார் பங்காளர்களாகிய அவுஸ்திரேலியாவின் கர்டன் பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் ஸெபீல்ட் ஹலாம் பல்கலைக்கழகம் போன்ற வெளிநாட்டு பல்கலைக் கழகங்களுடன் இணைந்து பொறியியல் பட்டப்படிப்புக்களை வழங்கி வருகிறது.

நாட்டில் அபிவிருத்தி மற்றும் புதிய திட்டங்கள் முன்னெடுக்கும் இவ் வேளையில், நாட்டின் தனியார் மற்றும் அரசாங்கத்துறையில் பொறியலாளர்களுக்கான கேள்வி அதிகமாகக் காணப்படுகிறது என SLIIT நிறுவனத்தின் தலைவரும், பிரதான நிறைவேற்று அதிகாரியுமான பேராசிரியர் லலித் கமகே தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் SLIIT நிலையத்தின் தலைவர் பேராசிரியர் எஸ்.கருணாரத்ன கருத்துத் தெரிவிக்கையில்,

இக்கல்வி நிலையத்தின் ஊடாக கடந்த காலங்களில் 6 ஆயிரம் தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகள் மற்றும் 15,000 IT தொழில்நுட்ப நிபுணர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். இச்சாதனையை எதிர்காலத்தில் பொறியியற் துறையிலும் நிலைநாட்ட எண்ணியுள்ளோம் என்றார்.

2013-ம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நோக்கில் SLIIT நிலையத்தில் புதிய பொறியியற் பிரிவுக்கான கட்டட நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

இலங்கையில் உள்ள சர்வதேச அங்கீகாரம் பெற்ற கல்வி நிலையமாக SLIIT திகழ்கிறது.

இக்கல்வி நிலையத்தின் ஊடாக 18,000 தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். SLIIT நிறுவனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட கல்விசார் தகமைகள் ஊடாக பட்டதாரிகள் பலர் வியாபாரம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் இலத்திரனியல் துறைகளில் முன்னோடிகளாக உள்ளனர்.

மேலதிக தகவல்களை www.[illegible] என்ற இணையத் தளத்தில் காணலாம்.

# சாம்சங் தகராற்றில் தீர்ப்பு

உலகின் முன்னணி இலத்திரனியல் நிறுவனங்களில் ஒன்றான தென் கொரியாவின் சாம்சாங் நிறுவனத்தின் தலைவர் லீ குன் ஹீக்கும் அவரது உடன்பிறந்தோருக்கும் இடையில் பல நூறு கோடி டொலர்கள் பெறுமதி கொண்ட சாம்சாங் குழுமத்தின் பங்குகள் யாருக்குச் சொந்தம் என்பது தொடர்பாக நடந்து வந்த வழக்கில் லீ குன் ஹீ வெற்றி பெற்றுள்ளார்.

சாம்சங் நிறுவனத்தை தோற்றுவித்தவரான தனது தந்தையிடம் இருந்து லீ சுவீகரித்த நிறுவனப் பங்குளை அவர் பதுக்கி வைத்தார் என அவரது குடும்பத்தவர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இந்தத் தீர்ப்பு தென்கொரியாவின் உச்சபட்ச செல்வந்தரான லீக்கு எதிராக சென்றிருந்தால் சாம்சங் நிறுவனம் ஸ்த்திரம்குலையும் அளவுக்கு பாரதூரமான கட்டமைப்பு மாற்றங்கள் அதில் ஏற்பட்டிருக்கும் என்று செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

கைத்தொலைபேசிகள் மற்றும் க்கணனி சில்லுகள் தயாரிப்பில் உலகில் மிகப்பெரிய நிறுவனம் என்றால் அது சாம்சங்தான். இந்தத் தீர்ப்பு வெளியான நிலையில், பங்குச் சந்தைகளில் சாம்சங் பங்குகளின் விலைகள் உயர்ந்துள்ளன.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | - 5878.19 | 5799.69 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,190.55 | 3,196.81 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 9,164.24 |

[illegible], இன்டோ மலே(1500.00), கெஸ்னர்(219.60), ஈகுவிட்டி (33.80), லங்கா புளோரைல்ஸ்(65.00), ரேணுகா ஸோ(15.80).

[illegible] ஹொட்டகல(57.00), இன்பிராசக்சர்(165.00), மேர்ச். சிப்பிங்(165.10), பிமுத் பினான்ஸ்(18.10), பியூப்பிள் லீசிங்(13.50).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 124.83 | 128.08 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 197.52 | 203.57 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 169.05 | 174.93 |
| சுவிஸ் பிராங் | 136.20 | 141.65 |
| கனேடிய டொலர் | 124.37 | 129.07 |
| அவுஸ்திரேலிய டொலர் | 128.97 | 134.14 |
| சிங்கப்பூர் டொலர் | 100.09 | 103.74 |
| ஜப்பான் யென் | 1.35 | 1.40 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.37 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.42 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருந்து தரிப்பிடம் நாளை திறப்பு

ஆ.நடேசனின் (ஜே.பி) ஞாபகார்த்தமாக உருத்திரபுரத்தில் அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடம் நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு மா.பேரம்பலம் (ஜே.பி) தலைமையில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இப்பேருந்து தரிப்பிடத்தை தமிழர் கூட்டணிச் செயலாளர் வீ. ஆனந்தசங்கரி திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்விற்கு கிளிநொச்சி மாவட்ட பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.(அ-3-254)

# அரசியல்வாதிகளின் செல்வாக்கில் சட்டவிரோத ரோலர் மூலம் மீன்பிடி

## நடைபயண போராட்டம் நடத்தும் வி.சகாதேவன்

(பூந்தோட்டம்)

இந்திய ரோலர் பிரச்சினையுடன் அதனை சாட்டாக வைத்து உள்ளூரிலே அரசியல்வாதிகள் மற்றும் செல்வாக்குப்படைத்தவர்களின் பின்னணியில் செயற்படும் ரோலர் பயன்பாட்டால் மீனவர்கள் மிகவும் பாதிப்பை அடைந்துள்ளார்கள் என இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து முள்ளிக் குளத்தில் இருந்து முல்லைத்தீவு வரை நடைபயண போராட்டம் நடத்தும் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்தார்.

கிளிநொச்சியை நடைபயணமாக வந்தடைந்துள்ள அவர் கருத்து தெரிவிக்கையில்,

விடத்தல்தீவு மக்கள் மிகப்பெரும் அளவில் திரண்டு தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந் தார்கள். அவர்கள் இந்திய ரோலர்களுடன் உள்ளூர் ரோலர் வைத்திருப்போரால் தமது வலைகள் உட்பட பல பொருட்கள் இலட்சக்கணக்கில் அழிந்துள்ளதாக தெரிவித்தனர். அந்த கிராமத்தில் மாத்திரம் கடந்த ஆண்டு 25 கோடிக்கு மேலான கடல் தொழில் உபகரணங்கள் அழிந்துள்ளதாக தெரிவித்தனர்.

நாம் வரும் வழியெல்லாம் அந்த மக்களின் சோகமான கண்ணீர் கதைகளை கேட்கக்கூடியதாக இருந்தது.

கிளிநொச்சி இரணைமாதா கிராமத்தில் கடல் தொழில் உபகரணங்களை கொண்டு தொழில் செய்ய முடியாதிருப்பதாக கவலை தெரிவித்தனர். கடற்றொழில் அமைச்சினால் நண்டு பதப்படுத்தும் ஆலையொன்று அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. அது 200 பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய மிகப் பெரிய நிறுவனம். அந்த நிறுவனத்திற்கு நண்டுகளை கொள்வனவு செய்ய முடியாதிருக்கின்றது. கடலுக்கு சென்று தொழில் செய்ய முடியா திருப்பதே காரணமாகும்.

அதனால் அந்த தொழிற்சாலை இன்று இயங்காமல் காணப்படுகின்றது. இங்குள்ள மீனவர்கள் தமது தொழில் உபகரண கடன்களை எவ்வாறு செலுத்துவதென தெரியாது இருக்கின்றார்கள்.

இவற்றுக்கெல்லாம் காரணம் இந்திய மீனவர்களின் அத்துமீறலும் அவற்றை காரணம் காட்டி அரசியல்வாதிகள் அரசியல் பின்புலமுள்ளவர்களால் நடத்தப்படும் சட்டவிரோத உள்ளூர் ரோலர் மீன்பிடி யாகும்.

இவற்றோடு இலங்கையிலேயே சிறந்த நண்டுக்கு பெயர்போன வடமாகாணத்திலே நாச்சிக்குடா கடற்கரைப்பகுதியில் நண்டின் பெருக்கம் மிகமிக குறைந்துபோயுள்ளது. இதற்கு காரணம் அங்குள்ள இயற்கை வளங்கள் ரோலர்களால் அழிக்கப்பட்டுள்ளதேயாகும்.

இந்நிலையில் இப்போராட்டம் ஆரம்பிப்பதற்கு முதல் இது அரசியலுக்கு அப்பாற்பட்ட விடயமாக இருந்தமையினால் சகல தரப்பினருக்கும் ஆதரவு தருமாறு கேட்டிருந்தோம்.

ஆனால் இதுவரை எவரும் ஆதரவு தரவில்லை. அதை விட நாம் மக்களுக்காக இந்த போராட்டத்தை செய்யும் போது பொய்யான பரப்புரைகளை செய்து போராட்டத்தை முறியடிக்கச் செய்தார்கள்.

எனினும் மக்கள் விழிப்புணர்வு கொண்டுள்ளமையினால் அது சாத்தியமற்று போயுள்ளது. அதன் காரணமாக மக்களினுடைய ஆதரவு நூற்றுக்கு நூறு வீதமாக உள்ளது எனவும் தெரிவித்தார். (அ-9-266)


**வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம்**
**பாடசாலையைவிட்டு விலகியோருக்கான பயிற்சிகள்-2013**

சிங்களம், தமிழ் சுருக்கெழுத்து ஆகிய பயிற்சிகள் 06.02.2013 புதன் கிழமை முறையே 3.00 மணிக்கும் 4.00 மணிக்கும் சுபநேரப்படி ஆரம்பிக்கப்படவுள்ளன. அத்துடன் தமிழ்த் தட்டெழுத்துப்பயிற்சிகள் 11.02.2013 முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சிகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 1000/= பதிவுக் கட்டணமாகவும் ரூபா 100/= ஆண்டுச்சந்தாவாகவும் செலுத்தவேண்டும். இடம்பெயர்ந்தோருக்கும் சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் குடும்பத்தைச்சேர்ந்தோருக்கும் விசேட சலுகைகள் வழங்கப்படும்.

ஆர்வமுடையோர் 05.02.2013,06.02.2013 முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை கழகத்தில் நேரடியாகச் சுயவிபர விண்ணப்பத்துடன் சென்று பதிவு செய்யலாம்.

சிங்களம், தமிழ் சுருக்கெழுத்து வகுப்பு வார இறுதிநாட்களிலும் தமிழ்த்தட்டெழுத்து வகுப்புக்கள் வார நாட்களிலும் நடைபெறும்.

வடமராட்சி சுருக்கெழுத்து கழகம்
தலைவர்
வதிரி, கரவெட்டி.

(சி/2329)



BOC இலங்கை வங்கி

**மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை**

யாழ். மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் 15.05.2012 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 15.11.2011 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி, இடம், நேரம் |
|---|---|
| யாழ். மேற்தரக்கிளை (யாழ். கச்சேரி, யாழ். பஸ் நிலையம், யாழ். பிரதான வீதி விரிவாக்கற்கிளைகள் உட்பட) | |
| யாழ். 2 ஆம் மேற்தரக்கிளை (கொக்குவில் விரிவாக்கற்கிளை உட்பட) | யாழ்ப்பாணம் அதி மேற்தரக்கிளை |
| திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
| காரைநகர் | |
| சுன்னாகம் | 2013 பெப்ரவரி 16ம், 17ம் திகதிகளில் (சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு |
| மானிப்பாய் | |
| காங்கேசன்துறை (அளவெட்டி, இளவாலை விரிவாக்கற்கிளைகள் உட்பட) | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, நயினாதீவு விரிவாக்கற்கிளைகள் உட்பட) | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி (கைதடி, கொடிகாமம், பளை, பூநகரி விரிவாக்கற்கிளைகள் உட்பட) | |
| அச்சுவேலி | |
| கோப்பாய் | |
| உரும்பிராய் | |
| சங்கானை | |
| வல்வெட்டித்துறை | |

இந்த ஏல விற்பனை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு

தொ.பே.இல. 021 222 4683
021 222 3126

செயற்பாட்டு முகாமையாளர்
இலங்கை வங்கி (வடபிராந்தியம்)
வடபிராந்திய காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2327)



**கல்யாண மாலை**

இவர்களுக்கு **மணமகள் தேவை** | இவர்களுக்கு **மணமகன் தேவை**

| | |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>உயரம்: 5'5''<br>கி.பா: 24.75<br>தொழில்/ தகைமை: B.EA, MBA (UK PR)<br>தொ. இல: B -1110 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம் 1<br>உயரம்: 5'<br>கி.பா. 38, 8 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: BSc, Computer Science<br>தொ. இல: G -1118 |
| பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம் 4<br>உயரம்: 5'11'<br>கி.பா: 45.75,4 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: B.Sc (Hons) வங்கி அதிகாரி<br>தொ. இல: B -1113 | பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 2<br>உயரம்: 5'7''<br>கி.பா. 48,8 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: BSc Teacher<br>தொ. இல: G -1120 |
| பிறப்பு: 1976 RC வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 2<br>உயரம்: 5'6''<br>கி.பா: 4 இல் செவ்<br>தொழில்/ தகைமை: A/L, இலங்கை போக்குவரத்து சபை<br>தொ. இல: B -1115 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>உயர்ம்: 6'<br>கி.பா.:- 2 இல் செவ்<br>தொழில்/ தகைமை: A/L வியாபாரம்.<br>தொ. இல: G -1121 |
| பிறப்பு: 1967 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>உயரம்: 5'8''<br>தொழில்/ தகைமை: Doctor (கனடா PR)<br>தொ. இல: B -1117 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூசம் 3<br>உயரம்: 5' 8''<br>கி.பா: 1 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: A/L, தனியார் நிறுவனம்<br>தொ. இல: G -1122 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்திற்கு மருத்துவ உபகரணங்கள்


## யுனிசெப் 3 மில்லியன் ஒதுக்கியது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்ட வைத்தியசாலைகளுக்குமாக மூன்று மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை யுனிசெப் நிறுவனம் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கையளித்துள்ளது.

இவ் உபகரணங்களை 5 மாவட்டங்களைச் சேர்ந்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஆளுநர் பணிமனையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி, சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ரவீந்திரன், மாகாண சுகாதார பணிப்பாளர் திருமதி யூட் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)



நன்றி:- மிரர்

# சட்ட ஆவணங்களை பெறாதோர் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது

## பிரதேச செயலக புள்ளி விபரங்களில் தகவல்

கடந்த கால யுத்தத்தினால் பல இன்னல்களை சந்தித்த மக்கள் ஆவணங்களையும் தவறவிட்டு பதிவுகளை மேற்கொள்ளாது பல கஷ்டங்களை எதிர்கொள்வதாக பிரதேச செயலக வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இவ்வாறு வன்னியில் இடம்பெற்ற போரினால் வைத்தியசாலைகளிலும் பிரதேச செயலகங்களிலும் உள்ள ஆவணங்களை பெற முடியாமலும் பிறப்பு மற்றும் இறப்பை பதிவு செய்யாது இருந்தவர்கள் தொலைந்த ஆவணங்களைப் பெறுவதற்கும் காலங்கடந்த பிறப்பு, இறப்பை பதிவு செய்வதற்கும் பதிவுகளை மேற்கொண்டவர்களின் தொகை கடந்த 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையுள்ள புள்ளிவிபரத்தின் படி அதிகரித்து காணப்படுகின்றது.

குறிப்பாக பிறந்தவுடன் குழந்தையை பதிவு செய்யாதவர்களின் தொகையே அதிகரித்து காணப்படுகின்றது.

சட்ட ஆவணங்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்வதற்கு மாவட்ட பதிவாளர்களுக்கும் பிரதேச செயலகங்களுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டும், பதிவுகள் இலகுவாக்கப்பட்டும்கூட பதிவுகளை மேற்கொள்ளாதவர்களின் தொகை அதிகரித்து காணப்படுவதாக மேலதிக பதிவாளர் நாயகத்தினால் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக குழந்தை பிறந்தவுடன் பதிவுகளை மேற்கொள்ள முடியாததற்கான காரணங்களை ஆராயுமிடத்து தந்தை, தாய் பிறப்புச் சான்றிதழ் இன்மை, திருமணப் பதிவு இன்மை என்பவைதான் காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு காரணங்களை முன்வைத்து பதிவுகளை மேற்கொள்ளாத பெற்றோர்கள் 15 நாட்களுக்குள் மட்டுமே பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்ற கருத்தையும் கொண்டிருக்கின்றனர். ஆனால் குழந்தை பிறந்து 3மாதத்திற்குள் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என விளங்கிக் கொள்வதில்லை.

காலங்கடந்த பிறப்பை மேற்கொள்ளும் போதும் பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ், பெற்றோரின் விவாகச் சான்றிதழ், பிள்ளை பிறந்ததை உறுதிப்படுத்திய வைத்திய அதிகாரியின் சான்றிதழ் கடிதம், மருத்துவ தாதியின் அறிக்கை அட்டை (ஊசிக்காட்), மூத்த, இளைய சகோதரர்களின் பிறப்புச் சான்றிதழ், சமாதான நீதவானின் உறுதிப்படுத்தல், கிராம சேவகரின் உறுதிப்படுத்தல், பாடசாலையில் கல்வி கற்றல், அதிபர்களின் உறுதிப்படுத்தல் என்பன கட்டாயம் தேவை. இவை இல்லாமலும் பிறப்புக்கான பதிவுகளை மேற்கொள்ளாது இருக்கின்றனர்.

நடமாடும் சேவைகளின்போது இவை சமர்ப்பிக்கப்படாமையினாலும் பதிவுகளை மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுகிறது.

எனவே மக்கள் மத்தியில் இச் சட்ட ஆவணங்களை பெறுவதில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். உரிய தரப்பினர் இது தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகளை ஏற்படுத்தி மக்களுக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டுவதன் மூலம் எதிர்காலத்தில் சட்ட ஆவணங்கள் இல்லாதோரின் தொகை குறைவடையும் என பிரதேச வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (அ-3-30)

# யாழ்ப்பாணத்தில் கால்நடைகள் திருடும் சம்பவங்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

புத்தளத்தினைச் சேர்ந்த சில கொள்ளையர்கள் யாழில் கால்நடைகளை திருடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

கடத்தப்படும் ஆடு, மாடுகளினை அவர்கள் இறைச்சிக்காக பயன்படுத்தக்கூடும் எனவும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணத்தின் கிராமப்புறபகுதிகளில் ஆடு, மாடுகள் என்பன களவாடப்படுவதாக எமக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இத்திருட்டுச் சம்பவங்களில் ஒரு சில சம்பவங்கள் பொலிஸாரினால் கண்டறியப் பட்டுள்ளன.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் பெரும்பாலானவர்கள் புத்தளவாசிகளாவே உள்ளனர்.

அண்மையில்கூட சில்லாலை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆடுகள் வாகனமொன்றில் திருட்டுத்தனமாக கொண்டு செல்ல முற்படுகையில் இளவாலை பொலிஸார் அதனை தடுத்து நிறுத்தியதோடு ஆடுகள் ஏற்றிச் சென்ற வாகனத்தினையும் சாரதியையும் கைது செய்துள்ளதோடு ஆடுகள் இரண்டும் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு புத்தள வாசிகளினால் திருடப்படும் கால்நடைகள் புத்தளத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றதா அல்லது இங்கேயே விற்பனை செய்யப்படுகின்றதா என்பது குறித்து தமக்கு எதுவும் தெரியாது எனவும் அவர் கூறினார்.

மேலும் இக்கால்நடை கடத்தல் சம்பவங்கள் தீவகங்களிலும் கிராமங்களிலும் இடம் பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். (அ-4)




## சாவகச்சேரி இந்துவின் நிறுவுநர் தினம் நாளை

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் கல்லூரி அதிபர் அ.கையாலபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளை பிரதிநிதி ச.சத்தியமூர்த்தி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

தாமோதரன் மலர் ஆய்வுரையை யாழ். கல்வியியற் கல்லூரி ஓய்வு நிலை விரிவுரையாளர் க.தர்மராசா ஆற்றவுள்ளார்.

உலக சனத்தொகை அதிகரிப்பின் போக்கு, அதற்கான காரணங்கள் மற்றும் அதன் சாதக, பாதக விளைவுகள் பற்றிய ஒருநோக்கு என்ற விடயம் பற்றி பொருளியல் துறை முதுநிலை விரிவுரையாளர் எஸ்.எஸ். உதயகுமார் உரையாற்றவுள்ளார். (அ-3-29)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யா/ மாதகல் நுணசை வித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்க தெரிவு அண்மையில் பாடசாலை அதிபரின் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக கோ.பாலசிங்கம், செயலாளராக த.பார்த்தீபன், பொருளாளராக செல்வி ச.சுபோதினி, உப தலைவர்களாக சுப்பிரமணியம், சிவநேசன் (அதிபர்), உப செயலாளராக அன்ரனிற்றா ஆகியோரும் மேலும் 9 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். (அ-9)

# இலக்கிய பேரவைக்கு நூல்களை அனுப்பலாம்

(யாழ்ப்பாணம்)


இலங்கை இலக்கியப் பேரவையினால் வருடாந்தம் நடத்தப்படும் சிறந்த இலக்கிய நூல்களுக்கான விருது வழங்கும் நிகழ்விற்கு எழுத்தாளர்கள் தமது நூல்களை பரிந்துரை செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இலக்கியப் பேரவை வருடாந்தம் சிறுகதை, நாவல், காவியம், கவிதை, சிறுவர், இலக்கியம், ஆய்வு, சமயம், பல்துறை நாடகம், அறிவியல், மொழிபெயர்ப்பு (பிற மொழிகளிலிருந்து தமிழ் மொழிக்கு) ஆகிய துறைசார்ந்த இலக்கிய நூல்களை தெரிவு செய்து விருது வழங்கி வருகின்றது.

இதன்படி கடந்த வருடம் வெளிவந்த இத்துறைசார்ந்த இலக்கிய நூல்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளதால் கடந்த ஆண்டில் நூல்களை வெளியிட்ட எழுத்தாளர்கள் நூலின் ஒரு பிரதியை விருதின் தேர்வுக்காக எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் சி.சிவதாசன் செயலாளர், இலங்கை இலக்கியப் பேரவை, இல 45, நொத்தாரிஸ் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபால்மூலமோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

சமர்ப்பிக்கும் நூல்கள் இலங்கையில் பிரசுரமானதாக இருத்தல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)





யா/வட்டு இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக் கழக உடற்கல்விப் பணிப்பாளர் கே.கணேசநாதன் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா வெற்றியீட்டிய மாணவனொருவருக்கு வெற்றிக்கிண்ணம் வழங்குவததையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- சித்தன் கேணி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை வடக்கில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

**வீதி விபத்துக்களினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் வடக்கு மாகாணத்தில் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக யாழ்.குடாநாட்டில் வீதி விபத்தினால் காயமடைவோரின் எண்ணிக்கையும் சிகிச்சை பலனளிக்காது உயிரிழப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.**

வீதி விபத்துக்களை பொறுத்தவரை நாடளாவிய ரீதியில் பலர் பாதிப்படைந்து வருகின்றனர். இருப்பினும் வடக்கு மாகாணத்தில் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வீதி விபத்துக்களினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகமாகவே காணப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் சராசரியாக நாளொன்றுக்கு ஒருவர் வீதி விபத்தில் சிக்குவதை அவதானிக்க முடிகின்றது. விபத்து இடம்பெற்ற இடத்தில் உயிரிழப்பு ஏற்படுகிறது. இதனைவிட வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காது உயிரிழப்பு ஏற்படுகிறது.

வீதி விபத்துக்களுக்கு பிரதான காரணமாக அமைவது வாகனச்சாரதிகள் சட்ட திட்டங்களையும் நடைமுறைகளையும் பின்பற்றாமல் தொலைபேசியில் உரையாடியவாறே வாகனத்தை செலுத்துவது, மது போதையில் சுய நினைவிழந்து வாகனத்தை செலுத்துவதோடு மிதமிஞ்சிய வேகத்தில் வாகனத்தை செலுத்துவதனால் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதாக பொலிஸார் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

இதனை யாழ்.போதனா வைத்தியசாலையின் புள்ளி விபரத்தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன. இந்த வைத்தியசாலையில்தான் வடக்கு மாகாணத்தில் பெரும்பாலான நோயாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். மேலும் கடந்த 5 வருடங்களில் 5 ஆயிரத்து 570 பேர் வரை வீதி விபத்தில் சிக்கி காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் பல நூற்றுக்கணக்கானவர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் நிரந்தர அங்கவீனர்களாக மாற்றப்பட்டுள்ளதோடு கை, கால்களை இழந்தும் நாள்தோறும் அவஸ்தைப்பட்டுக் கொண்டுள்ளனர்.

வீதி விபத்தில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை கடந்த 2008 ஆம் ஆண்டு 340 பேராகவும் 2009 ஆம் ஆண்டு 454 பேராகவும் காணப்பட்டது. இருப்பினும் கடந்த மூன்று ஆண்டுகளும் இந்த எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வந்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது.

கடந்த 2010 ஆம் ஆண்டு 713 பேரும் 2011 ஆம் ஆண்டு ஆயிரத்து 90 பேரும் 2012 ஆம் ஆண்டு (கடந்த வருடம்) 2 ஆயிரத்து 974 பேரும் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அந்தப் புள்ளி விபரத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை, யாழ்.குடாநாட்டில் வீதி விபத்துக்களினால் காயமடைவோரில் பல நூற்றுக்கணக்கானவர்கள் ஆதார வைத்தியசாலைகளிலும் அனுமதிக்கப்படுவதுண்டு. யாழ். குடாநாட்டில் வீதி விபத்துக்களினால் அதிகளவில் பாதிக்கப்படுபவர்கள் 18 வயதிலிருந்து 30 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் மதுபோதையில் வாகனத்தை செலுத்தும் சாரதியாக அதிகளவானவர்கள் காணப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் காயமடைவோரின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுவது மோட்டார் சைக்கிள் விபத்தினால்தான் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-6)

# வவுனியாவுக்கு கிழக்கே அழிந்து போகும் வீமன்கல் தமிழ் கிராமத்தின் பரிதாபம்

(பூந்தோட்டம்)

வவுனியா வீமன்கல் கிராமத்தில் அடிப்படைத் தேவைகளுடன் மீள்குடியேற்றம் செய்யப்படாமையினால் இக்கிராமம் அழிந்து போகும் நிலை உள்ளதாக அக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வவுனியாவின் கிழக்கு பக்கமாகவுள்ள மாமடு எனும் சிங்கள கிராமத்திற்கு அண்மையில் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள வீமன்கல் கிராமம் சுமார் 250 வருடங்கள் பழைமை வாய்ந்த வவுனியாவில் ஆதி கிராமங்களில் ஒன்றாகும்.

இங்கு வாழும் மக்கள் தமது தற்போதைய நிலை தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

விவசாயத்தை அடிப்படையாக கொண்டமைந்த இக்கிராமம் 1976 ஆம் ஆண்டு முதன் முதல் இனக்கலவரம் காரணமாக இடப்பெயர்வை சந்தித்தது. அக்காலப்பகுதியில் அங்கு வாழ்ந்த 48 குடும்பத்தினரும் வவுனியா நகரை நோக்கி இடம்பெயர்ந்தனர். பின்னர் 4 வருடங்கள் கழித்து 1980 ஆம் ஆண்டு மீள்குடியேறிய இம் மக்கள் மீண்டும் 1986 ஆம் ஆண்டு இடப்பெயர்வை சந்தித்தனர்.

அன்று இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் 24 வருடங்களின் பின்னர் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மீண்டும் குடியேற 69 குடும்பத்தினராக வருகை தந்திருந்தனர். எனினும் அப்போது மீள்குடியேறுவதற்கு போதுமான செயன்முறைகள் பின்பற்றப்படாமையினால் பெண்கள் மற்றும் சிறுவர்களுடன் இருந்த குடும்பத்தினர் மெல்ல மெல்ல மீண்டும் வவுனியா மற்றும் ஏனைய பிரதேசங்களை நோக்கி செல்லத் தொடங்கியதனால் தற்போது 9 குடும்பத்தினர் மாத்திரமே அங்கு தொடர்ச்சியாக இருந்து வருகின்றனர்.

எமது கிராமம் வளமானது என்பதனால் நாம் மீண்டும் எமது காணிகளை புதுப்பித்து வாழும் நோக்குடன் பலத்த எதிர்பார்ப்புடன் வந்திருந்தோம். எனினும் எமது காணிகள் காடாக காட்சியளித்ததனால் டொசர் போட்டு துப்புரவு செய்யப்பட்டாலும் முழுமையாக எமது காணிகளை துப்புரவு செய்யப்படாமையினாலும் எமது காணிகளுக்கு பின்னால் காடாக காட்சியளித்தமையினாலும் நாம் குடியிருக்க முடியாதுள்ளது.

பல குடிகள் மீளக்குடியேறும் நோக்குடனேயே இங்கு பாரிய பாடசாலை கட்டப்பட்டாலும் அங்கு படிப்பதற்கு மாணவர்கள் இன்மையால் அது மூடப்பட்டுள்ளது. வீட்டுத்திட்டம் தருவதாகவும் அடிப்படை வசதிகள் செய்து தருவதாகவும் நாம் மீள்குடியேற வந்த போது கூறினார்கள். ஆனால், 3 வருடங்களாகியும் இதுவரை மலசலகூடமே கட்டித்தரவில்லை என தெரிவித்தனர்.

எனவே, மக்கள் மீள்குடியேற ஏதுவான நடவடிக்கைகள் செய்யப்படாவிட்டால் இக் கிராமம் சில காலங்களில் அழிந்து போய் விடும் எனவும் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். (அ-9-266)

# 19 ஆவது திருத்தம் தொடர்பில் ஆலோசிக்கிறாராம் மஹிந்த

அரசியலமைப்புக்கு 19 ஆவது திருத்தம் கொண்டு வருவது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல்கள் முறையில் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை மாற்றுவது , பிரதம நீதியரசரின் பதவிக் காலத்தை நிர்ணயிப்பது உட்பட பல்வேறு விடயங்கள் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# க.பொ.த.(உ/த) பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரம் பரீட்சை 2012 இற்கான பெறுபேறுகள் அவ்வப்பாடசாலை அதிபர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதில் முன்னணி பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**யா/விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி**

**வணிகப்பிரிவு**

ச.சுகன்யா-3ஏ, சி.கோகுலன்-3ஏ, செ.சுதன்- 2ஏபி, கை.நிதர்சினி-ஏ2பி, க.தேன்மொழி-ஏ2பி.

**கணிதப்பிரிவு**

செ.மயூரன்-2ஏபி, சி.அகிலேந்திரன் -3பி, ஜெ.பிரசாத்-2பிசி, க.கௌதமன்-பி2சி.

**விஞ்ஞானப்பிரிவு**

அ.ராஜ்கரன்-ஏ2பி, தே.சத்தியா-2பிசி, செ.திங்கரன்-பி2சி, க.கௌதமி-பி2சி.

**கலைப்பிரிவு**

ம.உஷாந்தி-ஏ2பி, சௌ.கேமதட்சனி-ஏ2பி, லோ.சர்மினி-ஏபிசி, கி.கோபிகா-3பி, ற.துஜிக்கா-2பிசி.

# புத்த பிக்கு அரசியல் செய்வது அகௌரவமானது

பௌத்த தர்ம பிரகாரத்தின்படி புத்த பிக்கு ஒருவர் அரசியல் செய்வது அகௌரவமானதாகும் என்று அஸ்கிரிய மஹா நாயக்கர் உடுகம ஸ்ரீ புத்தரக்கித தேரர் குறிப்பிட்டுள்ளார். அரச நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்குவது மற்றும் ஆசி வழங்குவது மாத்திரமே பௌத்த பிக்குவின் கடமையாக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலீட்டு பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா நேற்று முன்தினம் மஹாநாயக்கரை சந்தித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதனிடையே வனவிலங்கு பாதுகாப்பு துறை அமைச்சர் விஜித விஜயமுனி செய்சாவும் நேற்று முன்தினம் அஸ்கிரிய மஹாநாயக்கரிடம் ஆசி பெற்றுக் கொண்டார். (அ-2)




சென்.ஜோன்ஸ் கல்லூரியின்
190ஆவது ஆண்டு நிறைவினையொட்டி
பாதிக்கப்பட்ட மாணவரின்
கல்வி மேம்பாட்டு நிதிக்காக
மீண்டும் சுராங்கனி புகழ்
A.E.மனோகரனின்
பொப்பிசை கானங்கள்

யாழ்.மண்ணின் புகழ்பெற்ற பாடகர்
பொப்பிசைச் சக்கரவர்த்தி, தென்னிந்திய திரைப்பட
நடிகர், சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர்
பல ஆண்டுகளின் பின்னர் யாழ்.மண்ணில்
பாட வருகின்றார்.

புகழ்பெற்ற கண்ணன் கோஷ்டி வழி வந்த
சப்தமி புகழ் கண்ணன் முரளியின்
இசைக்குழுவின் சங்கமத்தில்....



காலத்தால் அழியாத....
பொப்பிசை கானங்களை கேட்டுப் பரவசமாக..
மீண்டும் ஒரு சந்தர்ப்பம்.....
யாழ்.மண்ணில்........
திரண்டு வாரீர் .........
உதவிக்கரம் தாரீர்....!

கட்டண விபரம் : ரூபா 1000, ரூபா 500, ரூபா 300
இடம்: சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.
காலம்: இன்று நான்காம் திகதி (04.02.2013)
மாலை 5.30 மணிக்கு

பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

359

## விநோத வழக்கு



வெகுகாலத்திற்கு முன்னால் அதிராமபுரியை சிம்மநாதன் என்ற ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவன் குடிகளின் குறைகளை நேரில் கேட்டு அவைகளைத் தீர்த்து வந்தான். எந்த வழக்கு வந்தாலும் அதை நன்றாக ஆராய்ந்து சரியான தீர்ப்பு அளித்து வந்தான்.

ஒருநாள் ஒரு பிராமணன் அரசனின் தர்பாரை அடைந்து அரசே நான் சமரபுரிவாசி. வெகு நாட்களுக்கு முன் வீடு, வாசல் நில புலன்களுடன் வாழ்ந்து வந்தேன். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக என்னுடைய கையில் இருந்த பணமும் சொத்தும் போய் விட்டது. ஒரே ஒரு வீடுதான் மிஞ்சியது.

அந்த வீட்டை என் ஊரில் உள்ள உலகநாதன் என்ற பணக்காரனுக்கு விற்றேன். ஆனால் அந்த வீட்டின் பின்புறம் வெட்டப்பட்ட கிணறை மட்டும் நான் விற்கவில்லை. அது ஊருக்குப் பிரயோசனமாக இருக்கட்டும் என்று நினைத்தேன். ஊராரும் அதிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்வார்கள். குடிக்க நல்ல தண்ணீரை

## அம்புலிமாமா கதைகள்

கொடுக்கும் கிணறு அந்த வட்டாரத்திலேயே அது ஒன்றுதான். எனவே எங்கள் வீட்டிற்கு அவர்கள் தங்களால் முடிந்த அளவுக்கு காய்கறியோ அரிசியோ பருப்போ கொடுத்து உதவுவார்கள். இந்த ஏற்பாடுதான் இருக்கிறதே என்ற தைரியத்தில் என் மனைவியை அதே ஊரில் விட்டுவிட்டு நான் பணம் சம்பாதிக்க வெளியூர் சென்று விட்டேன்.

சில வருடங்கள் சென்றன. போதிய பணத்துடன் நான் வீடு திரும்பினேன். ஆனால் என் மனைவி வேறு வீடுகளில் வேலை செய்து வாழ்க்கை நடத்திவருவது கண்ட எனக்கு ஆத்திரம் வந்தது. நான் ஊரை விட்டு போன மறுநாளே உலகநாதன் அந்தக் கிணறு தன்னுடையதென்று சொல்லி என் மனைவியை அங்கு வரக்கூட முடியாதபடி செய்துவிட்டானாம். அவள் ஊரில் பஞ்சாயத்துக்காரர்களிடம் போய் முறையிட்டாள்.

அவர்களும் அவன் பக்கம் சேர்ந்து கொண்டு உலகநாதனுக்கே சொந்தம் என்று சொல்லிவிட்டார்கள். நான் திரும்பி வந்தபிறகும் ஊரிலுள்ளவர்களிடம் முறையிட்டேன். அவர்கள் அவன் பக்கமே பேசுகிறார்கள். நான் என்ன செய்வேன். இதைத் தீர விசாரித்து தக்க நியாயம் வழங்கவேண்டும் என்று



கதறி முறையிட்டுக்கொண்டான்.

சிம்மநாதன் உடனே உலகநாதனையும் அமரபுரி பஞ்சாயத்தவர்களையும் அழைத்துவரும்படி உத்தரவிட்டான். அவர்களும் அங்கு வந்து சேர்ந்தார்கள். விசாரணை ஆரம்பமாகியது.


உலகநாதனோ பிராமணன் எழுதிக்கொடுத்த பத்திரத்தை எடுத்துக் காட்டி அரசே நீங்களே பாருங்கள். கிணறு உட்பட வீட்டை விற்று விட்டதாக இதே பிராமணன் எனக்கு எழுதிக்கொடுத்ததை என்று சொன்னான்.

பொய் முழுப்பொய். இது மோசம். கிணறைத் தவிர என்றுதான் பத்திரத்தில் எழுதியிருக்கிறது என்று அன்று நீயும் சொன்னாய். உன்னுடைய கணக்குப்பிள்ளையும் சொன்னானே என்று ஆத்திரத்துடன் பிராமணன் கேட்டான்.

உலகநாதன் கேலியாகச் சிரித்துக் கொண்டே இதெல்லாம் உன் கற்பனை. நீ பத்திரத்தில் எழுதிக் கொடுத்தபடி கிணறு எனக்குத்தான் சொந்தம் என்றான் உலகநாதன். சிம்மநாதன் இதைக்கேட்டு சரி இந்த வழக்கின் தீர்ப்பை இன்னும் இரண்டு நாட்களில் சொல்லுகிறேன் என்றான்.

அரசே பத்திரத்தில் தெளிவாகக் கிணறு எனக்குச் சொந்தம் என்று இருக்கிறது. இதில் சிக்கலான விடயம் ஒன்றுமேயில்லை. ஆனாலும் உங்கள் தீர்ப்புக்குக் கட்டுப்படுகிறேன் என்று உலகநாதன் கைகூப்பி நமஸ்கரித்து விடைபெற்றுக் கொள்ளலானான். ஏனையவர்களும் அதேமாதிரி நமஸ்கரித்தார்கள்.

அப்போது சிம்மநாதன் அவர்களது கைவிரல்களைப் பார்த்து அடடே! இந்த மாதிரியான மோதிரங்களை உங்கள் ஊரிலா செய்கிறார்கள் என்று கேட்டான். அவர்களும் ஆம் அரசே! எங்களூர் தட்டான்கள் அதில் சாமர்த்தியசாலிகள் என்று உலகநாதன் உட்பட எல்லோரும் சொன்னார்கள். அப்படியா! அவைகளைக் கொஞ்சம் கழற்றிக் கொடுங்கள். நான் கூட அந்தமாதிரி செய்து கொள்ள முடியுமா என்று அரண்



மனை தட்டானை கேட்கிறேன். எனவே எல்லோரும் மோதிரத்தைக் கொடுத்துப்போனார்கள்.

அரசன் உடனே உலகநாதனின் மோதிரத்தை ஒரு சேவகன் வசம் கொடுத்து நீ சமரபுரிக்குப்போய் உலகநாதனின் கணக்குப் பிள்ளையிடம் சென்று பிராமணனின் வீடு வாங்கப்பட்ட வருடத்திய கணக்குப் புத்தகத்தை கேட்டு வாங்கிக் கொண்டு அவனையும் கூட்டிக் கொண்டுவா என்று கட்டளையிட்டான்.

அச்சேவகனும் அம்மோதிரத்தைக் கணக்குப்பிள்ளையிடம் காட்ட அவனும் புத்தகத்தை சேவகனிடம்



கொடுத்து அவனுடன் வந்தான். அரசர் கணக்குப்புத்தகத்தை பார்க்கவே கிரயம் செய்த மறுநாளே கணக்குப்பிள்ளைக்கு ஆயிரம்ரூபா கொடுத்ததாக எழுதியிருந்தது. உடனே சிம்மநாதன் அவனை மிரட்டி உண்மையைச்சொல். இந்த ஆயிரம்ரூபாவை உலகநாதன் உனக்கு எதற்குக்கொடுத்தார். நீ மட்டும் எதையாவது மூடி மறைத்தால் யானையின் காலினால் உன் தலையை மிதிக்கவைப்பேன். உண்மையைச்சொன்னால் விடுதலை! என்று மிரட்ட மிகவும் பயந்துபோன கணக்குப்பிள்ளை ஐயோ! மகாராஜா இந்த ஏழையை ஒன்றும் செய்துவிடாதீர்கள். உண்மையைச் சொல்கிறேன். அந்தப்பிராமணனுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. அதைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயன்ற என் முதலாளி பத்திரத்தை சாட்சிகளின் முன்னிலையில் பிராமணனுக்கு என்னைப் படித்துக்காட்டச் சொன்னார். பத்திரத்தில் மோசடியாக கிணற்றையும் சேர்த்து விற்பனை செய்யப்பட்டதாக எழுதிய நான் அதைப் படிக்கையில் கிணற்றைத்தவிர என்று படித்தேன். அதைப் பிராமணன் நம்பிவிட்டான் என்றான்.

மறுநாள் தர்பாரிலேயே உலகநாதனையும் பிராமணனையும் சிம்மநாதன் அழைத்தான். தீர்ப்பு தனக்குச் சாதகமாக இருக்கு மென்று நினைத்துவந்த உலகநாதன் தர்பாரில் தன் கணக்குப்பிள்ளையையும் கணக்குப்புத்தகத்தையும் கண்டு திடுக்கிட்டான். அவன் திருதிருவென்று முழிப்பதைக்கண்ட சிம்மநாதன் உன் குட்டு வெளிப்பட்டுவிட்டது. இன்னமும் நீ உண்மையைச் சொல்லமாட்டாயா? என்று கர்ச்சிக்கவே உலகநாதனும் தனது மோசச்செயலை ஒப்புக் கொண்டான். சிம்மநாதன் அந்த வீட்டையும் அந்தக்கிணறையும் பிராமணனுக்குக் கொடுத்துவிட்டு உலகநாதனின் சொத்தையெல்லாம் பறிமுதல் செய்துவிட்டான். உலகநாதனும் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு போனான். பஞ்சாயத்தாரும் தங்கள் தவறுதலுக்கு அரசனிடம் மன்னிப்புக் கோரினார்கள். அரசன் அவர்களையும் அந்தக் கணக்குப் பிள்ளையையும் மன்னித்து அனுப்பிவிட்டான். அப்போதுதான் அரசன் ஏன் தங்களிடமிருந்து மோதிரத்தை வாங்கிக்கொண்டான் என்று அவர்களுக்கு விளங்கியது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 35 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



சுழியன் செத்துக் கருமாதி முடியு முன்ன இன்னொரு கருமாயம் நடந்து போச்சு ஊருக்குள்ள. விவசாய நிலத்த வித்துட்டு, வீடு வாசல் விட்டுட்டுக் குடும்பத்தோட பட்டணம் போறாரு கோவிந்தநாயக்கரு. வீட்டு வாசல்ல கூடியிருச்சு ஒரு பெருங் கூட்டம்.

கட்டில் பீரோவுலயிருந்து அண்டா அருவாமணை வரைக்கும் ஒண்ணொண்ணா ஓடி விழுகுது லாரிக்குள்ள.

"நல்லது கெட்டதுக்கு நாலு பேருக்கு ஒதவி செஞ்ச மனுசன் ஊரவிட்டுப் போறாரப்பா. பரம்பரையாப் பொழச்ச குடும்பம் இன்னைக்கு அட்டணம்பட்டி விட்டுப் பட்டணம் போகுதுன்னா நெஞ்சுல நெருப்பு விழுகுதா இல்லையா? அவர் சம்சாரம் சங்கிலியம்மா மகாலச்சுமி. தவிச்சவாயிக்குத் தண்ணி தார மகராசி. இனிமே அவுக நெனச்சா நம்மளப் பாக்கலாம்; நாம நெனச்சா அவுகளப் பாக்க முடியுமா?"

பாதி எழவு வீடாகிப் போச்சு கோவிந்தநாயக்கரு வீடு.

"பூமிதானப்பா மனுசனுக்கு ஒரு புடிப்பு. நிலத்த வித்திருக்கப்படாது நாயக்கரு. அவரு நெலமய நெனச்சுப் பாத்தா வேற வழியும் தெரியல. ஒத்தமகன் அமெரிக்காவுல வெள்ளைக்காரியக் கலியாணம் பண்ணிக்கிட்டான். சொத்தும்வேணாம்; தொந்தரவும் வேணாம்னு ஒதுங்கிட்டான். ஒத்த மக மெட்ராசுல வேலை பாக்குது பேங்குல. மருமகன் பாவம் ஊர் ஊரா அலையிற உத்தியோகமாம். பிள்ளைய வச்சுப் பெரும்பாடு படுதாம். ஒத்தையில நான் இருக்கேன்; அத்துவானக் காட்டுல நீங்க இருக்கீக. விவசாயம் நல்லால்ல. விவசாயம் பண்ணவும் ஆளில்ல. காலம்போன கடைசியில உங்களுக்கு நான் துணை; எனக்கு நீங்க துணை. வந்துருங்க வந்துருங்கன்னு உசுர எடுத்துட்டா. போகுதுக பாவம் பொழப்ப அத்துக்கிட்டு"

## கண்ணை வித்துட்டுப் போற மாதிரி இருக்கப்பா மண்ண வித்துட்டுப் போறது

எல்லார் கண்ணுலயும் கண்ணீர் தேங்குது; இன்னும் சிந்தல.

"ஊரவிட்டுப் போறேன்னதும் உசுரு போயிருச்சு நாயக்கரே" கருத்தமாயி ஓடிவந்து திண்ணையில உக்காந்திருந்தவர ஆதரவா அணைச்சு நெஞ்சுல சாய்க்கவும் வாய்க்குள்ள வச்சிருந்த துண்டைத் துப்பிட்டுப் பொலபொலன்னு அழுக ஆரம்பிச்சிட்டாரு நாயக்கரு.

"வேற வழியில்ல கருத்தமாயி. கண்ணை வித்துட்டுப் போற மாதிரி இருக்கப்பா மண்ண வித்துட்டுப் போறது. திருமலை நாயக்கர் காலத்துல வந்து கையில கலப்பை புடிச்ச குடும்பம் எங்க குடும்பம். என்னோட அத்துப் போகுதப்பா அட்டணம்பட்டி ஒறவு"

"எப்படி அத்துப் போகும்? அண்ணன் தம்பிகளா நாங்கல்லாம் இங்க உசுரக் கையில் புடிச்சு ஒக்காந்திருக்காமா இல்லையா?"

"நல்ல சொல்லுச் சொன்னப்பா; நான் முந்திக்கிட்டா எனக்கு நீ வந்து மண்ணுத் தள்ளு. நீ முந்திக்கிட்டா உனக்கு மண்ணுத் தள்ள நான் இருக்கேன்"

"நெலத்த விக்காம இருந்தா இப்பிடி நெஞ்சு காஞ்சு போயிருக்க மாட்டீக நாயக்கரே!"

"வித்திருக்க மாட்டேன். உன் மகன் முத்துமணிதான் ஒத்தக்கால்ல நின்னு மில்லுக்காரன்கிட்டச் சொல்லிப் புஞ்சைக்கு நஞ்சை விலை வாங்கிக் கொடுத்தான்"



புரோக்கரு வேல வேற பாக்குறானா போக்கிரிப் பொறுக்கி பய? சுருக்குன்னுச்சு கருத்தமாயிக்கு.

வாடாமல்லி நிறத்துல பளிச்சுன்னு ஒரு பட்டுச்சேலை கட்டி நெறஞ்ச நெத்தியில ஒரு பெரும்பொட்டும் மூச்சுவிடாத மல்லிகை மொட்டுல கட்டுன அஞ்சாறு சரமும் வச்சு சங்கிலியம்மா வெளிய வரவும் சனமே அழுகுது.

"நீங்க [illegible] எங்களுக்கு வேற பொழப்பு இருக்கா?" [illegible] வராத காலத்துலயிருந்து அங்க வேலைபாத்த சீனியக்காவும் தோட்டம் தொரவு பாத்த பளிங்கனும் மடார்னு அந்தம்மா கால்ல விழுந்து அழுகுறாக. கண்ணு கலங்குது அந்தம்மாவுக்கும்; காமிக்கல.

பழைய சீல நாலு கொடுத்தா சீனியக்காவுக்கு. 'வச்சுப் பொழச்சுக்க'ன்னு கயித்தோட புடிச்சுப் பசுவும் கன்டுக்குட்டியும் கொடுத்தா பளிங்கனுக்கு.

ஒத்தை வீட்டு மூளிக்கு ஒரு கொடம். சாத்தா கோயில்பட்டிக் காரிக்கு அஞ்சாறு பஞ்சாரம். கருத்தமாயி கையில ஒரு பித்தளக் குத்து விளக்கு.

'பழைசக் கொடுக்கிறமேன்னு நெனைக்காதீக; மனசைக் கொடுக்குறோம்' திட்டுத்திட்டாக கொட்டுது தேங்குன கண்ணீரு.

நிமிந்து ஒக்காந்தாரு கோவிந்த நாயக்கரு. ஏத்த எறக்கம்மாத் தோள்ல கிடந்த துண்டை இழுத்துச் சரி செஞ்சாரு.

"அய்யா... எல்லாரையும் கும்புடறேன். வாய் வீணாப் பேசியிருப்பேன். வட்டிவாசி வாங்கியிருப்பேன். கூலி குறைச்சிருப்பேன்; கோயிலுக்குக் கொடை கொடுக்க மறுத்திருப்பேன். எல்லாரும் என்ன மன்னிச்சிருங்கய்யா. பரம்பரையா எங்க படப்படி இருக்குது; காலகாலத்துக்கு அதக் களமா அனுபவிச்சுக்குங்க; ஊருக்கே எழுதி வச்சிருக்கேன். வாயார நல்ல வார்த்தை சொல்லி என்ன வழியனுப்பி வையுங்கய்யா"

பேச்சு வரல யாருக்கும்.

[illegible] வடிச்ச சோத்தைக் [illegible]மாப் புடிச்சு ஒரு வாழையிலை விரிச்சுக் காக்காய்க்குப் படைக்கக் கொல்லைப் பக்கம் போறா சங்கிலியம்மா.

"போயிட்டு வாங் நாயக்கரே. அப்பப்ப வாங்க"

"ஆமா! வீட்டையும் நெலத்தையும் வித்துட்டுப் போற ஆளுக்கு ஊரு எங்க இருக்கு? ஆளு எங்க இருக்கு?

"நியாயமான பேச்சு. அப்படிப் பாத்தா ஏழெட்டுப் பேருக்கு ஊரு இல்லேன்னு போகப் போகுது நம்ம ஊருல"

"அது யாரப்பா அது?"

"பரமனாண்டி, கெடாவீரன், ஒத்தவீட்டு மூளி- மூணுபேரும் நெலத்தயும் கெரயம் பேசி முன் பணம் வாங்கிக் குடுத்துட்டான் முத்துமணி மில்லுக்காரனுக்கு."

"ஏப்பா பரமனாண்டி நெசமா?"

"நிலத்த நான் விக்க நெனைக்கலப்பா. அதுதான் என்னிய விக்கப் பாக்குது. ஏழு ஏக்கர் வாழை போட்டனப்பா. வாழ வைக்கும் வாழைன்னு நம்புனேன். 'வலுத்தவன் வாழை போடு; எளைச்சவன் எள்ளுப் போடு'-ன்னு சொலவம் இருக்கு. நான் எளைச்சவன். தெரியாம வாழை போட்டுட்டேன். இன்னைக்கு இத்துப் போயி நிக்கிறேன். குலை தள்ளி அறுவது நாள்ல வெட்டி வித்தாகணும் வாழைத்தார. குலை அடுத்தவாரம் வெட்டலாம்னு நெனைக்கறப்ப சடசடன்னு சரிஞ்சு போச்சு வாழத்தாரு வில. வெட்டுக் கூலி, சொம கூலி, லாரி வாடகை பதினாறு ரூவா; வாழத்தாரு வில பதினஞ்சு ரூவா. ஏற்கனவே வீட்டை ஒத்தி வச்சு விவசாயம் பண்ணுனவன். வெட்டி வித்து இன்னொரு கடன் படறதா? அருவா இருக்கிறவனெல்லாம் வெட்டிட்டுப் போங்கடான்னு சொல்லிட்டு ஆடு மாடு மேயவிட்டேன். ஆடுமாடு மேய்க்க வந்த தொரட்டிக்காரனெல்லாம் தாரு அறுத்துத் தோள்ல வச்சுட்டுப் போறான். இனியும் நான் வெவசாயம் பண்றேன்னு வச்சுக்குங்க. பொன்னுச்சாமிக்கு அடுத்த குழி என் குழி"

பரமனாண்டி பேச்சுக்கு யாரும் மறுபேச்சுப் பேசல.

(தொடரும்)

### வாழ்வோடு ஏன் விவாகரத்து



வயதாக ஆக
வாழ்வோடு ஏன் விவாகரத்து?
நெருங்கி வாருங்கள்
குழந்தையோடு கூடி விளையாடித்
திட்டமிட்டுத் தோற்றுப் போங்கள்
கண்ணிரண்டும் மூடித்
தொலைபேசி சுழற்றுங்கள்
எதிர்முனையில் எவர் வரினும்
அன்றைய விருந்துக்கழையுங்கள்
வீட்டுப் பிள்ளையர்க்கு விடுமுறைவிட்டு
நீங்கள் ஒருநாள் பள்ளி செல்லுங்கள்
இரண்டு புரியும் உமக்கு
ஒன்று: உங்கள் அறியாமை
இரண்டு: பிள்ளையர் பெருமை

-வைரமுத்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒகஸ்ட் மாதத்தில் வடக்கு தேர்தல்; 2015 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தல்

மத்திய மற்றும் வடமேல் ஆகிய இரு மாகாண சபைகளுக்குமான தேர்தலே மே மாத நடுப்பகுதியில் நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குற்றப்பிரேரணை மற்றும் அமைச்சரவை மாற்றத்திற்கு பின்னர் அரசாங்கம் தொடர்பில் மக்கள் கொண்டிருக்கின்ற நிலைப்பாட்டை பரிசோதிக்கும் வகையிலேயே இந்த இரு மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன.

இரு மாகாண சபைகளுக்குமான பதவிக் காலம் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நிறைவடையவிருக்கின்ற நிலையிலேயே 7 மாதங்களுக்கு முன்னர் இரு மாகாண சபைகளையும் கலைத்து தேர்தல் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனைத் தொடர்ந்து ஓகஸ்ட் மாதம் மேல் மற்றும் வட மாகாண சபைகளுக்கான தேர்தல்களையும் 2014 ஆம் ஆண்டு ஊவா மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலும் அதற்கு பின்னர் நாடாளுமன்ற தேர்தலையும் நடத்துவதற்கே அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறான திட்டத்தின் அடிப்படையிலேயே அமைச்சரவையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## கொழும்பு மெனிங் சந்தையில்

# புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய மஞ்சள், மிளகாய்த்தூள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பு மெனிங் சந்தையில் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய இரசாயனங்கள் அடங்கிய மஞ்சள் மற்றும் மிளகாய்த்தூள் விற்பனை செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இவற்றை விற்பனை செய்து வந்த சுமார் 8 கடைகள் மீது வழக்குத் தொடர கொழும்பு மாநகர சபை முடிவு செய்துள்ளது.

மனித பாவனைக்கு உதவாத உணவுகள் தொடர்பில் பரிசோதனை நடவடிக்கையொன்றை கொழும்பு புறக்கோட்டை பகுதியில் முன்னெடுத்த போதே இவை இனங்காணப்பட்டுள்ளன.

மஞ்சள் தூளில் மெடனில் எனப்படும் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய மஞ்சள் நிறப்பொடி கலக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதேபோல் மிளகாய்த்தூளிலும் நிறத்தை பிரகாசமாகக் காட்டக்கூடிய மனித பாவனைக்கு உதவாத இரசாயனம் கலக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன்போது அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த இரசாயனங்கள் அடங்கிய மஞ்சள் மற்றும் மிளகாய்த்தூள் அனைத்தும் மருத்துவ பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன. மஞ்சள் மற்றும் மிளகாய்த்தூள் வாங்கும் போது அவதானமாக இருக்கும்படியும் அங்கீகாரம் பெற்ற உற்பத்திகளை வாங்குமாறும் கொழும்பு மாநகர சபையின் மருத்துவ பிரிவு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (அ-2)

# உயர்தரப் பரீட்சையில் 4 வீதம் சித்தியடையவில்லை

## கல்வியமைச்சர் பந்துல தெரிவிப்பு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் இம்முறை 4 சதவீதமான மாணவர்கள் சித்தியடையவில்லை என்று கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற உயர்தர பரீட்சைக்கு 2 இலட்சத்து 52 ஆயிரம் பேர் தோற்றினர். அவர்களில் 4 சதவீதமானோரே சித்திடையவில்லை.

கலைத்துறையை விடவும் ஏனைய மூன்று துறைகளிலும் மாணவர்கள் கூடுதலான கவனத்தை செலுத்தும் வகையில் மாணவர்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# திருமண பதிவு கட்டணத்தில் திருத்தம் செய்யப்படவில்லை

## ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர்

(கொழும்பு)

திருமணப் பதிவுக்கான கட்டணத்தை குறைக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த அறிவுறுத்தல்களை திறைசேரி நடைமுறைப்படுத்தும் வரை பழைய கட்டணமான 5 ஆயிரம் ரூபாவே அறவிடப்படுமென ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் இ.எம்.குணசேகர தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு முன்மொழியப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் படி திருமணப் பதிவுக்கான கட்டணம் 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, காணிப் பதிவு மற்றும் விவாகப் பதிவுக்கான கட்டணங்களை குறைக்குமாறு சட்டத்தரணிகள் சங்கம், ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டதையிட்டு கட்டணங்கள் குறைக்கப்படுவது தொடர்பில் ஆலோசிக்கப்படுமென அவர் கூறியிருந்தார்.

இதன்படி ஜனாதிபதியின் விசேட பணிப்புரைக்கமைவாக திறைசேரி திருமணப் பதிவு கட்டணங்களில் திருத்தம் கொண்டு வந்தால் மட்டுமே கட்டணக் குறைப்பினை அமுல்படுத்தலாமெனவும் அதன் ஆணையாளர் தெரிவித்தார்.

திருமணப் பதிவுக்கான கட்டணம் 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமை பாரிய சுமையாகவிருப்பதாக பலரும் விசனம் தெரிவித்து வருகின்ற நிலையில் இக்கட்டணம் குறைக்கப்படுமா என்பது குறித்து விளக்கமளிக்கையிலேயே ஆட்பதிவு ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் திருமணப் பதிவுக்காக ஆட்பதிவுத் திணைக்களம் ஆயிரம் ரூபாவே அறவிட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் படி ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும் திருமணப் பதிவாளருக்கு ஆயிரத்து 500 ரூபாவுமாக மொத்தம் 5 ஆயிரம் ரூபா அறவிடப்படுகிறது.

இருப்பினும் நாட்டின் ஆதிவாசிகளின் திருமணப் பதிவு இலவசமாகவே முன்னெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 400 வீதிகளின் பெயர்கள் மாற்றம் செய்யப்படும்

கொழும்பின் 400 வீதிகள் பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளதாக கலாச்சார அமைச்சு தெரிவித்துள்ளது. கொழும்பு நகர எல்லைக்குட்பட்ட 300 வீதிகள் இவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் அவ்வமைச்சு குறிப்பிட்டுள்ளது.

384 வீதிகளின் பெயர்களை மாற்றம் செய்யுமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. சுதந்திரத்திற்கு முன்னர் பெயரிடப்பட்ட வீதிகளின் பெயர்கள் இவ்வாறு மாற்றம் செய்யப்படவுள்ளன.

சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கைக்கு பொருந்தக்கூடிய வகையில் பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளது. அதிகமாக பிரித்தானிய பெயர்களைக் கொண்ட வீதிகளே இவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளன.

இந்தப் பெயர்கள் தற்போதைய இலங்கைக்கு பொருத்தமற்றது எனவும் அது தொடர்பில் ஜனாதிபதியிடம் யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் கலாசார அமைச்சர் ரி.பி. ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# சேகுதாவூதிற்கு அமைச்சுப் பதவி! அமைச்சர் ரவூப் ஹக்கீம் அதிருப்தி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசை ஆலோசிக்காமல் பஷீர் சேகுதாவூத் எம்.பிக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அண்மையில் நடைபெற்ற கட்சியின் அதியுயர் பீடத்தில் அதிருப்தி தெரிவித்ததாக கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

பிரதியமைச்சராக இருந்து இராஜினாமா செய்த பஷீர் சேகுதாவூதிற்கு அமைச்சர் பதவி வழங்கியது குறித்து முஸ்லிம் காங்கிரசை சேர்ந்த சிலர் அதிருப்தி தெரிவித்திருந்தனர். இது குறித்து அரசியல் அதியுயர் பீடத்தில் ஆராயப்பட்டது.

அவருக்கு பதவி வழங்குவது தொடர்பாக அரசு தரப்பில் எவரும் முஸ்லிம் காங்கிரஸ் உடன் கலந்தாலோசிக்கவில்லை என்று தெரிய வந்துள்ளது. இது குறித்து கூட்டத்தில் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இதன் போதுதான் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் அதிருப்தி தெரிவித்தார். (அ-2)

# தேயிலை ஏற்றுமதி குறைவடைகின்றது

தேயிலை ஒரு கிலோவை ஏற்றுமதி செய்வதற்கான செஸ் வரி நூறு சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் ஏற்றுமதியாகும் தேயிலையின் அளவு படிப்படியாக குறைந்து வருவதாகவும் இதனால் இலங்கை தேயிலை தொழிற்துறை பாரிய சிக்கலை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சு, பெருந்தோட்ட அமைச்சு, இலங்கை தேயிலைச் சபை ஆகியவற்றுடன் கலந்தாலோசிக்காமல் செஸ் வரியை உயர்த்தியுள்ளதாகவும் இதேபோல் பலமுறை செஸ் வரி உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

300 மில்லியன் கிலோ தேயிலை கடந்த வருடம் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மூலம் 16 ஆயிரத்து 200 கோடி ரூபா வருமானமாக பெறப்பட்டது.

தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் போது ஒரு கிலோவுக்கு அறவிடப்படும் 12 ரூபா செஸ் வரியை 100 சதவீதம் அதிகரித்துள்ளமை நியாயமற்றது என பெருந்தோட்டத்துறை அமைச்சர் தெரிவிக்கின்றார். (அ-2)



டில்மா நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட தொண்டைமானாறு வெளிக்கள நிலையத் திறப்பு விழா கடந்த முதலாம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து நாடாவெட்டி கட்டடத்தை திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண ஆசிரியர் இடமாற்ற அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் வருடாந்த ஆசிரியர் இடமாற்றமும், சேவையின் தேவை கருதியுமே இவ்வாண்டுக்கான ஆசிரியர் இடமாற்றம் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய 1964 ஆம் ஆண்டிற்கு பின்னர் பிறந்த ஆண் ஆசிரியர்களும் 1969 ஆம் ஆண்டிற்கு பின்னர் பிறந்த பெண் ஆசிரியர்களும் தகுதியானவர்களாக தெரிவு செய்யப்பட்டு இடமாற்றக் கொள்கைகளுக்கு அமைவாக ஆசிரியர்களின் மேன்முறையீடுகள் பரிசீலிக்கப்பட்டு இடமாற்றம் வழங்கப்படவுள்ள ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சான்றிதழ்களை சமர்ப்பித்துள்ள ஆசிரியர்களுக்கு வடமாகாண சுகாதார அமைச்சு செயலாளரினால் நியமிக்கப்பட்ட மருத்துவ சபைக்கு முன்தோன்றி உரிய மருத்துவ சபையின் சிபார்சுக்கமைவாகவே இவ்விட மாற்ற சபையினால் இடமாற்ற மேன்முறையீடுகள் தீர்மானிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வருடாந்த இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படும் ஆசிரி யர்களின் விபரங்கள் வலய ரீதியாக வருமாறு,

கிளிநொச்சி வலயத்திலிருந்து 59 ஆசிரியர்களும் முல்லைத்தீவு வலயத்திலிருந்து 25 ஆசிரியர்களும் துணுக்காய் வலயத்திலிருந்து 36 ஆசிரியர்களும் மடு வலயத்திலிருந்து 14 ஆசிரியர்களும் வவுனியா வடக்கு வலயத்திலிருந்து 50 ஆசிரியர்களுமாக மொத்தம் 184 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இடமாற்றம் பெற்று வரும் ஆசிரியர்களுக்குப் பதிலாக இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களின் விபரம் வலய ரீதியாக வருமாறு,

யாழ்ப்பாண வலயத்திலிருந்து கிளிநொச்சி வலயத்திற்கு 18 ஆசிரியர்களும் முல்லைத்தீவு வலயத்திற்கு 4 ஆசிரியர்களும் துணுக்காய் வலயத்திற்கு 7 ஆசிரியர்களும் தீவக வலயத்திற்கு 2 ஆசிரியர்களும் வலிகாமம் வலயத்திலிருந்து கிளிநொச்சி வலயத்திற்கு 68 ஆசிரியர்களும் முல்லைத்தீவு வலயத்திற்கு 22 ஆசிரியர்களும் துணுக்காய் வலயத்திற்கு 18 ஆசிரியர்களும் மடு வலயத்திற்கு 6 ஆசிரியர்களும்,

வடமராட்சி வலயத்திலிருந்து கிளிநொச்சி வலயத்திற்கு 22 ஆசிரியர்களும் முல்லைத்தீவு வலயத்திற்கு 8 ஆசிரியர்களும் துணுக்காய் வலயத்திற்கு 15 ஆசிரியர்களும்,

தென்மராட்சி வலயத்திலிருந்து கிளிநொச்சி வலயத்திற்கு 13 ஆசிரியர்களும் முல்லைத்தீவு வலயத்திற்கு ஒரு ஆசிரியரும் துணுக்காய் வலயத்திற்கு 3 ஆசிரியர்களும்,

வவுனியா தெற்கு வலயத்திலிருந்து வவுனியா வடக்கு வலயத்திற்கு 14 ஆசிரியர்களுமாக மொத்தம் 221 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விடமாற்றங்கள் யாவும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்தப்படும். இவற்றிற்குரிய கடிதங்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் உரிய வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் உரிய ஆசிரியர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக சகல ஆசிரியர்களும் தமது புதிய கடமை நிலையத்தில் கடமை ஏற்பது கட்டாயமானதாகும். அத்துடன் இவ்இடமாற்றம் தொடர்பாக எவ்விதமான மேன்முறையீடுகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பதிலீட்டு இடமாற்றத்தில் செல்லும் ஆசிரியர்கள் தாம் புதிய நிலையத்தில் கடமையேற்ற திகதியிலிருந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்ததும் தமது நிரந்தர வலயத்திற்கு இடமாற்றம் பெறுவர் எனவும் தெரிவிக்கபட்டுள்ளது. (அ-9)

## மாவட்ட ரீதியில் அமைச்சுப் பதவிகள்?

இறுதியாக இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மாவட்ட ரீதியில் அதிக வாக்குகளை பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன் பிரகாரம் அவர்களுக்கு மாவட்ட அமைச்சர் என்ற ரீதியில் இப்பதவிகள் வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இந்நியமனங்கள் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்போது நாமல் ராஜபக்ஷ, லக்ஸ்மன் வசந்த பெரேரா, நிஷாந்த முத்துஹெடிகம உட்பட சிலருக்கு அமைச்சுப்பதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## கச்சதீவு புனித அந்தோனியாரிடம் செல்ல தமிழ் அமைப்பாளர்களுக்கு அனுமதி மறுப்பு

### இந்திய அரசு பணிப்பு

கச்சதீவில் இம்முறை நடைபெறவுள்ள புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் பங்கேற்க தமிழ் அமைப்பினருக்கு இந்திய அரசாங்கம் அனுமதி மறுத்துள்ளது.

ஆண்டுதோறும் நடைபெறும் கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழாவில் தமிழகம் மற்றும் இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொள்வர்.

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் இத்திருவிழா நடத்தப்படவில்லை. தமிழகத்தைச் சேர்ந்தவர்களும் அனுமதிக்கப்படவில்லை.

கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வரும் இத்திருவிழாவுக்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டத்தினரும் சென்று வருகின்றனர்.

ஆனால் இம்முறை கச்சதீவு செல்வோருக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

கச்சதீவு திருவிழா எதிர்வரும் 23, 24 ஆகிய இரு நாட்கள் நடைபெறுகின்றன. இதற்கான விண்ணப்பங்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது விண்ணப்பம் பெறுபவர்களுக்கு அடையாள சான்றிதழ் அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் சிவகங்கை, இராமநாதபுரம் தவிர பிற மாவட்டத்தினர் தடையில்லாச் சான்றிதழ் ஒன்றையும் தருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதேநேரத்தில் தமிழ் அமைப்பினர் எவருக்கும் கச்சதீவு செல்ல அனுமதியில்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது. (அ-2)

## இளமைக் காலத்தில் மகிழ்ச்சி அவசியம்

### இல்லையேல் இதயநோய் தாக்கும்

இளமைக் காலத்தை மகிழ்ச்சிகரமானதாக செலவிடாதோர் பெரும்பாலானோர் பிற்காலத்தில் இதயநோய்களுக்கு உட்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது.

இத்தகைய இதயநோய்த்தாக்கம் பெண்களுக்கே அதிகம் ஏற்படுவதாக அமெரிக்க ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

337 பேரை கொண்டு அமெரிக்க ஆய்வாளர்கள் மேற்கொண்ட பரிசோதனையின் மூலம் இந்த எச்சரிக்கையை அவர்கள் விடுத்துள்ளனர்.

ஏழு வயதில் உளவியல் ரீதியாக பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த பெண்கள் இதய நோய்த் தாக்கத்திற்கு உட்படுதல் நூற்றுக்கு 31 வீதமாக அதிகரித்துள்ளது.

இவ்வாறான ஆண்கள் இதயநோய்த் தாக்கத்திற்கு உட்படுதல் நூற்றுக்கு 17 வீதமாகவும் உள்ளது. (அ-2)

## நீதித்துறையில் புதிய நியமனங்கள்

நீதித்துறையில் உயர் பதவிகளுக்கு புதிய நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இடமாற்றம் பெற்ற நீதிவான்கள், நீதிபதிகளின் வெற்றிடங்களை நிரப்பும் வகையிலேயே புதிய நியமனங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இதன் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு புதிய செயலாளர் நியமிப்பதனால் ஏற்படும் வெற்றிடமும் நிரப்பப்படவுள்ளது. அத்துடன் நீதிச் சேவையின் முன்னாள் செயலாளர் மஞ்சுள திலகரத்ன மேலதிக நீதிவானாக நியமிப்படவுள்ளார்.

அது மட்டுமன்றி ஓய்வு பெறவிருக்கின்ற உயர் நீதிமன்ற நீதியரசரினால் ஏற்படவிருக்கின்ற வெற்றிடங்களை நிரப்பும் வகையிலும் புதிய நியமனங்கள் வழங்கப்படும். (அ-2)

## கிருமிநாசினிகளின் தவறான பயன்பாடே சிறுநீரக நோய்க்கு காரணம்-மைத்திரிபால

கிருமிநாசினிகளைக் கையாளும் முறையில் விவசாயிகளுக்குப் போதிய தெளிவில்லாததன் காரணமாகவே நாட்டில் சிறுநீரக நோய் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்ற விவசாயிகளின் நிகழ்வொன்றில் இது தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்தி இப்பாதிப்பிலிருந்து விவசாயிகளை பாதுகாக்க விசேட திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

இதற்கிணங்க கிருமிநாசினி விற்பனை, உபயோகம், கொள்வனவு செய்தல் போன்றவற்றிற்கு முறையான திட்டம் வகுக்கப்பட்டு விரைவில் நடைமுறைப்படுத்தவும் வர்த்தமானியில் அதனை வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கிருமிநாசினியை உபயோகித்துவிட்டு அந்தப் போத்தலை வயலில் ஒரு மூலையில் எறியும் போது அது தண்ணீரோடு கலத்தல், உபயோகித்த பின் கையை கழுவாமல் உணவு உட்கொள்ளல், புகைபிடித்தல், மக்கள் குளிக்கும் இடத்தில் கிருமிநாசினி கலன்கள், போத்தல்களை கழுவுதல் போன்ற அறியாமையான நடவடிக்கைகளே இப்பாதிப்புக்கு காரணமாகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விவசாய அமைப்புக்களுக்கு இது விடயத்தில் சிறந்த தெளிவு ஏற்படுத்தவும் புதிய சட்ட திட்டங்களை இது தொடர்பில் நடைமுறைப்படுத்தவும் துரித நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)



யா/ நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், மாணவர்கள் ஓட்டப்போட்டிக்கு தயாரான நிலையில் நிற்பதையும், மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழப்பிரச்சினையில் அயல்நாடு...



தமிழர்களின் ஆயுதம் தாங்கிய போராட்டம் (விடுதலைப்புலிகள்) தோற்கடிக்கப்பட்டு ஏறக்குறைய மூன்றேமுக்கால் ஆண்டுகள் ஆகிவிட்டன. எனினும் ஈழத்தமிழர் தொடர் பில் இந்தியாவின் நிலைப்பாட்டில் குறிப் பிட்டுச் சொல்லக்கூடிய திருப்பகரதமான மாற்றங்கள் எதையும் அவதானிக்க முடிய வில்லை. அண்மையில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு பேட்டிவழங்கிய சுரேஸ் பிரேமச்சந்திரன் இதைச் சுட்டிக்காட்டியிருந்தார். விடுதலைப் புலிகள் இல்லாத இன்றைய அரசியல் சூழலில் இந்தியா தன் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்தியாவின் மாறாத இந்நிலைப்பாட்டிற்கு காரணம் என்ன? விடுதலைப்புலிகள் தான் காரணம் என்றால், அவர்கள் அரங்கிலிருந்து அகற்றப்பட்டபின்னர் இந்தியா தன் நிலைப்பாட்டை மாற்றியிருந்திருக்க வேண்டும். எனவே, விடுதலைப்புலிகள் அல்லாத வேறொரு பலமான காரணமே இந்தியாவின் அணுகுமுறையை தீர்மானிக்கின்றது என்ற முடிவுக்கு வரலாமாயின் அது என்ன?

முதலில் ஈழத்தமிழர்கள் ஒன்றை விளங்கிக்கொள்ள முடிந்திருப்பின் நல்லது. ராஜீஜ உறவுகளில் சென்ரிமென்றகளுக்கு இடமில்லை. அவை அநேகமாக நலன்சார் உறவுகள்தான். இந்தியா ஈழத்தமிழர்களை தனது புவிசார் நலன்களுக்கூடாகவே பார்க்கிறது. தமிழர்களிடத்தில் அதற்கு தனிப்பட்ட ரீதியில் காதலோ வெறுப்போ கிடையாது. ஆனால், தமிழ்நாட்டில் இருக்கும் தமிர்களை தேர்தல் நோக்கு நிலையிலிருந்து கையாள வேண்டிய ஒரு தேவை இருக்கின்றது. ஆனால், தமிழ் நாட்டிற்கும் ஈழத்தமிழர்களுக்குமிடையில் உணர்ச்சிகரமான ஒரு பிணைப்பு உண்டு. இது காரணமாகவே ஈழத்தமிழர்களைக் கையாளும்போது தமிழ்நாட்டையும் கவனத்தில் எடுக்கவேண்டிய தேவை இந்திய மைய அரசுக்கு உண்டு. இதுகூட ஒரு நலன் சார்



அணுகுமுறைதான். கெடுபிடிப் போர்க் காலத்தில் அமெரிக்காவை நோக்கி சார்ந்திருந்த ஜெயவர்த்தன அரசாங்கத்தை வழிக்கு கொண்டு வரவேண்டிய தேவை மொஸ்கோவுக்கு நெருக்கமாக இருந்த இந்தியாவிற்கு ஏற்பட்டது. எனவே இலங்கை இனப்பிரச்சினையை அது கையில் எடுத்தது. இந்திய இலங்கை உடன்படிக்கை மூலம் தனது நோக்கம் நிறைவேற்றப்பட்டதும் அது இனப்பிரச்சினையை கைவிட்டது.


ஆனால், விடுதலைப்புலிகள் இயக்கம் விட்டுக்கொடுப்பின்றி போராடியதால் இந்தியாவின் நிகழ்ச்சிநிரல் குறிப்பிடத்தக்க அளவிற்கு குழம்பியது. கெடுபிடிப்போர் காலகட்டத்தின் இறுதிப் படைவிலகல்களில் ஒன்றாக ஐ.பி.கே.எஃவ் இன் படைவிலகல் அமைந்தது.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதோடு இந்தியாவிற்கும் தமிழர்களின் ஆயுதப்போராட்டத்திற்கும் இடையில் ஒரு சட்டபூட்டு, போடப்பட்டுவிட்டது. இதில் ஈழத்தமிழர்கள் குறித்து இந்தியாவின் தெரிவுகள் மிகவும் சுருங்கிக் காணப்பட்டன. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவரும் அதன் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளரும் இந்தியாவில் தேடப்படும் நபர்களாயினர். அதற்குப் பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தால் இந்தியாவோடு எத்தகைய ஒரு வெளிப்படையான உத்தியோக பூர்வ உறவையும் பேணமுடியாது போயிற்று. ராஜீவ் கொலை எனப்படுவது மெய்யான விளக்கத்தின் அடிப்படையில் ஒரு சட்ட விவகாரம் அல்ல. அது ஒரு அரசியல் விவகாரமே. ஆனால், இந்தியா அதை ஒரு சட்ட விவகாரமாகவே அணுகியது. அது ஒரு அரசியல் தீர்மானம்தான்.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நிலைமைகளை சீர்செய்வதற்குப் பல தடவைகள் முயற்சித்தார். குறிப்பாக ரணில் -பிரபா உடன்படிக்கையின்போது அவர் இந்தியாவில் வந்திறங்குவதற்கு அனுமதிக்கப்பட்டது. ஆனால், அதற்கு சட்டப்பூட்டு தடையாக இருந்தது. நாலாம் கட்ட ஈழப்போரை ஒட்டிய காலப்பகுதிகளிலும் பாலசிங்கம் சில முன் முயற்சிகளை மேற்கொண்டதாக கூறப்படுகின்றது. குறிப்பாக, இந்திய ஊடகமொன்றிற்கு ராஜீவ் கொலை தொடர்பில் இவர் வழங்கிய கருத்துக்கள் வன்னியில் பெரும் சர்ச்சையை கிளப்பின என்றும் அவர் தான் சார்ந்த இயக் கத்திற்கும் இந்தியா வின் புவிசார் நலன் களுக் குமிடையே போடப் பட்டிருந்த சட்டப் பூட்டைத் திறக்க முடியாத, ஆற்றாமை யோடும் நிராசையோடும் தான் அன்ரன் பாலசிங் கம் இறந்துபோனார் என்று அறியக்கி டைக்கிறது. நந்திக் கடற் கரையில் புலிகளின் வீழ்ச்சியோடு அந் தச் சட்டப்பூட்டு திறக் கப்பட்டது.

இப்பொழுது சப்ப் பூட்டு இல்லை ஆனாலும், இந்தியா அதன் அணுகு முறையை

# சட்டப்பூட்டு உடைக்கப்பட்டாலும் சட்டென்று மாறவில்லை;ஏன்?



மாற்றிக் கொள்ளவில்லை. ஏன்?

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு அரசல்லாத தரப்பாக (Nonstate) இருந்தபோதிலும் கூட இந்தப் பிராந்தியத்தில் சக்திமிக்க அரசுகளின் நிகழ்ச்சி நிரல்களை வெற்றிகரமாக பாதிப்புக்குள்ளாக்கியிருக்கிறது. முதலில் இந்திய இலங்கை நிகழ்ச்சிநிரல் குழப்பப்பட்டது. அதன் பின்னர் ரணில்– பிரபா உடன்படிக்கை முறிக்கும் விதத்தில் நிலைமைகளை நகர்த்தியதன் மூலம். அதாவது, ரணில் விக் கிரம சிங்காவை தோற்கடித் ததன் மூலம் மேற்கு நாடுகளின் நிகழ்ச்சி நிரலை குழப்பினார்கள். ரணில் தோற்கடிக்கப்பட்டபோது இலங்கைத் தீவில் மேற்கிற்கான கதவுகள் குறிப்பிடத்தக்க அளவற்கு மூடப்பட்டன. அதே சமயம் சீனாவிற்கான கதவுகள் அகலத் திறக்கப்பட்டன.

சீனாவின் செல்வாக்கு மண்டலத்துள் கொழும்பானது மேலும் ஈர்க்கப்படுவதை தவிர்ப்பதே அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் முன்னுள்ள சவால்களாகும். கொழும்பை முறிக்காமல் வளைத்தெடுக்க இவ்விரு நாடுகளும் முயற்சிக்கின்றன. இம் முயற்சியில் கொழும்பிற்கும் தனக்குமான நெருக்கத்தை தொடர்ந்தும் பேணுவதற் காகவே புதுடெல்லியானது தமிழர்களிட மிருந்து விலகி நிற்பதாக காட்டிக்கொள்ள முற்படுகின்றது.

இது காரணமாக நந்திக்கடலில் சட்டப்பூட்டு உடைக்கப்பட்ட பின்னரும் இந்தியாவானது அதற்கு முன் கடைப்பிடித்த அதே அணுகு முறையைத்தான் தொடர்ந்தும் கடைப் பிடித்து வருகின்றது. இலங்கைத் தீவல் மேற்குநாடுகளின் நிகழ்ச்சிநிரல் குழப்பப்பட்டதால் உடனடியாக அதிகம் நன்மைபெற்ற தரப்பாக சீனாவே காணப்படுகிறது.

ஆனால், எந்த நோக்கத்திற்காக புதுடெல்லியானது கொழும்பை தொடர்ந்து ஆரத்தழுவி வருகன்றதோ அந்த நோக்கத்தில் இன்று வரையிலும் அவர்களால் பூரணவெற்றியைப் பெறமுடியவில்லை. இதனால், இடையிடை சில மென் அழுத்தங்களை பிரயோகித்த போதிலும்கூட இலங்கை தொடர்பான அதன் அணுகுமுறையில் அடிப்படை மாற்றங்கள் எதுவும் தென்படவில்லை. கடந்த மார்ச்மாதம் இந்தியா, ஜெனிவாவில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக கொண்டுவந்த பிரேரணையை ஆதரித்தது எனினுனம் சில பல ஊடல்கள், முகமுறிவுகள் போன்ற எல்லாவற்றிற்கும் அப்பால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தேனிலவு முறியாது தொடர்கிறது.

இந்த இடத்தில் ஈழத்தமிழிர்கள் ஒரு ராஜீய யதார்த்தத்தை விளங்கிக்கொள்வது நல்லது. இந்தியாவோ அமெரிக்காவோ சீனாவோ எந்தவொரு சக்திமிக்க நாடும் இலங்கை அரசாங்கத்தைத்தான் ஒரு மையமாகக் கருதுகின்றன. தமிழர்களையல்ல. இலங்கை அரசாங்கத்தை கையாள்வதில் நெருக்கடிகள் ஏற்படும் போது தமிழர்களை ஒரு கருவியாகப் பயன்படுத்தி அரசாங்கத்தை வழிக்குக் கொண்டு வருவதே இலங்கைத் தீவின் நவீன வரலாற்றின் பெரும்போக்காய் உள்ளது. இப்போக்கில் அவ்வப்போது சிறுவிலகல்கள் ஏற்பட்டிருந்தாலும்கூட தமிழர்களை ஒரு மையமாக கருதி கையாள்வது என்பது ஒரு பலமான போக்காகவே காணப்படவில்லை. இந்திய இலங்கை உடன்படிக்கை என்பது தமிழர்களைஒருமையமாகவேபொருட்படுத்த வில்லை. ஆனால், ரணில்–பிரபா உடன் படிக்கையானது தமிழ் மையத்தை ஏற்றுக்கொண்டது. ஆனால், அது மேற்கு நாடுகளின் அணுகு முறைதான். இந்தியா இயன்றளவும் கொழும்பைத்தான் ஒரு மையமாக கருதுகிறது.

எனவே, கொழும்பை வென்றெடுப்பதற் காக அவ்வப்போது தமிழர் பிரச்சினை கையிலெடுக்கப்படுகிறது. மேலும் தமிழ்நாட்டில் மைய அரசுக்கு எதிரான உணர்வலைகள் அதிகரித்து வருவதையும் அவர்கள் கவனத்தில் எடுக்கவேண்டியுள்ளது.

வன்னியில் விடுதலைப்புலிகள் ஒரு மையத்தை கட்டியெழுப்பினார்கள். ஆனால், அது நந்திக்கடற்கரையில் தகர்க்கப்பட்டு விட்டது. அது அதிக பட்சம் படைத்துறைப் பரிமாணங்களைக்கொண்ட ஒரு மையம். குறைந்தளவு சர்வதேச அங்கிககாரமே அதற்கு இருந்தது. அதற்கு பிரதான காரணம் இந்தியா தான். இந்தியாவிற்கும் விடுதலைப் புலிகளின் (பாதி) பூரணத்துவப்படுத்தப்படாத அரசிற்கும் இடையிலிருந்த சட்டப்பூட்டின் விளைவாக அதற்கு குறைந்தளவு சர்வதேச அங்கீகாரமே கிடைத்தது. ஆனால், இப்பொழுது தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு ஒப்பீட்டளவில் விடுதலைப்புலிகளைவிடவும் கூடுதலான சர்வதேச அங்கீகாரம் உண்டு. தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஜனநாயக இருப்பே இதற்குக் காரணம்.

ஜனநாயக ரீதியாக தெரிந்தெடுக்கப்பட்ட அமைப்பு என்பதே அதன்பிரதான பலமாகும். ஆனால், அது தன் பலத்தையும் வரலாற்றுப் பாத்திரத்தையும் எந்தளவுக்கு விளங்கி வைத்திருக்கிறது? இலங்கைத் தீவில் தன்னை ஒரு தவிர்க்கப்படவியலாத மையமாகக் கட்டியெழுப்பும் விதத்தில் அதன் நிகழ்ச்சி நிரல் காணப்படுகிறதா? இந்தியாவுக்கும் தனக்கும் உள்ள சுமுகமான உறவை *தங்குநிலை* உறவு என்ற நிலையிலிருந்து நலன்சார் *பரஸ்பர உறவு* என்ற வளர்ச்சியை நோக்கி இட்டுச்செல்லவல்ல தீர்க்க தரிசனமும் உரிய நிகழ்ச்சிநிரலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உண்டா?

13வது திருத்தச் சட்டத்தைக் கடந்துபோவதென்றால் இந்தியா தமிழர்களை ஒரு மையமாகக் கருதினால்தான் அது முடியும். ஈழத் தமிழர்களை இந்தியா ஒரு மையமாக கருதினாற்றான் உலக சமூகம் அவ்விதம் செய்யும். இந்தியாவை மீறி ஈழத்தமிழர்களை யாரும் தத்தெடுத்துவிட முடியாது. தென்னாசியாவின் புவிசார் அரசியல் யதார்த்தம் அது. இந்திய– இலங்கை உடன்படிக்கை கைச்சாத்தாகி ஏக்குறைய இரண்டு தசாப்தங்களின் பின்னரே யாழ்ப்பாணத்தில் இந்தியாவின் துணைத் தூதரகம் திறக்கப்பட்டது. கலை பண்பாட்டுத் தளங்களில் அது ஓர் இடை ஊடாட்ட மையமாகத் திகழ்வதற்கு இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. தமிழர்களின் அபிப்பிராயத்தை உருவாக்க வல்ல, படித்த, நடுத்தர வர்க்கத்தின் இதயத்தை அது மேலும் நெருங்கிச் செல்ல வேண்டியிருக்கிறது.

முன்பொரு காலம் யாழ்ப்பாணத்தின் பல மத்திய வகுப்பு மக்களின் வீடுகளிலும் சலூன்களிலும் சன சமூக நிலையங்களிலும் இந்திய தலைவர்களான காந்தி, நேரு, நேத்தாஜி மற்றும் ஆன்மீக வாதிகளான சுவாமி விவேகானந்தர், ரமணர் போன்றோரின் படங்கள் கொழுவப்பட்டிருந்தன. அப்பொழுது யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகம் இருக்கவில்லை. இப்பொழுது யாழ்ப் பாணத்தில் விசா வழங்கும் அந்தஸ்துடைய துணைத் தூதரகம் உண்டு. ஆனால் யாழ்ப்பாணத்தின் கல்வீடுகளில் காந்தி, நேரு போன்றோரின் படங்களைக் காண முடிவ தில்லை.

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் பாதிக்கப்பட்டோரை பயன்படுத்தி நிதி சேகரிப்பு

(முல்லாவி)

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது படுகாயமடைந்துதமது உடல் இயக்க சக்தியை இழந்த பொது மக்களையும் தாய், தந்தையை இழந்த சிறுவர்களையும் பராமரிக்க உதவுவதாக கூறி அவர்கள் பற்றிய தரவுகளையும் புகைப்படங்களையும் மருத்துவ சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளையும் உள்நாட்டு, வெளிநாட்டு ஒருசில பொது அமைப்புக்கள் எடுத்துச் செல்வதாக சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் ஆவணங்களைப் பயன்படுத்தி புலம்பெயர் உறவுகளிடம் இருந்து நிதி திரட்டிய போதும் பாதிக்கப்பட்ட தமக்கு அவை கிடைப்பதில்லை என பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தெரியவருவது,

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின் போது எறிகணை வீச்சின் போது படுகாயமடைந்து இன்று தமது அவயவங்களை இழந்ததுடன் உடலின் இயக்க சக்தியை இழந்தவர்களிடமும் தாய், தந்தையை இழந்த சிறுவர்கள் உள்ள வீடுகளை நோக்கி செல்லும் மேற்படி நபர்களே இச்செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. புலம்பெயர்ந்தவர்களிடம் இருந்து திரட்டிய நிதி மூலம் தமக்கு எவ்வித உதவியும் கிடைப்பதில்லை எனவும் குற்றம் சாட்டுகின்றனர்.

பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதையாக இச்செயற்பாடு காணப்படுகின்றது.

எனவே புலம்பெயர் உறவுகள் இப்போலியானவர்களிடம் உதவித் திட்டங்களை வழங்காது நேரடியாக தமக்கு கிடைக்கக்கூடியதாக அவ் உதவிகளை வழங்கி உதவினால் தாங்கள் மிகவும் பயன்பெற முடியும் எனவும் மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-3-15)

# தமிழர்கள் தம் மரபுகளை அனுஷ்டிக்கும் மாதம் தை

## கனேடிய பாராளுமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பு

தை மாதத்தின் 31ஆம் திகதியை தமிழ் மரபுத் திங்கள் ஆக நாடளாவிய ரீதியில் பிரகடனப்படுத்துவதற்குரிய சட்டமூலம் முதற்தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசனால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

கனடாவில் தமிழர்கள் சமூகம், கலாசாரம், பொருளாதாரம், அரசியல் எனப் பல்வேறு துறைகளிலும் தம்மை நிலை நிறுத்திக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அவர்களுடைய அடைவுகளையும் சமூக ஈடுபாட்டையும் கொண்டாடுவதற்குரிய நல்லதொரு வாய்ப்பாக இது அமையும் எனவும் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தை மாதம் தமிழர்களுக்கு மிகவும் முக்கியமானதொரு மாதமாகும். தமிழர் புத்தாண்டான தைப்பொங்கலுக்குரிய மாதம் இதுவாகும்.

எனவே இந்தச் சட்டம் மூலமானது தை மாதத்தினை நாடளாவிய ரீதியில் தமிழர் மரபுகளை அனுஷ்டிப்பதற்குரிய அங்கீகாரமாக அமையும் எனவும் அவரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் இந்த சட்ட மூலத்தை சமர்ப்பிப்பதையிட்டு பெருமையடைகின்றேன். மேலும் இந்த அங்கீகாரமானது தமிழர் மரபுகளை கௌரவப்படுத்துவதோடு இங்குள்ள தமிழ்க் கனேடியர்களுக்கிடையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் மாதமாகவும் அமையும் எனவும் கூறப்பட்டது. (அ-2)

# உடலும் உள்ளமும் வலுப்பெற கல்வியும் விளையாட்டும் அவசியம்

## பிரபல வர்த்தகர் ஈ.எஸ்.பி.நாகரட்ணம்

(யாழ்ப்பாணம்)

கல்வியுடன்விளையாட்டும்இணைந்திருக்கும் போது தான் உடல், உள ஆரோக்கியம் சிறப்பானதாக இருக்கும் என பிரபல வர்த்தகர் கல்விக் காருண்யம் ஈ.எஸ்.பி.நாகரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்/நல்லூர் சென். பெனடிக்ற் றோ.க.த.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் அருட்சகோதரி எம்.ஞானதர்ஷினி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அங்கு அவர் உரையாற்றுகையில்,

மாணவ பருவத்தினருக்கு ஆரம்ப கல்வி மிக முக்கியமானதொன்று. அவர்களின் வளர்ச்சியை சரியாக தீர்மானிக்கும் பருவமும் அது தான். சிறுவயது தொடக்கம் கல்வியுடன் விளையாட்டையும் சேர்த்து அவர்களுக்கு பழக்கி வந்தால் மட்டுமே அவர்கள் தலைசிறந்த மாணவர்களாக பின் நாளில் மிளிர முடியும்.

நல்லதோர் உடற்பயிற்சி உடல் உறுப்புக்களை பாதுகாத்து ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

எனவே அதற்கான அடித்தளத்தை ஆரம்ப பாடசாலைகள் சரிவர ஏற்படுத்தி மாணவர்களின் எதிர்காலத்தை சிறப்படையச் செய்யவேண்டும்.

இதற்காக விளையாட்டு ஆசிரியர்களின் வளங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார். இவ் விளையாட்டு நிகழ்வில் யாழ் தேசிய கல் வியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன், அருட்தந்தை ஏ. கொன்பியுசியஸ் மற்றும் யாழின் பல பாடசாலைகளின் அதிபர்கள் உள்ளிட்ட பலர் அதிதிகளாக கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-செ)




★ 1783 - ஐக்கிய அமெரிக்கா மீது தனது அனைத்துத் தாக்குதல்களையும் நிறுத்துவதாக ஐக்கிய இராச்சியம் அறிவித்தது.

★ 1789 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதியாக ஜோர்ஜ் வோஷிங்டன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

★ 1794 - பிரெஞ்சுக் குடியரசு முழுவதும் அடிமைத் தொழில் சட்டவிரோதமாக்கப்பட்டது.

★ 1810 - கரிபியன் தீவுகளான குவாட்லூரப் பிரித்தானியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

★ 1834 - இலங்கையின் ஆங்கிலப் பத்திரிகை சிலோன் ஒப்சேர்வர் முதன் முதலாக வெளியிடப்பட்டது.

★ 1859 - கிரேக்க பைபிளின் 4ஆம் நூற்றாண்டுக் கையெழுத்துப்படி ஒன்று எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1899 - பிலிப்பைன்ஸ்-அமெரிக்கப் போர் ஆரம்பமானது.

★ 1932 - இரண்டாம் உலகப் போர்: சீனாவின் ஹார்பின் நகரை ஜப்பான் பிடித்தது.

★ 1936 - முதற்தடவையாக ரேடியம் என்ற செயற்கைக் கதிரியக்க மூலகம் உருவாக்கப்பட்டது.

★ 1943 - இரண்டாம் உலகப் போர்: ஸ்டாலின் கிராட் போர் முடிவுக்கு வந்தது.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட், பிரித்தானிய பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில், ரஷ்யத் ஜனாதிபதி ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் உக்ரேனில் யால்ட்டா மாநாட்டில் சந்தித்தனர்.

★ 1948 - இலங்கை ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1966 - ஜப்பான் போயிங் விமானம் டோக்கியோவில் வீழ்ந்ததில் 133 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1976 - குவாத்தமாலா மற்றும் ஹொண்டூராஸ் நிலநடுக்கத்தில் 22ஆயிரம் பேர் இறந்தனர்.

★ 1978 - இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக ஜே.ஆர் ஜெயவர்த்தன பதவியேற்றார்.

★ 1997 - இஸ்ரேலில் இரண்டு உலங்குவானூர்திகள் வானில் மோதியதில் 73 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1998 - ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற 6.1 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 5 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 2003 - யூகொஸ்லாவியா அதிகாரபூர்வமாக சேர்பியா மற்றும் மொண்டெனேகுரோ எனப் பெயர் மாற்றம் பெற்றது.

★ 2007 - ஒலியை மிஞ்சிய வேகத்தில் செல்லும் ரஷ்ய-இந்திய பிரமாஸ் ஏவுகணை ஒரிசா ஏவுதளத்தில் இருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டது.

★ 2007 - பங்களாதேசத்தில் இடம்பெற்ற உலகின் மிகப்பெரிய கூட்டுப் பிரார்த்தனையில் 3 மில்லியனுக்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

### பிறப்புகள்

★ 1913 - றோசா பாக்ஸ், ஓர் ஆபிரிக்க, அமெரிக்க குடியுரிமைகள் செயற்பாட்டாளர் (இ.2005)

★ 1921 - கே.ஆர்.நாராயணன், இந்தியாவின் ஜனாதிபதி (இ.2005)

### இறப்புகள்


★ 1747 - வீரமாமுனிவர், இத்தாலியத் தமிழறிஞர் (பி.1680)

★ 1928 - ஹெண்ட்ரிக் லோரெண்ட்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி.1853)

★ 1974 - சத்தியேந்திரா போஸ், இந்திய இயற்பியலாளர் (பி.1894)

### சிறப்பு நாள்

இலங்கை சுதந்திரதினம் (1948)



இலங்கை

இந்து சமுத்திரத்தின் மத்தியில் இந்தியாவிற்கு தெற்கே அமைந்துள்ள மாங்காய் வடிவிலான தீவாகும். இத்தீவு 3 பெரும் நிலப்பரப்புக்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன, கரையோர தாழ் நிலம், உட்புறசமவெளி, மத்திய மலைநாடு என்பனவாகும்.

சிறிய தீவாக இருக்கின்ற போதும் சுமார் 2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்ட வரலாற்றைக் கொண்டது.

இலங்கை வரலாற்றைக் கூறும் நூல் மகாவம்சமாகும். இலங்கைத் தீவின் தற்போதைய அதிகாரபூர்வ பெயர் இலங்கை ஜனநாயக சமத்துவக் குடியரசு.

இலங்கைத்தீவானது 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை பெற்றது. இதன் தலைநகரம் சிறிஜயவர்த்தனபுர.

தற்போதைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் தி.மு.ஜயரட்ண ஆட்சியில் உள்ள மொழிகள் சிங்களம், தமிழ் ஆகும். மதங்கள் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிஸ்தவம் என்பனவாகும்.

இந்நாடானது 9 மாகாணங்களாகவும் 25 மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற 57 ஆவது குடிமதிப் பீட்டின்படி 20 மில்லினய் 277 ஆயிரத்து597 மக்கள் வாழ்கின்றனர். இம்மக்களின் முக்கிய பொழுது போக்குகளில் ஒன்றாக திரைப்படங்கள் விளங்குகின்றன.

தேசிய மரம் –நாகமரம், தேசிய பறவை– காட்டுக் கோழி, தேசிய மலர்– நீலோற்பலம் (நீலஅல்லி), தேசிய மிருகம்– மரஅணில், தேசிய விளையாட்டு– கரப்பந்தாட்டம். இந்த இலங்கைத்திருநாட்டின் 65 ஆவது சுதந்திர தினம் இன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அரசகாணிகள் பயன்பாட்டுக்கு ஆளுநரின் அனுமதி பெறப்படவேண்டும்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்திலுள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளை பயன்படுத்துவதற்கு ஆளுநரின் அனுமதி பெறப்படவேண்டும் என்ற புதிய சுற்றுநிருபம் அமுல்படுத்தப்படவுள்ளது. இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,**

வடமாகாணத்திலுள்ள சகல அரச காணிகளையும் பயன்படுத்துவது தொடர்பில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் புதிய நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த நடைமுறை தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றுநிருப கடிதம் வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்ட செயலாளர்களுக்கும் சகல பிரதேச செயலாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் உடனடியாக அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இதற்கமைய வடக்கிலுள்ள சகல அரச காணிகளையும் பயன்படுத்துவது தொடர்பில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் விசேட அனுமதி கட்டாயம் பெறப்படவேண்டும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வுவுனியா, ஆகிய ஐந்து மாவட்டங்களிலுள்ள அரசகாணிகளைப் பயன்படுத்துதல், வாடகை, குத்தகைக்கு முதலீடுகளுக்காக கொடுத்தல் மற்றும் இதுவரை காலம் வழங்கப்பட்ட காணிகளை மீளப்பொறுப்பேற்றல் போன்ற சகல சந்தர்ப்பங்களிலும் வடமாகாண ஆளுநரின் விசேட அனுமதியைப்பெற்றே கொடுத்தல் மற்றும் மீளப்பெறவேண்டும் என்றும் ஆளுநரின் கையொப்பமிடப்பட்ட சுற்றறிக்கை கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடமாகாண அரசகாணிகள் தொடர்பில் முறையாக ஒரு நடைமுறையை கையாளும் பொருட்டே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய மேற்படி நடைமுறையை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கத் தீர்மானித்துள்ளதாக வடமாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்திலுள்ள இராணுவம் , கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸாரும் அரச காணிகளை பயன்படுத்துவது தொடர்பில் இந்த நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

இதற்கமைய அரசகாணிகளை வாடகை, குத்தகை, அலுவலகச் செயற்பாடுகள், முதலீட்டு நடவடிக்கைகளுக்கு வழங்குபவர்கள், பிரதேச கிராமசேவகர், பிரதேச செயலாளர், அரசாங்க அதிபரின் ஊடாக தனது அனுமதியை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்த அவர், இவ்வாறு முறையான அனுமதியைப் பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப்பயன்படுத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நடைமுறை தொடர்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய ஐந்து மாவட்ட செயலாளர்களுக்கும் தொலைபேசி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 6ஆம் திகதி ஆளுநர் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு மேலதிக விளக்கங்களை வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை வடமாகாணத்தில் ஏற்கனவே வாடகை, குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள அரச காணிகள் தொடர்பில் விரிவான விபரங்களை திரட்டி அது தொடர்பில் ஆராய்ந்து அவைகளை உரியமுறையில் வழங்கப்படாதவிடத்து அது தொடர்பில் சரியான முறையை கையாண்டு தொடர்ந்தும் வழங்குவது தொடர்பில் தான் தீர்மானிக்கவுள்ளதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

மேற்படி நடவடிக்கையின் மூலமே அரச காணிகளின் பயன்பாடுகள் தொடர்பில் உரிய முறையில் கண்காணிக்க முடியும் என்றும் காணிவிடயங்கள் தொடர்பில் எழுப்பிய பிரச்சினைகளை கட்டுப்படுத்தவும் முடியும் என்றும் மேலும் தெரிவித்தார்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பில் அரசுசார்பான ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

இருப்பினும் குறித்த சுற்றுநிருபம் உத்தியோகபூர்வமாக தமக்கு இன்னும் கிடைக்கவில்லை என பிரதேச செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தெரிவித்தனர்.

இருப்பினும் மேற்படி நடைமுறை விரைவில் அமுலுக்கு வரவுள்ளது எனத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் பிரதேச செயலாளர்களினால் கூறப்பட்டது.

மேற்படி சுற்றுநிருபம் தொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் அறியமுற்பட்டபோதும் அவரது தொலைபேசியுடன் இணைப்பை ஏற்படுத்த முடியவில்லை.

மேலும் போருக்குப்பின்பு வடக்கு மாகாணத்தில் காணிப்பிரச்சினை பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (அ-6)

## தேசிய மட்டத்தில் இரண்டாமிடம்



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ஆங்கில தினப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் உதயகுமாரன் விதுஷன் மனனம் செய்து ஒப்புவித்தலில் (Recitation) இல் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் நடைபெற்ற மாகாண மட்டப் போட்டியில் முதல் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## சீன தூதரகத்திற்கு கொழும்பில் காணி

(கொழும்பு)

சீன தூதரகத்திற்காக கொழும்பு 7 இல் உள்ள 122 பேர்ச்சஸ் நிலம் ஒன்று எவ்வித வரிகளும் இன்றி வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இந்த நிலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் நேரடி உத்தரவின் பேரில் வெளிநாட்டவர்களுக்கு நிலம் கொள்வனவு செய்யும் போது கடைப்பிடிக்கப்படும் எந்த நியமங்களும் இன்றி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து எதிர்க்கட்சியினால் இந்த வாரத்தில் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பப்படும் என்று அந்த கட்சி தரப்புக்கள் தெரிவித்துள்ளன. (அ-2)

## சுதந்திர தினத்தில் ஆயிரம் கைதிகளுக்கு மன்னிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 65 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆயிரம் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் டபிள்யூ. கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆயிரம் கைதிகள் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலை உள்ளிட்ட 33 சிறைகளில் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பாலியல் வன்கொடுமை ,சிறுவர் துஷ்பிரயோகம், சுங்கமோசடி, பயங்கரவாத தடைச்சட்டத்தை மீறியமை உள்ளிட்ட 27 குற்றச் செயல்களுடன் தொடர்புபடாத ஏனைய குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இரண்டாண்டு கால சிறைத்தண்டனை அனுபவிக்கும் கைதிகளின் தண்டனைக்காலம் இரண்டு வாரங்களினாலும் மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனை அனுபவிக்கும் கைதிகளின் தண்டனைக்காலம் மூன்று வாரங்களினாலும் குறைக்கப்படவுள்ளது.

அபராத பணத்தைச் செலுத்த முடியாது தண்டனை அனுபவித்து வரும் கைதிகளே அதிகளவில் விடுதலை செய்யப்படவுள்ளனர். (அ-2)

## வன்னேரிக்குளவீதி புனரமைக்கப்படவில்லை

(புளியம்பொக்கணை)

அக்கராயன் சந்தியிலிருந்து வன்னேரிக் குளம் நோக்கி செல்லும் பிரதான வீதி புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுவதால் பயணம் செய்யமுடியாத அவல நிலை காணப்படுகின்றது.

10 கிலோமீற்றர் தூரங்கொண்ட வீதி மீள்குடியேற்றம் செய்யப்பட்டபின்பும் இன்னும் திருத்தப்படாமையால் பயணம் செய்வதில் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இப்பிரதான வீதியையே வன்னேரிக் குளம், ஆனைவிழுந்தான் ஆகிய பகுதி மக்கள் தமது பயணப்போக்குவரத்திற்காக பயன்படுத்துகின்றனர்.

அத்துடன் அக்கராயன் வைத்தியசாலைக்கு அவ்வீதியூடாக நோயாளர் காவு வண்டியும் பயணம் செய்கின்றது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டுஇவ்வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-263)

## கடலில் தத்தளித்த 138 பேரை கடற்படையினர் காப்பாற்றினர்

அம்பாறை ஒலுவில் கடல் பிரதேசத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த பங்களாதேஷ், மியன்மார் நாடுகளைச் சேர்ந்த 138 பேரை இலங்கை கடற்படையினர் காப்பாற்றியுள்ளனர்.

எனினும் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் பங்களாதேஷில் இருந்து அவுஸ்திரேலியாவுக்குச்சென்று கொண்டிருந்த குறித்த குழுவினர் நேற்று முன்தினம் ஒலுவில் கடலில் 70 மைல்களுக்கு அப்பால் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த போதே கடற்படையினரால் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் எட்டுவயதுக்குட்பட்ட சிறுவர்கள் 8 பேரும் பெண்கள் 3 பேரும் உள்ளடங்குகின்றனர். அத்துடன் உணவின்றி ஒருவர் இறந்துள்ளார். மேலும் மயக்கமுற்ற நிலையில் 2 பெண்கள் உட்பட 6 பேரை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் நான்கு நாட்களாக உணவுகள் இன்றி நடுக்கடலில் இருந்திருப்பதாக கடற்படையினரின் ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)



யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட புத்தூர் மக்கள் வங்கி நீடித்த கருமபீட முகாமையாளர் திருமதி ஞானேஸ்வரி செல்வராஜா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் விழா நாயகர்கள், அதிபர், ஆசிரியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்க்குண்டுத் தாக்குதல்; முப்பது பேர் பலி

(கிர்குக்)

ஈராக்கின் வடக்கில் அமைந்துள்ளது கிர்குக் நகரம் பொலிஸ் தலைமையகத்தை சுற்றி வளைத்த போராளிக்குழு நேற்றுக் காலை துப்பாக்கி மற்றும் கையெறி குண்டுகளைக் கொண்டு தாக்குதல் நடத்தினர். அப்போது குண்டுகள் நிரப்பப்பட்ட காரை செலுத்தி வந்த தற்கொலைப் படைப் போராளி அந்த கட்டடத்தின் மீது மோதியுள்ளான்.

இத்தாக்குதலில் வீதியில் சென்று கொண்டிருந்த பொது மக்கள் 30 பேர் கொல்லப்பட்டதுடன் 70 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். கட்டடம் முழுவதும் உடைந்து சிதைந்து போயின. இருந்தும் அவர்களால் பொலிஸ் தலைமையகத்தை கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியவில்லை.

இந்தத் தாக்குதல் குறித்து எந்த இயக்கமும் பொறுப் பேற்கவில்லை. ஆனால் இப்பகுதிகளில் அல்கொய்தா ஆதரவு போராளிகள் மற்றும் சன்னி முஸ்லிம் போராளிகள் அரசுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (அ-5)

## நீதிமன்றில் தூங்கிய நீதிபதி தனது பதவியை துறந்தார்



ரஷ்யாவில் உள்ள பிளாகோ வேஷ்சென்ஸ்க் நீதிமன்றத்தில் யெவ்கெனி மக்னோ நீதிபதியாக பணியாற்றினார்.

கடந்த யூலை மாதம் இந்த நீதிமன்றத்தில் நடந்த பொருளாதார குற்றம் தொடர்பான வழக்கு ஒன்றில் குற்றம் சாட்டப்பட்ட நபரின் சட்டத்தரணி காரசாரமாக வாதாடிக் கொண்டிருந்தார். எதிர்க்கட்சி சட்டத்தரணியின் வாதத்தை பதிவு செய்து கொள்ள வேண்டிய நீதிபதியோ தனது இருக்கையில் சொகுசாக சாய்ந்தபடி குறட்டை விட்டு தூங்கிக் கொண்டிருந்தார். இறுதியில் அந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட நபருக்கு 5 ஆண்டு கடுங்காவல் தண்டனை வழங்கி சமீபத்தில் அந்த நீதிபதி தீர்ப்பளித்தார்.

மேற்கண்ட வழக்கை அந்த நீதிபதி எந்த இலட்சணத்தில் விசாரித்தார் என்று அவர் குறட்டை விட்ட வீடியோ காட்சிகளுடன் ஒரு இணையத்தள பத்திரிகை விமர்சித்து இருந்தது. இந்த வீடியோவை பார்த்த நீதிமன்ற ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள், நீதிபதி யெவ் கெனி மக்னோவை இராஜினாமா செய்யும்படி அறிவுறுத்தினார். இதனையடுத்து தலைமை நீதிபதியிடம் அவர் தனது இராஜினாமா கடிதத்தை நேற்று முன்தினம் வழங்கினார். (அ-2)

## தீவிரமடைந்து வரும் சிரியாவின் உள்நாட்டுப்போர்

### 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலி

சிரியாவில் இராணுவத்தினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையேயான சண்டை தீவிரமடைந்து வருகிறது. அலெப்போ நகரில் நேற்று முன்தினம் கிளர்ச்சியாளர்கள் மீது சிரியா நாட்டு இராணுவத்தினர் வான் வழித்தாக்குதல் நடத்தினர்.

இதில் ஏராளமான வீடுகள் சேதமடைந்துள்ள நிலையில் உயிரிழப்பு குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. சிரியாவில் ஜனாதிபதி பஸர் அல் ஆசாத்துக்கெதிராக போராடிவரும் கிளர்ச்சியாளர்களை ஒடுக்க இராணுவத்தினர் மற்றும் விமானப் படையினர் முடுக்கி விடப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரால் தாக்கப்பட்டு இருப்பிடங்களை இழந்தவர்களுக்காக சிரியாவின் எல்லைப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் தற்காலிக தங்கும் முகாம்களுக்கு அருகிலும் விமானங்கள் மூலம் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2011 ஆம் ஆண்டு தொடங்கிய இந்த கிளர்ச்சியில் கடந்த ஆண்டு இறுதி வரை 60 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரிய நாட்டு போர் முடிவுக்கு வராத நிலையில் உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என்றும் அஞ்சப்படுகிறது. (அ-5)

## டைம்ஸ் பத்திரிகை மீது சைபர் தாக்குதல்

### சீனா ஊடுருவல்




அமெரிக்காவில் உள்ள "தி நியூயோர்க் டைம்ஸ்'' பத்திரிகை தொடர்ந்து சைபர் தாக்குதலுக்கு உள்ளாகி வருகிறது.

அமெரிக்காவில் இருந்து செயற்படும் மேற்படி பத்திரிகை சீனாவின் பிரதமர் வென் ஜெய்போவின் குடும்பம் சேர்த்துள்ள சொத்துக்கள் குறித்து புலனாய்வு மேற்கொண்டது.

இதனை தெரிந்து கொண்ட சீனா "தி நியூயோர்க் டைம்ஸ்'' பத்திரிகையின் இணையத்தளம் மற்றும் அவர்களது 60 கணனிகளுக்குள் ஊடுருவி அவர்களது மின்னஞ்சல் கணக்குகளுக்குள் உள்ள தகவல்களை திருடியுள்ளனர். அதுவும்குறிப்பாக சீனாவின் பிரதமர்வென் ஜெய்போ குறித்து விசாரித்து வரும் நிருபர்களின் மின்னஞ்சல் கணக்குகளை குறிவைத்துதான் குறித்த தாக்குதல் நடந்துள்ளது.

எனவே, இந்த ஊடுருவலுக்கு பின்னால் சீன இராணுவம் உள்ளதாகவும் சீன அரசுதான் இந்த ஊடுருவலுக்கு பொறுப்பு எனவும் தெரியவந்துள்ளது. (அ-2)

## பட்டாசு லொறி வெடித்தது! 26 பேர் பலி; பலர் காயம்



பட்டாசுகளை ஏற்றிக் கொண்டு லொறியொன்று செல்லும் போது திடீரென பட்டாசுகள் பயங்கரமாக வெடித்து சிதறியதில் பாலம் சுமார் 80 மீற்றர் நீளத்திற்கு உடைந்து விழுந்தது. அதில் சென்ற 6 வாகனங்கள் தூக்கி வீசப்பட்டு நொறுங்கின. 26 பேர் வரை பலியாயினர். பலர் காயமடைந்தனர்.

இந்த கோர விபத்து மியான்ஷி என்ற இடத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. தகவல் கிடைத்ததும் அதிகாரிகளும் தீயணைப்பு படையினரும் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். படுகாயம் அடைந்த பலரை காப்பாற்றி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்தின் காரணமாக அந்த வீதியில் வாகன போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. (அ-2)

## ஜப்பானில் கடும் நிலநடுக்கம்

ஜப்பானில் ஒபிகிரோ நகரில் கடும் நில நடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவுகோலில் 6.9 என பதிவான இந்த நிலநடுக்கம் காரணமாக சுனாமி எச்சரிக்கை ஏதும் விடப்படவில்லை.

நிலநடுக்கத்தை தொடர்ந்து ஒரு சில தேசிய பெரிய வீதிகள் மூடப்பட்டது. (அ-2)




## பிரான்ஸ் ஜனாதிபதி ஓலாண்ட் மாலிக்கு விஜயம் செய்தார்



பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி பிரான்சுவா ஓலாண்ட் நேற்று முன்தினம் தனது அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் மாலிக்கு விஜயம் செய்துள்ளார்.

மாலியில் இடைக்கால ஜனாதிபதி டயன்கோண்டா ட்ராஓரேவைச் சந்தித்து அவருக்கு உற்சாகமும் மகிழ்ச்சியும் அளிக்கவுள்ளார்.

சமீபத்தில் பிரெஞ்சு இராணுவம் மாலியின் வடக்குப் பகுதியில் ஆக்கிரமித்திருந்த இஸ்லாமியப் போராளிகளை அந்த பகுதியிலிருந்து விரட்டியது. இந்த வெற்றியைக் கொண்டாட ஓலாண்ட் பழைய நகரமான டிம்புக்ட்டுக்குச் செல்வார்.

ஆபிரிக்காவின் 8 ஆயிரம் படை வீரர்கள் உடனடியாக மாலிக்கு விரைந்து சர்வதேச பணியில் கலந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவார் என்று கருதப்படுகிறது.

இதுவே இவரது பயணத்தின் முக்கிய நோக்கமாகும். (அ-2)

## ஜேர்மன் விமான நிலையத்தில் காசோலையுடன் ஈரானியர் கைது

(ஜேர்மனி)

ஜேர்மனியில் உள்ள டூசெல்டோர்ஃப் விமான நிலையத்தில் 54 மில்லியன் யூரோ அயல் நாட்டுக் காசோலையை இரகசியமாகக் கடத்தி வந்த ஈரானியரை சுங்க இலாகா அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அவரது கைப்பையில் இந்த காசோலையை மறைத்து வைத்திருந்தார்.

கடந்தவெள்ளிக்கிழமை காலை துருக்கியிலிருந்து ஜேர்மனியில் உள்ள டூசெல்டோர்ஃப் விமான நிலையத்திற்கு வந்திறங்கிய அவரிடம் அதிகாரிகள் கொண்டு செல்லும் பணம் குறித்து விசாரித்த போது பத்தாயிரம் யூரோ மட்டும் என்று பதிலளித்துள்ளார்.

எனினும் சுங்க இலாகா அதிகாரிகள் அவரது கைப்பையை சோதனையிட்ட போது வெனிசுலாவைச் சேர்ந்த வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட 54 மில்லியன் யூரோ மதிப்பிலான காசோலையை வைத்திருந்தார் என்பது தெரியவந்துள்ளது.

இவர் மீதான குற்றம் உறுதி செய்யப்பட்டால் ஒரு மில்லியன் யூரோ வரை அபராதம் விதிக்கப்படும் என்று சுங்க இலாகா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-5)

## அமெரிக்காவுக்கு தக்க பதிலடி கொடுப்போம்- வடகொரியா

அமெரிக்காவின் இரட்டை நிலைப்பாட்டுக்கு தக்க பதிலடி தருவோம் என்று வட கொரியா மிரட்டல் விடுத்துள்ளது.

தென்கொரியா கடந்த புதன் கிழமை றொக்கெட் ஒன்றை ஏவியது. இது இராணுவம் தொடர்பானது அல்ல என்று அமெரிக்கா கருத்து தெரிவித்தது. அதேசமயம் கடந்த டிசெம்பர் மாதம் வடகொரியா ஏவிய றொக்கெட் தடை செய்யப்பட்டது என்று அமெரிக்கா குற்றம் சாட்டியிருந்தது.

இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் இத்தகைய இரட்டை நிலைப்பாட்டுக்கு தக்க பதிலடி தருவோம் என்று வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளதாக தெரிகிறது.

றொக்கெட் ஏவியதற்காக ஐ.நா. சபையின் பாதுகாப்பு குழு வட கொரியா மீது சமீபத்தில் பொருளாதாரத்தடை விதித்தது குறிப்பிடத்தக்கது. கொரிய நாடுகள் இரண்டும் தங்களின் செயற்கைக்கோள் நன்கு வேலை செய்வதாக தெரிவித்தன. ஆனால், வடகொரிய செயற்கைக் கோள் பிழையாக இயங்கி வருவதாக அமெரிக்க நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

## இந்திய ஆசிரிய வெற்றிடத்திற்கு விண்ணப்பித்த ஓசாமா பின்லேடன்

இந்தியாவில் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் வேலைக்கு ஓசாமா பின்லேடன் விண்ணப்பம் செய்திருக்கிறார். உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள அரச ஆரம்ப பாடசாலைக்கு 72 ஆயிரத்து 825 ஆசிரியர் வெற்றிடங்களுக்கான விளம்பரம் செய்யப்பட்டது. 70 இலட்சம் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றன.

அப்போது ஓசாமா பின்லேடனின் பெயரில் ஒன்லைனில் விண்ணப்பம் வந்திருந்ததாக கூறப்படுகிறது. இவ்விண்ணப்பத்தில் அவருடைய அப்பாவின் பெயர் பில் கிளிண்டன் என்றும் பின்லேடன் அனைத்து பாடங்களிலும் 100 மதிப்பெண்கள் பெற்றதாகவும் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்து ஓசாமா பின்லேடனுக்கு விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டதற்கான பதிவு இலக்கம் மற்றும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும்போது மூலப்பிரதி (ஒரிஜினல்) சான்றிதழ் கொண்டு வர வேண்டும் என்ற கடிதமும் விண்ணபத்தில் பின்லேடன் குறிப்பிட்ட முகவரிக்கு உத்தர பிரதேச அரசால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் ஓசாமாவும் போலிதான். அதேபோல் ஓசாமா பின்லேடன் விண்ணப்பமும் போலியானது என்று தங்களுக்குத் தெரியும் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் தேசியக்கொடி வியாபாரம் சூடு பிடித்தது



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ். குடா நாட்டில் தேசியக் கொடி வியாபாரம் சூடு பிடித்துக் காணப்பட்டதோடு சகல இடங்களிலும் தேசியக் கொடி பறக்கவிடப்பட்டும் இருந்தது.

அரசாங்கத்திற்கு சார்பான அரசியல் கட்சிகளின் முன்பாகவும் அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், வங்கிகள், பெற்றோல் நிரப்பும் நிலையங்கள் மற்றும் சந்தைக் கட்டடத் தொகுதிகளிலும் தேசியக் கொடி பறக்க விடப்பட்டிருந்தது.

இதனை விட வீதிகளின் நடுவே 5 இற்கும் மேற்பட்ட தேசியக் கொடிகளை ஒன்றாக இணைத்து வீதிப் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உயர்த்திகட்டப்பட்டிருந்தது.

குறிப்பாக இராணுவ முகாம்களுக்கும் பொலிஸ் நிலையங்களை அண்மித்த பகுதிகளிலும் இவ்வாறு வீதிகளில் கட்டப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

வாகனங்களிலும் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

இதனைவிட தேசியக்கொடி வியாபாரமும் சூடு பிடித்திருந்ததை அவதானிக்க முடிந்தது. (அ-6)




சிவகங்கை ரெப்கோ வங்கி கிளை திறப்பு விழாவில் புதிய வைப்புத்திட்டத்தை நிதி அமைச்சர் சிதம்பரம் ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# செம்பியன் பற்றுக்கு லக்ஷபானா மின்சாரம்

(கும்பளை)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு செம்பியன்பற்று வடக்கு, செம்பியன் பற்று தெற்கு, மாமுனை ஆகிய பிரதேசங்களுக்கு இன்று திங்கட்கிழமை தொடக்கம் லக்ஷபானா மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இம் மின்சாரம் மாமுனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகிலுள்ள மின்மாற்றியிலிருந்து ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இம்மின்சார விநியோகத்திற்கு பிரதம விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் பனை அபிவிருத்தி சபையின் தலைவருமான பசுபதி சீவரத்தினம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணி பிரதேச செயலர் எஸ்.திருலிங்கநாதன், யாழ்.மாவட்ட பிரதம பொறியியலாளர் ஞானகணேஷ், மின் அத்தியட்சகர் க.ராஜேஸ்வரன், மாமுனை பங்குத்தந்தை அருட்திரு யேசுரட்ணம், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், த.மணிதரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இம்மின்சார விநியோகத்தினையும் இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தையும் முன்னிட்டு பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் தனது ஒதுக்கீட்டிலிருந்து 10 வீதி மின்விளக்குகளை பொருத்தவுள்ளார்.

அதேவேளை ஏற்கனவே மருதங்கேணி மாமுனை பிரதேசங்களில் பொருத்தப்பட்ட 30 மின் விளக்குகள் செயலிழந்து காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. (அ-3-19)

# சென்னையில் இடம்பெறும் இலங்கையின் சுதந்திரவிழா

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தை இந்தியாவில் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு அங்குள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகராலயம் கடந்த வருடம் புதிய இடத்துக்கு மாற்றப்பட்டிருந்தது.

இந்த நிலையில் புதிய கட்டடத்தில் இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளில் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்ற நிகழ்வு நடைபெறவிருப்பதுடன் தென்னிந்தியாவிலுள்ள இலங்கையர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை கலாசாரத்தைப் பறைசாற்றும் நிகழ்வுகளும் வரவேற்பு நிகழ்ச்சியும் நாளைய தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக சென்னையிலுள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. (அ-5)

# இந்தியருக்கு அமெரிக்காவில் கண்டுபிடிப்பிற்கான தேசிய விருது


## ஒபாமா வழங்கினார்

இந்திய அமெரிக்கரான ரங்கசாமி ஸ்ரீநிவாசனுக்கு தொழில்நுட்ப மற்றும் கண்டுபிடிப்புக்கான தேசிய விருதை ஜனாதிபதி பராக் ஒபாமா வழங்கியுள்ளார்.

அறிவியல்விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களை நிகழ்த்துபவர்களுக்கு இந்த விருது 1985 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

தொழில்நுட்ப மற்றும் கண்டுபிடிப்புக்கான தேசிய விருது அறிவியல் அறிஞர்களுக்கு வழங்கப்படும் அமெரிக்காவின் உயரிய விருதாகும்.


லேசர் துறையில் சிறந்த பணியாற்றியமைக்காக அவருக்கு இவ்விருதுக்கு வழங்கப்பட்டது. சாமுவேல் பிளம் மற்றும் ஜேம்ஸ் வெய்ன் ஆகிய விஞ்ஞானிகளுடன் இணைந்து இவ்விருதைப் பெற்றார் ஸ்ரீநிவாசன்.



சென்னை பல்கலைக்கழகத்தில் 1950 ஆம் ஆண்டு அறிவியல் பட்ட மேற்படிப்பை முடித்த ஸ்ரீநிவாசன் 1956 இல் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் படிப்பை நிறைவு செய்தார்.

2002 ஆம் ஆண்டு அமெரிக்காவின் கண்டுபிடிப்புக்கான ஹால் ஒவ்ப் பேம் விருதைப் பெற்றார். இவர் தனது 21 கண்டுபிடிப்புகளுக்கு அமெரிக்க காப்புரிமை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# டைனோசர் முட்டைகள் 500 ரூபாய்க்கு விற்பனை



மத்திய பிரதேசத்தில் டைனோசர் முட்டைகள் 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு டைனோசர் என்ற இராட்சத வடிவிலான உயிரினம் வாழ்ந்து அழிந்ததாக சரித்திர சான்றுகள் உள்ளன.

எனினும் அவற்றின் முட்டைகள், எலும்பு கூடுகள் மண்ணில் புதைத்து கிடக்கின்றன. அவை அகழ்வாராய்ச்சியின்போது கண்டெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் டைனோசர் மத்திய பிரதேச மாநிலம் தார் மாவட்டத்தில் உள்ள பட்லயா என்ற இடத்தில் வாழ்ந்து அழிந்ததாக கூறப்படுகிறது.

இங்கு 89 ஹெக்டெயர் நிலப்பரப்பில் அவற்றின் முட்டைகள் மற்றும் உடல் உறுப்புக்கள் புதைந்து கிடப்பதாகவும் அவை பாதுகாப்பின்றி இருப்பதும் கடந்த 2007 ஆம் ஆண்டு தெரிய வந்தது.

இங்கு மலைப் பகுதியில் வாழும் பழங்குடியினர் டைனோசர்களின் முட்டைகளை சேகரித்து வைத்துள்ளனர்.

அவற்றை மராட்டியம், குஜராத், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து வரும் கடத்தல்காரர்கள் ஒரு முட்டையை 500 ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்குகின்றனர். 500 ரூபாய்க்கு வாங்கிச் செல்லும் அவற்றை சர்வதேச சந்தையில் ஒரு முட்டையை ஒரு கோடி வரை விற்று கொள்ளை இலாபம் சம்பாதிக்கின்றனர்.

தற்போதுதான் இது குறித்த கவனம் மத்திய பிரதேச அரசுக்கு வந்துள்ளது. எனவே டைனோசர் முட்டைகளை பாதுகாக்க புதிய சட்டம் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த தகவலை மத்திய பிரதேச மாநில வனத்துறை மந்திரிசர்தாஜ்சிங்தெரிவித்துள்ளார். (அ-5)

# புதிய உறவு நோக்கி முன்னேறுவோம்; இந்தியாவை அழைக்கிறது சீனா

சீனாவிற்கும் இந்தியாவுக்கும் இடையே கடந்த காலங்களில் நடைபெற்ற போர் சம்பவங்களை மறந்துவரும் காலங்களில் புதிய உறவுக்கு முன்னேறுவோம் என சீன அதிகாரிகள் இந்திய அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

சீனாவுடனான எல்லைப் பகுதியில் ரஷ்யாவிற்கு அடுத்த இடத்தில் இந்தியா இடம்பெற்றுள்ளது. இந்தியா-சீனா இடையே எல்லைப் பகுதி மூன்று பகுதிகளில் குறுக்கிடுகிறது.

இரு நாடுகளிடையே உள்ள மேற்கு பகுதியான அக்சய் சீனா தன்னுடைய பகுதி என சீனாவும் காஷ்மீர் மாநிலத்தின் ஒரு பகுதி என இந்தியாவும் உரிமை கொண்டாடி வருகிறது.

அதேபோல் பூடான், நேபாளம் எல்லையை ஒட்டியமைந்துள்ள அருணாசல பிரதேச மாநிலம் சீனாவின் தென் எல்லையாக அமைந்துள்ளது. இதற்கும் சீனா உரிமை கொண்டாடி வருகிது.

காஷ்மீர் மாநிலம் இந்தியாவின் ஒரு பகுதி என அப்போதைய பிரதமர் நேரு கூறியது சீனாவை ஆத்திரமூட்டியது. இதனையடுத்து 1962 ஆம் ஆண்டு மிக உயரமான இடமான சுமார் 4 ஆயிரத்து 200 மீற்றர் உயரத்தில் போர் நடைபெற்றது.

போரில் இந்தியா தோல்வியடைந்ததையடுத்து இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் எதிரிகளாக பார்க்கத் தொடங்கினர்.

இந்நிலையில் பொருளாதார வளர்ச்சி காரணமாக இரு நாடுகளிடையே தொழில் போட்டி ஏற்பட்டதால் உருவான காலமாற்றம் காரணமாக இரு நாடுகளும் பகைமையை மறந்து நட்புறவு பாராட்ட தொடங்கியது.

இதனால் கடந்த மூன்று ஆண்டுகளாக இருநாடுகளும் கூட்டு இராணுவ பயிற்சியை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் இந்தியத் தரப்பில் பாதுகாப்புத்துறை செயலர் சசிகாந்த் சர்மா தலைமையிலான குழுவினர் சீனாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர். இதன்போது தலைநகர் பீஜிங்கில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சீன இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கடந்த 1962 ஆம் ஆண்டு நடைபெற்ற போர் போன்ற கசப்பான சம்பவங்களை இந்தியா மறக்க வேண்டும். கடந்த கால சம்பவங்களை மறந்து இருதரப்பினரும் புதிய உறவுகளை நோக்கி முன்னேறுவோம் என சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளில் பெற்றோம், இன்னும் விடியவில்லை.
–மேத்தா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk


# இலங்கையில் இனங்கள் வேண்டாம் இலங்கையர்களே வேண்டும்

இலங்கையின் 65ஆவது சுதந்திர தினம் இன்றாகும். சுதந்திரம் என்றால் என்ன? என்பதற்கான வரையிலக்கணம் இதுவரை முன்வைக்கப்படவில்லை என்று கூறும் அளவுக்கு சுதந்திரத்தின் நிலைமை உள்ளது.

சுதந்திரம் என்பதற்கான ஒரு வரையிலக்கணத்தை வகுக்கும் போது அது ஒரு நாட்டிற்குள் வாழுகின்ற அத்தனை மக்களுக்கும் பொருத்துடையதாக வேண்டும்.

ஆனால், நாடுகள் சுதந்திரதினத்தை அனுஷ்டிக்கின்ற போதிலும் இனத்தால் மதத்தால் மொழியால் அடிபட்டு உதைபட்டு மிதிபட்டு சீரழியும் அவலத்தை சந்தித்தவண்ணமுள்ளன.

அவ்வாறாயின் சுதந்திரம் என்பதை எங்ஙனம் வரைவிலக்கணப்படுத்த முடியும் என்ற வினா எழவே செய்யும். எதுவாயினும் சுதந்திரம் என்பது அடிப்படை மனித உரிமையிலிருந்து ஆரம்பிக்கின்றது.

அடிப்படை மனித உரிமை என்ற விடயம் எழுகின்ற போது அங்கு இன, மத, மொழி என்ற பேதங்களுக்கு இம்மியும் இடமிருக்க நியாயம் இல்லை.

இதனடிப்படையில் இலங்கை 65ஆவது சுதந்திர தினத்தை அனுஷ்டிக்கின்ற போதிலும் அது முழுமையானதாக உள்ளதா என்று கேட்டால் அங்குதான் அறுபத்தைந்து ஆண்டுகால வரலாற்றுத் தவறு தெரியவரும்.

ஆம், இலங்கை 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி சுதந்திரம் அடைந்தது என்று கூறப் படுகின்ற போதிலும் இலங்கை மண்ணில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தங்களுக்கான சுதந்திரம் கிடைக்கப்படவேண்டும் என்பதற்காக முப்பது வருடகாலம் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அந்தப் போராட்டம் கால அசைவில் நிகழ்ந்த சர்வதேசக் கொள்கை மாற்றங்களில் அடிபட்டு போனாலும், எங்களுக்கு சுதந்திரம் வேண்டும் என்ற தமிழ் மக்களின் வேணவாவுக்கு இன்னமும் முடிவு கிடைக்கவில்லையென்றே கூறவேண்டும்.

சுதந்திரம் என்பது தனித்து கொடியேற்றிக் கொண்டாடும் நிகழ்வு மட்டுமல்ல மாறாக அது அனுபவிப்பினூடாக உணரப்பட வேண்டிய உள்ளார்ந்தமானதும் கூட.

அந்த அனுபவிப்பில் ஒரு பகுதி மக்கள் மட்டும் பங்கேற்பார்களாயின் சுதந்திரம் என்ற அருமந்த பதம் தமது பெறுமானத்தை இழந்து போகும்.

எனவே இலங்கையின் சுதந்திரதினம் தனித்து சிங்களவர்களால் கொண்டாடப்படுவதென்ற சிறுபான்மை மக்களின் நினைப்புக்கு முடிவுகட்ட, எதிர்காலத்தில் அழகிய இலங்காபுரியின் சுதந்திரதினம் இலங்கையர்களால் கொண்டாடப்பட வேண்டும்.

இலங்கையில் சிங்களவர்கள் இருக்கிறார்கள். தமிழர்கள் இருக்கிறார்கள். முஸ்லிம்கள் இருக்கிறார்கள். ஆனால் இலங்கையர் இல்லை என்ற மாபெரும் குறைபாட்டுக்கு தீர்வுகாண்பதாக இன்றைய சுதந்திரதின நிகழ்வு அமையட்டும்.

# யாழ். விஞ்ஞான சங்கத்தின் விஞ்ஞானப் போட்டிகள்

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தினால் நடத்தப்படும் வடமாகாண பாடசாலைகளுக்கிடையேயான விஞ்ஞானப்போட்டிக்கு நேர அட்டவணையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடகணக்கியல் துறை உதவிப் பொதுச் செயலாளர் கலாநிதி பா.நிமலதாசன் அறிவித்துள்ளார்.

தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் சமூக வலுவூட்டலுக்கான கல்வி என்ற கருப்பொருளுக்கு அமைவாக இப் போட்டிப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. இதற்கமைய யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, மானிப்பாய் ஆசிரியர் பயிற்சி நிலையம், புலோலி ஆசிரியர் பயிற்சி நிலையம், மு/முல்லைத்தீவு மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை வினாவிடைப் போட்டிக்கான எழுத்துப் பரீட்சையும் மதியம் 12.15 மணி தொடக்கம் பிற்பகல் 1.15 மணிவரை கட்டுரைப்போட்டியும் நடைபெறும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானப்பீட கணனி விஞ்ஞானத்துறை அலகில் விபரணப் போட்டியும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை யா/ பல்கலைக்கழக கலைப் பீட ஆங்கில மொழி கற்கைகள் அல கில் பேச்சுப்போட்டியும் நடைபெறும்

எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விண்ணப்பிக்கப்பட்ட பாடசாலையில் பாடசாலை தோட்டப் போட்டியும் எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி விசா லாட்சி மண்டபத்தில் கண்காட்சிப்போட்டியும் (சுவரொட்டிப் போட்டி அல்லது சித்திரப் போட்டி அல்லது விஞ்ஞானப் புத்தாக்கம் உ[illegible]ாடங் கலாக ) நடைபெறுமென அவ[illegible] அறிவித்துள்ளார். (அ-9)

## பொப்பிசைப் பாடகர் வைத்தியசாலையில்

யாழ்.மண்ணின் [illegible]ப்பிசைப்பாடகரும் தென்னிந்திய தி[illegible]ரப்பட நடிகருமான ஏ.இ.மனோகர[illegible] உடல்நலக் குறைபாடு காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சைக்கா[illegible] அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.சென்.ஜோன்[illegible] கல்லூரியின் 190ஆவது ஆண்டு நிறை[illegible]வினை யொட்டி போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நிதிக்காக இன்று கல்லூரி வளாகத்தில் மாலை 5.30 மணிக்கு பொப்பிசைக்கானங்கள் இசை நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

இதில் பொப்பிசைச்சக்கரவர்த்தி ஏ.இ. மனோகரன் பொப்பி சைக்கானங்களைப்பாடவுள்ளார். இந்த இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்த பாடகர் மனோகரன் நேற்று திடீரென ஏற்பட்ட உடல்நிலை குறைபாடு காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை திட்டமிட்டபடி இசை நிகழ்ச்சி இன்று மாலை இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-6)

### யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த

## இளைப்பாறிய முப்படையினரின் விபரங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு முப்படைகளில் சேவையாற்றி இளைப்பாறிய முப்படையினரின் விபரங்களைச் சேகரிக்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இதன்படி எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்பாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சிவில் நிர்வாக சேவைக் காரியாலயத்திற்கு கிடைக்கும்படி தபால் மூலமாகவோ நேரடியாகவோ விபரங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தரைப்படை, விமானப்படை, கடற்படை ஆகிய முப்படைகளிலும் சேவையாற்றி ஓய்வுபெற்றவர்களின் நலன் கருதி இந்த விபரங்கள் சேகரிக்கப்படு வதாகவும் யாழ்.சிவில் நிர்வாக சேவை காரியாலயத்தினால் விடுக்கப்பட்டுள்ள் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

## சமூர்த்தி சங்கத்தால் மாதாந்த கொடுப்பனவு

(றெட்பானா)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கு சமூர்த்தி சங்கத்தால் மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மேற்குறித்த மாவட்டத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண. தர பரீட்சைக்கு தோற்றி தற்போது க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கே ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படவுள்ளது.

இவ் உதவி தொகை வழங்குவதற்காக மாணவர்களின் விபரங்களை பெறுவத ற்கு முல்லைத்தீவில் உள்ள பாடசாலை அதிபர்களுக்கு சமூர்த்தி பிரிவினரால் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கல்வியை மேம்படுத்தவே இவ் உதவித் தொகை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3,260)

# கொல்லங்கலட்டிக்கு பல்வேறு திட்டங்கள்

## அமைச்சர் டக்ளஸ் ஆரம்பித்து வைத்தார்

யாழ்.தெல்லிப்பழை கொல்லங் கலட்டி கிராமத்திற்கான மின்விநியோகத் திட்டம் மற்றும்குடிநீர் விநியோகத்திட்டம் என்பன நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

முழுநாடும் ஒளிபெறுகிறது என்ற எண்ணக்கருவுக்கமைய (திதுலமுலங்கா) ஒளியேற்றுவோம் இலங்கைக்கு எனும் திட்டத்தின்கீழ் 117 இலட்சம் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்ட மின் விநியோகத் திட்டத்தையும்,

40 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டத்தையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், பிரதேச செயலர் சிறிமோகனன் மற்றும் மின்சார சபை அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

இதில் குடிநீர் வழங்கல் திட்டத்தை ஜப்பான் மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையிலான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பின் நிமிர்த்தம் 40 இலட்சம் ரூபாய் செலவில் நடை முறைப்படுத்தப் பட்டுள்ளது.

இந்தப்பகுதியில் மீள்குடியேற்றப் பட்ட மக்களின் நீண்டகால கோரிக்கைக்கு அமைவாக இத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மகளிரும் ஆன்மீகமும்



வாழ்க்கையானது ஆண்,பெண் என்ற இருவரும் இணைந்துதான் நடைபெறுகின்றது. இந்த உலகில் எல்லோருக்குமே இந்த இரண்டுபேர் கூட்டுறவில்தான் பிறவி தோன்றுகின்றது. என்றாலும் கூட ஒரு சி[illegible] காரணங்களால் உலகெங்குமே ஆண்கள் மேலோங்கவும் பெண்கள் கீழாக மதிக்கப்பெ[illegible]வும் ஒரு சந்தர்ப்பம் இருந்தது.

காலத்தால் அந்தச் சந்த[illegible]ப்பம் போனபின்புகூட வழக்கத்தை ஒட்டி, பழக்கத்தை ஒட்டி அதே ஆதிக்கமனப்பான்மை[illegible] ஆண்களுக்கு ஏற்பட்டுத் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கிறது. ஒரு சமுதாயம் திருந்த வேண்டுமானால் இந்தக் குறைபாடுகள் நீங்கத்தான் வேண்டும். அந்தக்குறைபாடுகளை நீக்கிக் கொள்வதற்கு ஒருசாரார் மட்டும்– ஆண்கள் மட்டுமோ அல்லது பெண்கள் மட்டுமோ– முயன்றால் போதாது. இரண்டு பேர் களுமே அந்தக்குறைபாடுகளை உணரவேண்டும். அவற்றை முறையாகப் போக்கிக்கொள்கின்ற விருப்பம் அவர்களுக்கு வர வேண்டும்.

ஒரு குடும்பம் என்று எடுத்துக்கொண்டீர்களானால் அந்தக்குடும்பம் நலம்பெற வேண்டும், அந்தக்குடும்பத்திலே நல்ல குழந்தை பிறக்கவேண்டும், அந்தக் குழந்தை அறிவுடையவனாக, சமுதாயத்தில் பொறுப்புள்ள பிரஜையாக வாழ வேண்டும். குடும்பத்திற்கும் நல்ல உறுதுணையாக இருக்கவேண்டும் என்றுதான் எல்லோரும் விரும்புகிறோம். அப்படியானால் அந்தக்குழந்தைப்பேறுக்கு உரிய ஆண், பெண் இருவருமே சமவுரிமை, அறிவிலே திறமை, நுட்பம் இவை நிறைந்தவர்களாகத்தான் இருக்கவேண்டும்.

ஆண்களுக்கு மாத்திரம் சில கல்வி வசதி, செல்வவசதி இன்னும் அதிகார வசதி எல்லாமே வைத்துக்கொண்டு பெண்களுக்கு அவை மறுக்கப்பட்டால் என்ன ஆகும். ஒருபுறம் அறிவிலே அல்லது செல்வத்திலே ஏனைய எல்லாவற்றிலும் எழுச்சி, மற்றொரு புறத்திலே எல்லாவற்றிலும் தாழ்ச்சி. அங்கே பிறக்கக்கூடிய குழந்தைகூட அப்படித்தான் இருக்கும். இந்த ஏற்றத்தாழ்வினை நீக்கிக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.சென்றல் விளையாட்டு கழகத்தின் ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ண போட்டி






யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 9 ஆவது ஆண்டாக நடத்தும் வி.டி ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்திற்கான 50 பந்து பரிமாற் றங்களை கொண்ட துடுப்பாட்டத் தொடரின் 100 ஆவது சுற்றுப்போட்டி இன்று திங்கட்கி ழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் வட்டுக்கோட்டை ஒல்ட் கோல்ஸ் அணியை எதிர்கொண்டு சுன்னாகம் கந்தஸ்ரார் அணி மோதவுள்ளது.

மேற்படி சுற்றுப்போட்டியில் பத்து இணைப்பாட்டவீரர்களின் சாதனைகளும் 12 வீரர்களின் சதம் அடித்த சாதனைகளும் 68 வீரர்களின் அரைச்சதம் அடித்த சாதனைகளும் நிலை நாட்டப்பட்டுள்ளன. இச்சுற்றுப் போட்டியில் ஓர் தனிநபர் பெற்றுக்கொண்ட ஆகக் கூடிய ஓட்டங்களை (160) பற்றீசியன்ஸ் அணியை சேர்ந்த அ.சேர்ச்சில் நிலைநாட்டியுள்ளார்.

என்.பகீரதன் ஆகக்கூடிய இலக்குகள் (7) கைப்பற்றினார்.

இத் தொடரில் என். ஜெயராஜ் என்பவர் 3 சதங்களை பெற்று ஓர் சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

இச்சுற்றுப் போட்டியில் முதலாம் இடத்தை பெறும் அணிக்கு வீ.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசிலும், இறுதி ஆட்டத்தில் சிறந்த வீரருக்காக சிவமித்திரன் வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசிலும் தொடர் நாயகனுக்கு மணிவண்ணன் வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசிலும் முதலாவது ஆவது அரை இறுதிப் போட்டியில் சிறந்த வீரருக்கு ஈ.எஸ் தம்பையா வெற்றிக்கிண்ணமும் பணப் பரிசிலும் இரண்டாவது அரை இறுதிப்போட்டியில் சிறந்த வீரருக்கு ராஜசிங்கம் வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசிலும் வழங்கப்பட்டு வருகின்றன. (அ-5)

# வேலணை பிரதேசசெயலர் பிரிவில் வருடாந்த எல்லே போட்டிகள்





வேலணை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுக் களில் எல்லே ஆண், பெண் இருபாலாருக்குமான போட்டி நேற்று முன்தினம் புங்குடு தீவு அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத் தில் நடைபெற்றது.

இப்போட்டியின் ஆண்களுக்கான முதலாவது அரையிறுதிப்போட்டியில்புங்குடுதீவு சென்.சேவியர் விளையாட்டுக்கழகமும் நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக்கழக மும் மோதிக்கொண்டன.

இதில் நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக்கழகம் 7:6 என்ற ரீதியில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியது. மற்றைய அரையிறுதிப்போட்டியில் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக்கழகமும் நயினாதீவு ஸ்ரீஅம்பிகா விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

இதில் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழகம் பூவா, தலையா முறைமூலம் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது. இவ்விறுதிப்போட்டியில் நயினாதீவு இஸ் லாம் விளையாட்டுக்கழகம் 5:4 என்ற ரீதி யில் வெற்றி பெற்று எல்லே ஆண்களுக் கான 2013 ஆம் ஆண்டுக்கான வெற்றிக் கேடயத் தினை தனதாக்கிக்கொண்டது.

இப்போட்டியின் பெண்களுக்கான முதலாவது அரையிறுதிப்போட்டியில் புங்குடுதீவு சண் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் புங்குடு தீவு சென்.சேவியர் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

இதில் புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட் டுக்கழகம் 2:1 என்ற ரீதியில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியது. மற்றைய அரையிறுதிப்போட்டியில் புங்குடுதீவு ஜன சக்தி விளையாட்டுக் கழகமும் புங்குடுதீவு நிலா ஜோதி விளையாட் டுக்கழகமும் மோதிக் கொண்டன. இதில் புங்குடுதீவு ஜனசக்தி விளையாட்டுக்கழகம் 1:0 என்ற ரீதியில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இவ் இறுதிப்போட்டியில் புங்குடுதீவு சண் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 5:1 என்ற ரீதியில் வெற்றி பெற்று எல்லே பெண்களுக்கான 2013 ஆம் ஆண்டுக்கான வெற்றிக்கேடயத் தினைத் தனதாக்கிக்கொண்டது.

# யாழ். உதைபந்தாட்ட லீக்கின் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## எட்டு அணிகள் களம் இறங்குகின்றன

யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்ட முதலாவது சுற்றுப்போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பித்து 18 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தொடர்ச்சியாக தினமும் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்போட்டியின் முதலாவது குழுவில் றோயல், பொற்பதி, பாரதி, பாடும் மீன் ஆகிய அணிகளும் இரண்டாவது குழுவில் சென்.அன்ரனீஸ், யாழ்.ஐக்கியம், ஞான முருகன், சென் நீக்கிலஸ் ஆகிய அணிகளும் பங்கு கொள்கின்றன.

இம் முதலாவது சுற்றுப்போட்டியில் 7 ஆம் திகதி வியாழக்கிழமை றோயல் அணியை எதிர்த்து பொற்பதியும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சென்.அன்ரனீசை எதிர்த்து யாழ்.ஐக்கிய அணியும் 9 ஆம் திகதி சனிக்கிழமை ஞானமுருகனை எதிர்த்து சென்.நீக்கிலசும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாரதியை எதிர்த்து பாடும் மீனும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை ஐக்கியத்தை எதிர்த்து ஞான முருகனும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை றோயலை எதிர்த்து பாடும் மீனும் களம் இறங்குகின்றன.

தொடர்ந்து 13 ஆம் திகதி புதன்கிழமை பொற்பதி அணியை எதிர்கொண்டு பாரதியும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை சென்.அன்ரனீஸ் அணியை எதிர் கொண்டு சென்.நீக்கலஸ் அணியும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொற்பதி அணியை எதிர்த்து பாடும் மீனும் 16 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.ஐக்கியத்தை எதிர்த்து சென்.நீக்கிலஸ் அணியும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சென்.அன்ரனீசை எதிர்த்து ஞானமுருகனும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை றோயல் அணியை எதிர் கொண்டு பாரதி அணியும் களம் இறங்க உள்ளன.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் அடையாள அட்டையினை கொண்டுவருதல் வேண்டும் என யாழ். உதைபந்தாட்ட லீக் அறிவித்துள்ளது. (அ-5)


# 45 ஆம் நாள் நினைவு



**மரியராஜா உதயபாஸ்கரன்**
**(துரை மேஸ்திரியார்)**

அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை மகாத்மா வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் 04.02.2013 திங்கட்கிழமை நடைபெறும். உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னை மடியில் 20.08.1970

ஆண்டவன் மடியில் 22.12.2012

(சி/2328)

தகவல்

(உ.பஸ்தலா) மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு தீய நோக்கங்களை...


தாய்லாந்தில் நடக்கும் பட்டாயா ஓபன் டென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவின் அரையிறுதியில், ரஷ்யாவின் நினாவை வீழ்த்திய, ஜெர்மனியின் சபைன் லிசிக்கி.


இந்தியாவுக்கு எதிரான பெண்கள் உலக கோப்பை தொடரின் லீக் போட்டிக்கான பயற்சியில் ஈடுபட்ட இங்கிலாந்து அணியினர்.

அரசாங்கம் ஜனவரி 2011 இல் த.தே. கூட்டமைப்புடன் இனப்பிரச்சினை தொடர்பில் பேச ஆரம்பித்தது.

த.தே.கூ. நேர்மையாகவும் முழுமனதுடன் செயற்பட்டு அரசியல் தீர்வொன்றுக்கான முழுமையான முன்மொழிவுகளை மார்ச் 2011 இல் சமர்ப்பித்தது.

இலங்கை அரசாங்கம் தமது பக்கக் கருத்துக்களை 5 மாத காலத்தில் 7 கூட்டங்கள் நடந்தபோதும் முன்வைக்கத் தவறியது. இதனால் அடுத்த கூட்டத் திகதி யொன்றுக்கு ஒப்புக்கொள்ள த.தே.கூ மறுத்தது.

இதன் பின்னர் ஜனாதிபதி த.தே.கூ தலைவரைச் சந்தித்ததைத் தொடர்ந்து நிபந்தனைகளின் அடிப்படையில் இருபக்க பேச்சுவார்த்தை 16ஆம் திகதி செப்டெம்பர் மாதம் 2011 இல் மீண்டும் தொடங்கப்பட்டது.

ஆயினும் ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசாங்கம் ஜனவரி மாதம் 2012 இல் பேச்சு வார்த்தையிருந்து வெளியேறியது. இலங்கை அரசாங்கத்தின் பிடிவாதப்போக்கு காரணமான ஸ்தம்பித நிலையை உடைப்பதற்கான 2 முயற்சிகள் தோல்வி கண்டன. ஸ்தம்பித நிலை இன்று வரை தொடர்கின்றது.

பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பித்துவிட்ட நிலையில் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களை இராணுவ ரீதியில் ஒடுக்குகின்ற வடக்கு கிழக்கு பகுதிகளின் சனத்தொகை அமைப்பை மாற்றுகின்ற தனது வேலைத்திட்டதை ஆக்ரோஷத்துடன் தொடர்ந்து வருகின்றது.

இப் பின்னணியில்தான் ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவில் மார்ச் 2012 இல் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. இதை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் பெரிதும் தவறி விட்டது.

25 பெப்பரவரி 2013இல் தொடங்கவுள்ள ஐ.நாவின் மனிதவுரிமைகளுக்கான ஆணைக்குழுவில் 22-வது அமர்வில் இலங்கை அரசாங்கத்தின் செயலின்மை மீது முக்கிய கவனம் செலுத்தப்படும்.

நீதி, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்த கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென நாம் நம்புகின்றோம்.

இப்பின்னணியில் தற்போது த.தே.கூ. தென்னாபிரிக்காவுக்கு மேற்கொண்டுள்ள விஜயத்தை சுட்டிக்காட்டி சில முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளதாக உலகத்திற்கு காட்ட அரசாங்கம் முற்படுமென்பதை நாம் நன்கறிவோம்.

எனவே தென்னாபிரிக்காவின் முன்னெடுப்பு தொடர்பில் எமது செயற்பாட்டுக்கும் இலங்கை அரசாங்கத்துடன் நாம் மேற் காண்ட பேச்சுவார்த்தைக்கும் தொடர்பில்லை என்பதை தெளிவுபடுத்த நாம் விரும்புகின்றோம்.

இத்தீர்மானத்திற்கமைய (இலங்கை அரசாங்கம்) நடக்கவும் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் தீய நோக்கங்களை கைவிடச் செய்யவும் இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்த ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவில் பொருத்தமான நடவடிக்கை அவசியமெனவும் நாம் கருதுகின்றோம். (எ-8)

# இலங்கை தொடர்பில்...

பிரதி உதவிச் செயலாளர் ஜேம்ஸ் மூர் இப் புதிய தீர்மானத்திற்கு இந்தியாவும் ஆதரவு வழங்கும் என்ற நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் அமெரிக்கா உயர் மட்டக் குழுவினர் அண்மையில் புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்தபோதிலும், ஜெனிவாவில் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19ஆவது கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட்ட தீர்மா னத்திற்கு ஆதரவு வழங்கியமை போன்று புதிய தீர்மானத்திற்கும் ஆதரவு வழங்குவோம் என இந்தியா எவ்வித உறுதிமொழிகளையும் வழங்கவில்லை என இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 22வது கூட்டத்தொடரில் அமெரிக்கா கொண்டுவரவுள்ள புதிய தீர்மானத்தின் பிரதி தமக்கு இதுவரை கிடைக்கவில்லை என அமெரிக்க உயர்மட்டக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்திய இந்திய வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இப்புதிய தீர்மானத்தின் உள்ளடக்கங்களை ஆராய்வதற்கு தமக்கு அவகாசம் தேவை எனவும் அமெரிக்காவுக்கு இந்தியா அறிவித்துள்ளதாக புதுடில்லியில் இருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிப்பதாக குறிப்பிட்ட ஆங்கில ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஆனால், இலங்கை விவகாரத்தில் இந்தியா எத்தகையதொரு முடிவை எடுக்கும் என உள்நாட்டு அரசியல் கட்சிகளும், அமைப்புக்களும் ஊகம் வெளியிட்டுள்ள நிலையில் புதிய தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு வழங்காது என இலங்கை அரசாங்கத் தரப்பில் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கொண்டுவரப்படவுள்ள புதிய தீர்மானத்திற்கு பிரித்தானியா ஆதரவு வழங்கும் என அந்நாட்டின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியக அமைச்சர் அலிஸ்ரயர் பேர்ட் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக்கூறப்பட வேண்டும் என அமெரிக்கா, பிரித்தானியா, கனடா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகளும் சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ)

# சுதந்திர தினத்துக்காக...

கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் நடைபெறும் சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்கென 4 ஆயிரம் பொலிஸாரும் முப்படையினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். திருகோணமலையில் பிரட்ரிக் கோட்டை வாசலுக்கும் கடற்கரை வீதிக்கும் இடைப்பட்ட வீதியில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், மாகாண முதலமைச்சர்கள் அமர்ந்திருக்கும் வகையில் விசேடமாக அமைக்கப்பட்ட அலங்கார மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை நகரிலிலுள்ள எட்டு பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவிகள் தேசிய கீதம் இசைக்க சங்கொலி மற்றும் மேள தாளங்களுக்கு மத்தியில் ஜனாதிபதி தேசியக் கொடியை ஏற்றுவார்.

இதனைத்தொடந்து ஜனாதிபதியை வாழ்த்திய ஜய மங்கல கீதம் இசைக்கப்படும்.

நாட்டின் சுந்திரத்திற்காக போராடிய முன்னோர்கள் மற்றும் படைவீரர்களை நினைவுகூர்ந்து இரண்டு நிமிட மௌனஅஞ்சலி செலுத்தப்படுவதைத் தொடர்ந்து காலை 9.11 மணிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார்.

ஜனாதிபதியின் உரையினைத் தொடர்ந்து முப்படையினர் பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதைகள் இடம்பெறும்.

இந்த அணிவகுப்பில் இலங்கை தரைப் படைச் சேர்ந்த ஆயிரத்து 500 படையினரும், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிசைச் சேர்ந்த தலா 500 பேரும் சிவில் பாதுகாப்பு படையினர் 300 பேரும், இளைஞர் படையினர் 300 பேரும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த 325 பேரும் பங்கேற்பர்.

அந்த அணிவகுப்பு மரியாதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதன் பின்னர் ஒன்பது மாகாணங்களையும் பிரதிநிதிப்படுத்தும் வகையில் கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும்.

இச் சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உள்ளிட்ட 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட சிறப்பு அதிதிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

யுத்தம் நிறைவு கொண்டுவரப்பட்டதன் பின்னர் கொழும்புக்கு வெளியே கண்டி, கதிர்காமம் மற்றும் அனுராதபுரம் ஆகிய நகரங்களில் சுதந்திர தினத்திற்கான தேசிய வைபவம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (எ -11)


# மரண அறிவித்தல்

## நல்லதம்பி செல்லத்துரை



(இளைப்பாறிய நீதிமன்ற ஊழியர்)

தையிட்டி வடக்கு காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி செல்லத்துரை 03.02.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் மாரிமுத்துவின் அன்பு மருமகனும், காலம்சென்ற தங்கமலரின் அன்புக் கணவரும், அரியானந்தம் (சுகாதாரத் திணைக்களம் யாழ்ப்பாணம்), ஜீவானந்தம் ( தெ.ப.நோ.கூ. சங்கம்), தயானந்தன் (ராஜா மில்-கோண்டாவில்) , ஜெயானந்தன் (உயர் நீதிமன்றம்-யாழ்ப்பாணம்),அஜந்தா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ரஞ்ஜினி (சமுர்த்தி வங்கி-அளவெட்டி), சாரதா (ஆசிரியை-குளமங்கால் ஆர்.சி.யூ), விஜயகௌரி (ஆசிரியை-யா/ ஏழாலை சிறிமுருகன் வித்தியாசாலை), கவிதா (ஆசிரியை- யா/ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலை), சுதர்சன் (தபால் ஊழியர்-சுழிபுரம்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,

ஆனந்தசேயோன், லோஜிதன், சுபங்கரி, டிபானிக்கா, கருனிக்கா, கஜானிக்கா, அபிஷன், கோபிகா ஆகியோரின் அன்புப் பேரனும்,

காலம்சென்றவர்களான பொன்னுத்துரை, நடராஜா ஆகியோரின் அன்பு சகோதரனும், சிங்கராசா, நடராசா, யோகராசா, தர்மராசா, மல்லிகாமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று 04.02.2013 பி.ப 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுவினி,
இணுவில் மேற்கு, இணுவில்

தகவல்:
குடும்பத்தினர்.

(1652)



# மரண அறிவித்தல்

## சதாசிவம் இளையதம்பி



ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் இளையதம்பி (02.02.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் பத்தமேனியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிங்கராசா-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், வைரவப்பிள்ளை, முத்துப்பிள்ளை, தங்கம் ஆகியோரின் சகோதரனும் துரையப்பா, காலஞ்சென்றவர்களான நாகம்மா, தங்கம்மா மற்றும் சற்குணம், மகேஸ்வரி (கனடா), செல்வராசா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், குணரத்தினம் (கனடா) இராசரத்தினம் (கனடா) பரமேஸ்வரி, சிவனேஸ்வரி, லோகேஸ்வரி (கனடா), ஜெயரத்தினம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவமணி (கனடா), லிங்கேஸ்வரி (கனடா), சி.கந்தசாமி, வ.கந்தசாமி, கிருஸ்ணலிங்கம் (கனடா), லீலாவதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், சாரங்கன் (கனடா), அருள்நங்கை (சுவிஸ்), நவசீலன், சத்தியசீலன் (பிரான்ஸ்), ஜீவானந்தி, (கனடா), பிரதீப், ஜெயதீப், நிவாதீப், தர்சிகா (கனடா), நிமாலினி, மிரோஜன், நிசாந்தி, நிருஜன், நிரூபா, தனுஷா (கனடா), சுரம்மியா, ஜெவின், பிரவின் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (05.02.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வங்கி வீதி, ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(1651)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு எதிரான ஆதார...

ஈடுபட்டுவருகிறது. அத்துடன் பொது எதிர்க் கட்சிகளின் கலந்துரையாடல்களில் இது தொடர்பில் மேலும் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்ப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் இலங்கை அரசின் நடவடிக்கைகள் எந்த அளவில் இருக்கின்றன என்பதனை ஆராய இலங்கை வரும் சர்வதேச பிரதிநிதி கள் அரசுக்கு நற்சான்றிதழை வழங்குவதையே அவதானிக்க முடிகின்றது.

ஆனால், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தும் செயற்திட்டத்தில் அரசின் காலம் கடத்தும் நடவடிக்கைகளை அவர்கள் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. ஆனால் நாட்டின் உண்மை நிலைவரத்தை சர்வதேசத்திற்கு தெளிவுபடுத்தும் நோக்கிலேயே ஐ.நா மனித வுரிமைப் பேரவை கூட்டத்தொடரில் இந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான நடவடிக் கைகள் எடுக்கப்படுகின்றன என பொது எதிர்க் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை ஜெனிவா கூட்டத்தொடரில் இலங் கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவிருக்கும் பிரேரணைக்கு வலுச்சேர்க்கும் வகையில் இந்த அறிக்கை அமையும் என் றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.(எ-8)

# கடலில் தத்தளித்த...

முறபட்டிருக்கலாம் என கடற்படையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த 10 நாட்களாக ஒலுவில் கடல் பிரதேசத்தில் 50 மைல்களுக்கு அப் பால் தத்தளித்துக் கொண்டிருந்த வேளையிலே கடற் படையினரால் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

இவர்களில் உடல் நலம்பாதிக்கப்பட்ட சிலர் அக்கரைப்பற்று அரசாங்க மருத்துவமனை யில் சிகிச் சை பெற்று வருகின்றனர்.

இவர்கள் பயணித்த படகு கடந்த டிசம்பர் மாதம் 26ஆம் திகதி பங்களாதேஷிலிருந்து புறப்பட்டு, 28ஆம் திகதி பர்மாவிலும் பயணி களை ஏற்றிக்கொண்டு தாய்லாந்து ஊடாக பயணித்தவேளை, அந்நாட்டு கடற்படையினரால் தாக்கப்பட்டு அவர்களின் உடைமை கள் பறிக் கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவர்களை நீதிமன்றத்தில் முன் நிறுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-8)


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரியில்
இருந்து 500 Mற்குள் கண்டி
வீதியில் A9 இருந்து 50 M
இற்குள் 2 பரப்புக் காணி
வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0756497313
(1650)

**NEC** பருத்தித்துறை வீதி, ஆனைபந்தி, யாழ்.
**A/L DAY CLASS**
கலை, வர்த்தகம்
ஆரம்பம்: 05.02.2013
செவ்வாய் காலை 7 மணி
(சி-2330)

**BEACON**
யாழ்.நகர்
A/L 2013 Day
வர்த்தகப் பிரிவு
கணக்கீடு R.சுகிர்தன்
பொருளியல் K.பிரதீபன்
வணிகக் கல்வி K.செந்தூரன்
ஆரம்பம்: 06.02.2013 பி.ப 3 மணி
(சி-2330)

**தனியார் சிற்றூர்தி உரிமையாளர் சங்கம்**
அராலி



**வாழ்க வளமுடன்**
Best Wishes

கடந்த பத்து ஆண்டுகளாக யாழ்.பிராந்திய கூட்டி ைணக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவராகவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகவும் கடந்த மூன்று ஆண்டுகளாக வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்க தலைவராகவும் சேவையாற்றி தற்போது இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள

**திரு.பொன்னுத்துரை கெங்காதரன்**

அவர்கள் மேன்மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று
வளமுடனும் சிறப்புடனும் வாழ பேருவகையுடன் வாழ்த்தி நிற்கும்

உரிமையாளர்கள், சாரதி, நடத்துனர்கள்,
சிற்றூர்தி சேவை சங்கம்,
அராலி.
(1647)



Digital **இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(C-2332)

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062


# மரண அறிவித்தல்கள்

## நடராசா அருணாசலம்



யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் நாமகள் லேன், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா அருணாசலம் 02.02.2013 சனிக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகாலக்சுமியின் சகோதரனும் காலஞ்சென்ற இரத்தினகுமார், அருணகுமார் (அருணா U.K), ராஜ்குமார் (ராஜ்-கனடா), நந்தகுமார் (U.K), நிமலகுமார் (U.K) ஆகியோரின் அன்புத்தந்தையும், தபோதினி (U.K), மேகலா (கனடா), குமுதினி (U.K), தர்சினி (U.K) ஆகியோரின மாமனாரும், ஜனனி, கஜானன், வினுசா, விதுசன், மகிச கனிசா, ஸ்ரீத்திக் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.02.2013 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: 1) ராஜ் *(கனடா)*
197, LA ROCCA AVE
WOODBRIDGE ONT
L4H2M3
CANADA. *T.P.:* 0019056537501.

2) மதி
0777046628

(1649)

## திருமதி இராஜகோபால் பரமேஸ்வரி (கிச்சி அக்கா)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் அல்வாய் மேற்கு திக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜகோபால் பரமேஸ்வரி (கிச்சி அக்கா) நேற்று (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ் சென்ற இராஜகோபால் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராஜமோகன், இராஜசீலன் (ஆசிரிய ஆலோசகர் - வடமராட்சி கல்வி வலயம்), ரஜனி (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்- பிராந்திய சுகாதார நிலையம் - வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் உலகேஸ்வரி, பெரியதம்பி, காலஞ் சென்றவர்களான ஜெயசோதி, கமலரேகா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவஞானம் (பிரதிச் சுங்க அத்தியட்சகர்), ஜமுனா (பிரதிக் கல்விப் பணிப் பாளர் - வடமராட்சி கல்வி வலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் அம்சவி யின் அன்பு அம்மம்மாவும் அக்சானின் ஆசை அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04.02.2013 திங்கட்கிழமை பி.ப ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: இ.இராஜசீலன் *(மகன்)*
வறுணாவளை, திக்கம்.
0776010674
(சி-2334)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.